# அறிவுத் தேடல்

# வர்த்தகப்பிரிவு

க.பொ.த. (உ/த) - வர்த்தகப்பிரிவு சார்ந்த மாதாந்த சஞ்சிகை

பல்கலைக்கழக பேராசிரியர்கள், கலாநிதிகள், சிரேஷ்ட்ட விரிவுரையாளர்களின் ஆக்கங்களை உள்ளடக்கி வெளிவரும் இலங்கையின் முதல் மாதாந்த வணிக சஞ்சிகை

**Rs. 105/=**




அறிவு பதிப்பகம்


27 இதழ்
2012 செப்டம்பர்
ISSN-2012-6336


The MCQ
Quiz Bank
இம்முறை
110
வினாக்கள்

## இவ்விதழில் உள்ளே...


**வணிகக்கல்வித் தேடல்**

சந்தை துண்டமாக்கல்
- பேராசிரியர் ஜகத் பண்டாரநாயக்க

கடனட்டை, வரவட்டை
- சிரேஷ்ட்ட விரிவுரையாளர் ஜி. ஜி. மெத்தானந்த

ஆசிரியர் தேடல்கள்

**பொருளியல் தேடல்**

பொருளாதார வளர்ச்சி
- கலாநிதி மு. கணேசமூர்த்தி

பொருளியலுக்கான அறிமுகம்
- கலாநிதி ந. ரவீந்திரகுமாரன்

உற்பத்தியாளர் மிகை
- சிரேஷ்ட்ட விரிவுரையாளர் காமினி வீரசிங்க

VICEGUIDE

ECON BITZ

**கணக்கீட்டுத் தேடல்**

ec way


ACRA CIMA Chartered Institute of Management Accountants


AWAIT...!
THE LAUNCH OF
Our New Website
www.arivuththedal.com

Maximum Retail Price Rs. 105/=
ISSN - 2012 - 6336
2012 - 6336

Register with CMA for a Professional Qualification in Management Accounting with Pending A/L results

Students with such results can sit for the Foundation Level Examination in May 2013.

For any further details:
Tel. : 2506391, 2507087
email : info@cma-srilanka.org
web : www.cma-srilanka.org


**Why choose CMA?**

- Cost effective
- International Recognition
- Completion of all stages within 2-3 yrs years
- Degree Pathway
- MBA at the PIM (Univ. of Sri J'pura)
- Recognized by CGA Canada, CPA Australia, ACCA UK.

CMA Institute of Certified Management Accountants of Sri Lanka



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A·Sajeevan (08)

# இணையத்தளம் கல்விக்காக பயன்பட்டால் என்ன?

இணையத்தளம் என்பது கல்விக்கான ஒரு தேடுதல்த் தளமாக உருவாகியது எனலாம். அதாவது இணையம் என்றால் ஏதேனும் ஒரு விடயத்தை இணைத்தலாகவே இது பொருள்படுகிறது. அதாவது அறிவினை வளர்த்துக் கொள்ளக்கூடிய வகையில் எமது சிந்தனை தளிர்களை துளிர்க்கச் செய்வதற்குமான எண்ணற்ற தகவல்களை தன்னகத்தே உள்ளடக்கி காணப்படும் ஒப்பற்ற கலைக்களஞ்சியமாக இணையம் காணப்படுகின்றது. இன்று எந்தவோரு விடயத்திற்கும் விடை தேடக்கூடிய வழிமுறை இணையத்தில்க் காணப்படுகின்றது. முன்பெல்லாம் ஒரு குறிப்பிட்ட விடயத்தினைப் பற்றி தெரிய வேண்டுமெனில் ஒரு நூலகத்திற்கு சென்று குறிப்பிட்ட நூலினை தேடிப்பெற்று இவ்விடயம் தொடர்பில் தெளிவடைவதுண்டு. ஆனால் இன்று இருந்த இடத்தில் இருந்தவாறே எந்தவொரு விடயத்தையும் தேடிப்பெறக்கூடிய வாய்ப்பு காணப்படுகின்றது. எனவே இணையத்தை பல்லாயிரக்கணக்கான நூல்களின் பெட்டகம் என ஓரே வசனத்தில் குறிப்பிடலாம்.

இன்றைய நிலையில் உயர்தர வகுப்பில் கல்வி கற்கின்ற பெருமளவான மாணவர்கள் இணையத்தை பயன்படுத்தாமலில்லை. தமது நாளாந்த நடவடிக்கையில் இணையத்தள பயன்பாட்டுக்கென குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்குகின்றனர். இது உண்மையில் வரவேற்கத்தக்க ஒரு விடயமே ஆகும். ஆயினும் இங்கு சில முக்கிய வினாக்கள் எமக்குள் எழுகின்றன. உண்மையில் இணையம் மேற்குறிப்பிட்டவாறு பல்வேறு நன்மைகளை கொண்டிருந்தாலும் அதே அளவில் தீமைகளையும் கொண்டிருக்கின்றன. உண்மையில் இன்றையநிலையில் சமூகவலைத்தளங்களிலும், பொழுதுபோக்கு இணையத்தளங்களிலும் அதிகளவு நேரத்தை செலவழிப்பது ஆரோக்கியமானதல்ல.

ஒரு போட்டிப்பரீட்சைக்கு தயாராகின்ற மாணவர்கள் சிறப்பாக தம்மை தயார்ப்படுத்த வேண்டிய தேவை இருக்கின்றது. குறிப்பாக வர்த்தகத்துறையில் பயிலுகின்ற மாணவர்கள் தம்மை சிறபாக இற்றைப்படுத்த வேண்டிய தேவை இருக்கின்றது. இதற்கு மாணவர்கள் Wikipedia, Answers.com போன்ற இணையத்தளங்களை பயன்படுத்த முடியும். ஆனால் இவற்றில் பாடவிதானத்திற்கு ஏற்றவாறு தொகுக்கப்பட்ட விடயங்களை பெறவியலாது. மேலும் இங்கு மொழியும் ஒரு பிரதான தடையாக அமையும்.

இத்தகைய சவால்களை சற்றேனும் குறைக்க எம்மாலியன்ற முயற்சியே அறிவுத்தேடல் இணையத்தளமாகும். இதுவரை காலமும் 27 இதழ்களினூடாக எழுத்துரு சஞ்சிகையாக வர்த்தகப்பிரிவு ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் வழிகாட்டலை வழங்கிய அறிவுத்தேடல் சஞ்சிகையின் மற்றுமோரு பரிணாமமே அறிவுத்தேடல் இணையத்தளமாகும். இதுவரையில் பலதேர்வு வினாக்களையும் அதே நேரம் பாடவிளக்கங்களையோ முழுமையாக உள்ளடக்கிய முழுமையான இணையத்தளம் இலங்கையில் இருந்திருக்கவில்லை. முதன்முதலில் இத்தகைய இணையத்தளமொன்றை உருவாக்கிய பெருமை அறிவுத்தேடலையே சாரும்.

இணையத்தளம் ஒன்றை ஏன் கட்டியெழுப்ப வேண்டும் என ஒரு வினா தொடுக்கப்படுமாயின் இன்றைய மாணவர் எத்தினையோ மணித்தியாலங்கள் தமது நேரத்தை சமூக வலைத்தளங்களிலும், பொழுதுபோக்கு இணையத்தளங்களிலும் செலவிடுகின்றனர். இவ்வாறான நடவடிக்கைகளுக்கு இடைநடுவேயேனும் ஒரு இணையத்தளம் அவர்களது உயர்தரக் கல்விக்கு உதவுவதாக இருக்க வேண்டும் என்பதே எமது அவா.

**இணையம் கல்விக்காக**

இதழாசிரியர்,
பா.பானுசந்தர்

Editorial


**இதழாசிரியர்**
பா. பானுசந்தர்
0719 494 227

**பிரதம பதிப்பாசிரியர்**
ச. சிவபாஸ்கரன்
0777 747 245

**திட்ட ஆலோசகர்**
இரா. பிரவிந்த்

**பதிப்பகம்**
அறிவுப்பதிப்பகம்
இல.3, சென். கில்டாஸ் ஒழுங்கை,
கொழும்பு - 03.
0114 515 253

**கணனி வடிவமைப்பு**
M. சுகந்த
0773 914 995

**புத்தக வடிவமைப்பு**
ADAH CREATIVE
# 17/1, Singhe Rd, Mabola, Wattala.
web : www.adahcreative.com
Shan : 0773 926 306
Suga : 0773 914 995

**அச்சகம்**
வீமாஸ் அச்சகம்
இல. 82, ஸ்ரீ ரட்ணஜோதி
மாவத்தை, கொழும்பு - 13.
தொ.இல. 0112 431 588


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் ஜகத்பண்டார நாயக்க
Visiting Professor
Scholl of Business Studies
Algonquin College - Canada



**சென்ற இதழில் பின்வரும் விடயங்கள் பற்றி கலந்துரையாடினோம்.**

* இலக்கு சந்தைப்படுத்தலின் மூன்று கட்டங்கள்
* சந்தை துண்டாக்கலின் நான்கு மட்டங்கள்
* நுகர்வோர் சந்தையின் துண்டமாக்கலின் துண்டமாக்கல் காரணிகள்

**இம்முறை இலக்கு சந்தைபடுத்தல் (Targetting) மற்றும் நிலைப்படுத்தல் (Positioning) என்பவை தொடர்பிலும் சந்தைப்படுத்தல் கலவை பற்றியும் அவதானிப்போம்.**

### இலக்கு சந்தையாக்கல் (Market Targeting)

சந்தை துண்டமாக்கிய பிறகு அவ்வவ் துண்டங்களில் காணப்படும் சந்தர்ப்பங்களை இணங்கண்டு (Opporunities) அவற்றை தனித்தனியாக மதிப்பீடு செய்து எந்த துண்டத்தை அல்லது துண்டங்களை இலக்கு வைத்தல் என்பதை தீர்மானிக்க வேண்டும்.

### சந்தை துண்ட மதிப்பீடு (Evaluating) - Marketing Segments

துண்டங்களை மதிப்பீடு செய்யும் போது அடிப்படையாக மூன்று காரணிகளை அவதானித்தல் வேண்டும்.

01. சந்தை துண்டத்தின் அளவு மற்றும் வளர்ச்சி - Segment Size and growth

02. துண்டத்தின் கட்டமைப்புசார் கவர்ச்சி - Segment Structural Attractiveness

03. நிறுவனத்தின் குறிக்கோள்களும் மற்றும் வளங்களும் - Company Objectives and Resources

#### சந்தை துண்டத்தின் அளவு மற்றும் வளர்ச்சி

துண்டத்தில் காணப்படும் தற்கால விற்பனை எதிர்கால விற்பனை வளர்ச்சி வீதம் மற்றும் அளவு என்பவை தொடர்பில் தகவல்களை திரட்டி, பகுப்பாய்வு செய்து அளவு மற்றும் வளர்ச்சி தொடர்பில் சரியாக விளங்கி கொள்ளல் வேண்டும்.

#### கட்டமைப்பு மற்றும் கவர்ச்சி

துண்டத்தினுள் காணப்படும் மற்றும் காணப்படக்கூடிய போட்டியாளரின் தன்மை, நுகர்வோரின் கொள்வனவு சக்தி, பதிலீட்டுப்பொருட்களின் உற்பத்தியாளரின் பலத்தினையும் விளங்கி கொள்ளுதல் வேண்டும்.

#### நிறுவனத்தின் குறிக்கோளும் வளங்களும்

நிறுவனத்தின் நீண்டகால இலக்குகள், குறிக்கோள்கள் அவற்றை அடைய நிறுவனத்தில் காணப்படும் பௌதீக, நிதி வளன்களை ஒப்பு நோக்குதல் வேண்டும்.

### சரியான சந்தை துண்டத்தை தெரிவு செய்தல் (Selecting Market Segments)

துண்டங்களை மதிப்பீடு செய்த பின்பு அவற்றுள் ஒன்றை அல்லது சிலவற்றை தெரிவு செய்ய வேண்டும் என்பதை நிறுவன முகாமையாளர் தீர்மானிப்பர். அவ்வாறு தெரிவு செய்யப்படும் துண்டங்கள் அல்லது துண்டம் இலக்கு சந்தை தெரிவு (Tarket Market Selection) எனப்படுகின்றது. அதாவது "நிறுவனம் தமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவைகளை வழங்க வேண்டிய தேவைகளைக் கொண்ட நுகர்வோர் தொகுதியே இதுவாகும்.

"A Tarket market consists a set of buyers who share common needs or characteristics that company decides to serve"

இங்கு நிறுவனத்திற்கு கீழ்வரும் சந்தையை உள்ளடக்கும் உபாய வழிகள் 3உம் காணப்படுகின்றன.

01. வேறுப்படுத்தப்படாத சந்தைப்படுத்தல் உபாயம் - Undifferentieted Marketing Strategy

02. வேறுப்படுத்தப்பட்ட சந்தை உபாயம் - Differentiated Marketing Strategy

03. ஒழுங்கிணைக்கப்பட்ட சந்தை உபாயம் - Concentrated Markering Strategy

**வேறுபடுத்தப்படாத உபாயம்**

இங்கு சந்தை துண்டத்தை மறந்து ஒரே சந்தைப்படுத்தல் கலவையை மொத்த சந்தைக்கும் வழங்குதல். இங்கு வாடிக்கையாளரின் வேறுபாடுகள் கருத்திற்கொள்ளப்படாது அவர்களின் பொதுத்தேவை கருத்திற்கொண்டு சந்தைப்படுத்தல் கலவையை வழங்குதல் ஆகும்.

Marketing Mix
சந்தை கலவை → ஒட்டுமொத்த சந்தை

**வேறுப்படுத்திய உபாயம்**

இங்கு சில சந்தை துண்டங்கள் தெரிவு செய்யப்பட்டு அவற்றை மையப்படுத்தி அவ்வவ் துண்டத்திற்கு ஏற்றவாறு வேறு வேறான சந்தைப்படுத்தல் கலவையை வழங்குதல் ஆகும்.

| | |
|---|---|
| சந்தைப்படுத்தல் கலவை I | துண்டம் I |
| சந்தைப்படுத்தல் கலவை II | துண்டம் II |
| சந்தைப்படுத்தல் கலவை III | துண்டம் III |

**ஒன்றிணைக்கப்பட்ட உபாயம்**

இங்கு சில சந்தை துண்டங்கள் தெரிவு செய்யப்பட்டு அவை அனைத்தும் தொடர்பிலும் ஒரே சந்தைப்படுத்தல் கலவையை பயன்படுத்தல். இது வரையறுக்கப்பட்ட வளங்களை கொண்ட வணிகங்களுக்கு பொருத்தமானது.

சந்தைப்படுத்தல் கலவை → துண்டம் I, துண்டம் II, துண்டம் III

**நிலைப்படுத்தல் Positioning**

எந்த சந்தை துண்டத்தினுள் நுழைவது என்பதை தீர்மானித்தப்பின், நிறுவனம் தமது உற்பத்தி தொடர்பில் குறிப்பிட்ட சந்தை பண்டத்தினுள் எத்தகைய நிலையினை (Position) பெற வேண்டும் என்பதை தீர்மானிக்க வேண்டும்.

போட்டி பொருட்களோடு ஒப்பிடும் போது தமது உற்பத்தி தொடர்பில் நுகர்வோர் மனதில் எத்தகை நிலை (இடம்) அல்லது பொருள் தொடர்பில் நேரான சிந்தனையை உருவாக்கல் நிலைப்படுத்தல் ஆகும்.

இங்கு குறிப்பிட்ட பொருளின் முக்கியமான பண்புகள் நுகர்வோரால் அவதானிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமொன்றினூடாக நிலைப்படுத்தலை விளக்குதல் சிறந்தது.

சன்லைட் சவர்க்காரமானது இலக்குசந்தையினுள் வாடிக்கையாளர் மத்தியில் "பளிச்சிடும் வெண்மையைத்தரும் சலவைக்கான சவர்க்காரம்" என்ற கருத்து காணப்படுகின்றது.

இதனை மோட்டார் கார் சந்தையில் மிகத் தெளிவாக காணமுடியும்.

**உதாரணம் :-**

01. Toyata Tercel வகை கார் ஒரு சிக்கனமான கார் என்ற வகையிலேயே நிலைப்படுத்தப்பட்டுள்ளது. (A Economicy Car)
02. Mercedes Benz வகை கார் ஒரு சொகுசு கார் என்ற வகையிலேயே நிலைப்படுத்தப்பட்டுள்ளது. (A - Luxary Car)
03. Volvo வகை கார் ஒரு பாதுகாப்பான கார் என்ற வகையில் நிலைப்படுத்தப்பட்டுள்ளது. (A Safety Car)
04. BMW வகை கார் ஒரு செயற்றிறன்மிக்க கார் என்ற வகையில் நிலைப்படுத்தப்பட்டுள்ளது. (A Performance Car)

மோட்டார் வாகனங்களை கொள்வனவு செய்து பயன்படுத்தும் வாடிக்கையாளர் மனதில் மேற்கூறிய நிலையினை ஏற்படுத்த மோட்டார் கார் கம்பனிகள் முயற்சிக்கின்றன. நிலைப்படுத்தல் என்ற எண்ணக்கரு உண்மையில் கோட்பாடுகளுக்கிடையிலான யுத்தம் ஆகும். (A Battle of Concepts)

இதன் குறிக்கோள் வியாபாரக்குறியை வாடிக்கையாளர் மனதில் பதியச்செய்தல் ஆகும். இவ்வாறு மேற்கொள்ளும் போது வாடிக்கையாளர் பொருள் தொடர்பில் உயர்ந்த எண்ணத்தை கொண்டிருப்பார்.


**சந்தைப்படுத்தல் கலவையை விருத்தி செய்தல் - Developing the marketing mix**

சந்தையை துண்டமாக்கி, இலக்கு சந்தையை தெரிவு செய்த பின், உற்பத்திக்கு பொருத்தமான நிலையினை உருவாக்கியப்பின் அடுத்த படிமுறை சந்தைக்கலவையை (Marketing mix) விருத்தி செய்தல் ஆகும்.

வணிக நிறுவனமொன்றில் சாதாரணமாக பின்வரும் நான்கு (4Ps) கொண்டிருக்கும்.

உற்பத்தி = Product
விலை = Price
இடம் = Place
மேம்படுத்தல் = Promotion

**சந்தை துண்டகத்தின் இப்பிரதான நான்கு மாறிகளுடன் தொடர்புடைய பல்வேறு எண்ணக்கருக்களையும் கீழ்வரும் வரைபடத்தின் மூலம் விளக்கலாம்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உற்பத்தி - Product**

சந்தைப்படுத்தல் கலவையின் அடிப்படை பிரிவு உற்பத்தி ஆகும். உற்பத்தியின் கீழ் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்படும்.

உற்பத்தி + வியாபாரக்குறி + வடிவமைப்பு + பொதி + சேவைகள் + தரம் + பொறுப்புகள்

சந்தைப்படுத்தலின் படி உற்பத்தி என்பது "தேவை அல்லது விருப்பத்தை பூர்த்தி செய்யும் நோக்கில் பரிமாற்றத்துக்காக சந்தைக்கு கொண்டுவரப்படும் எவையும் ஆகும்.

பிரபல்யமான உற்பத்திகள் 3இணை பெயரிடுமாறு உங்களை கேட்டால், நீங்கள் பாண், மோட்டார் வாகனம், சவர்க்காரம் என நீங்கள் கூறுவதாக கொள்வோம். பெரும்பாலானோர் ஒரு கிரிக்கட் போட்டி அல்லது தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றை உற்பத்தியாக கூறுவதில்லை. காரணம் பெரும்பாலானோர் உற்பத்தி என்பதை தொட்டுணரக்கூடியதாகவும், கட்புலனாகுபவையாகவும் காணப்படுபவை மட்டுமே எண்ணுகின்றனர். ஆயினும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் போன்றவை எமக்கு பொழுது போக்கை தருவதோடு, எமது மகிழ்வூட்டுகின்றது. இவற்றை வேறுபடுத்த முடியாது. ஆயினும் கட்புலனாகும் உற்பத்திகளைப்போன்று இவற்றையும் உற்பத்திகளாக கொள்ள வேண்டும். பரந்த வகையில் :- நபர்கள் (People), இடங்கள் (Places), எண்ணங்கள் (Ideas), ஒழுங்கமைப்புக்கள் (Organization) என்பன உற்பத்தியில் உள்ளடக்கப்படும்.

**விலை - Price**

உற்பத்தியொன்றை பெற்றுக்கொள்வதற்கு செலுத்தும் பணப்பெறுமதி விலை எனப்படும். இதுவும் ஒரு பிரதான அடிப்படை பாகம் ஆகும். குறிப்பிட்ட உற்பத்தியை உற்பத்தி செய்ததன் பின்பு நிறுவனத்தால் தீர்மானிக்கப்படவேண்டிய மிக முக்கிய விடயம் விலை ஆகும். இதனை மேற்கொள்ளல் கடினமான விடயமாகும். காரணம் நிறுவனத்திற்கு வருமானத்தை பெற்றுத்தரும் ஒரே உபபிரிவு இதுவே ஆகும். சந்தைப்படுத்தல் கலவையின் ஏனைய 3 பிரிவுகளும் செலவினை ஏற்படுத்துகின்றன. ஆயினும் விலையானது நிறுவனத்திற்கு விற்பனையை ஏற்படுத்துவதோடு, வருமானத்தையும் வழங்குகின்றது. அதே போன்று போட்டியினை விலையிடலின் போது கருத்திற் கொள்ளுதல் வேண்டும். உயர்விலையொன்றை நிர்ணயித்தால் விற்பனை வீழ்ச்சியடையும், குறைந்த விலையை நிர்ணயித்தல் வருமானம், இலாபம் என்பன வீழ்ச்சியடையும்.

விலை என்பதில் ரூபா, சதம் என்பதை விட கழிவுகள், கொடுப்பனவு முறை, பட்டியல்விலை, கொடுப்பனவு விதிகள் என்பன உள்ளாங்கும்.

**இடம் (விநியோகம்) - Place (Distribution)**

இடம் விநியோகத்தையே குறிக்கின்றது. உற்பத்தியாளரிடமிருந்து நுகர்வோருக்கு அசைக்கின்ற (Move) அல்லது வழங்குகின்ற ஒழுங்கமைக்கப்பட்ட வலையமைப்பு (Organized network) இடம் என்பதனுள் உள்ளடக்கப்படும். இவ்வலையமைப்பு சந்தைப்படுத்தல் சங்கிலி (Marketing Channels), விநியோக சங்கிலி (Distribution Channel) என்றும் அழைக்கப்படுகின்றது. ஏனைய சந்தைப்படுத்தல் கலவைப்பிரிவுகளை தீமானிக்க இடம் என்பது நேரடியாக தாக்கம் செலுத்தும்.

உதாரணம் :-

நிறுவனத்தின் விலை பிரதானமாக பாரியளவாக விநியோகத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும். பாரியளவில் (Bulk) விநியோகிக்கும்போது விலை குறைவாக தீமானிக்கப்படும்.

அல்லது

நிறுவனத்தின் விலை பிரதானமாக தரமான மற்றும் நவநாகரீகமான பொருள் அடிப்படையில் தீமானிக்கப்படுமாயின் விநியோக சங்கிலி அதற்கேற்றவகையில் மேற்கொள்ளப்படல் வேண்டும். அது மட்டுமின்றி நிறுவனத்தின் மேம்படுத்தலையும் மேற்கொள்ளும் போதும் இடையீட்டாளர்களின் தேவையை பொறுத்து மேற்கொள்ள வேண்டும்.

இடம் என்பதில் விநியோக வழி, மொத்த சில்லறை வியாபாரம், போக்குவரத்து, களஞ்சியம் ஆகிய விடயங்கள் உள்ளடக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மேம்படுத்தல் - Promotion**

உற்பத்தித்தொடர்பில் இலக்குச்சந்தையில் தொடர்பாடுவதற்கு உரிய தொழிற்பாடுகள் மேம்படுத்தலில் உள்ளடக்கப்படும். மேம்படுத்தல் கலவையில் பின்வருவன உள்ளடக்கப்டும்.

01. விளம்பரபடுத்தல் - Advertising
02. தனியாள் விற்பனை - Personal Selling
03. பகிரப்படுத்தலும், மக்கள் தொடர்பும் - Publicity and Public relation
04. விற்பனை மேம்படுத்தல் - Sales Promotion
05. நேர்சந்தைப்படுத்தல் - Direct Marketing
06. நிகழ்வுகளும் அனுபவங்களும் - Events and Exprience

---

WCMT CAMPUS SRI LANKA

University of Bolton,
Academic Centre Sri Lanka
No. 54, Galle Road, Mount Lavinia
Tel : 0112 727 106
Email : info@wcmtedu.net
Web : www.wcmtedu.net
Hotline : 0777 727 106

இலங்கையில் சர்வதேச பல்கலைக்கழகங்களில் பயிலக்கூடிய மற்றுமொரு வாய்ப்பு உதயமாகிறது. றுஊஆவு கல்லூரியானது டீவுநுஊ ர்னுே பாடநெறியினை கட்டிட பொறியியல், இயந்திர பொறியியல், மின்னியல், மின் பொருளியல் ஆகிய துறைகளுக்காக பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்புக்களை ஏற்படுத்தும் வண்ணம் தமது முழு நேர வகுப்புக்களை ஜுன் 30 ம் திகதியும் பகுதி நேர வகுப்புக்களை ஜு30 ம் திகதியும் ஆரம்பிக்கவுள்ளது. இந்த இரு வருட டீவுநுஊ ர்னுே இனை பெறுவதனூடாக றுஊஆவு கல்லூரினூடாக ஐக்கிய இராச்சியத்தின் ருளைநசளவைல ழக டீழடவழஉ பல்கலைக் கழகத்தில் பொறியியல் பட்டத்தை பெறக்கூடிய வாய்ப்பு கிட்டுகின்றது.

டீழடவழஉ பல்கலைக்கழகமானது ஐக்கிய இராச்சியத்தில் 15 வருடங்களுக்கு மேலதிகமாக சர்வதேச ரீதியான சிறந்த மாணவர் தொகுதியை உருவாக்குவதோடு சிறந்த மனித வளங்களை உலகிற்கு வழங்குகின்றது. இப் பல்கலைக்கழகமானது பிரித்தானிய தர நிறுவனத்தினால் (ஞரயடவைல யுளளரசயஉந யுபநஉல) உயரிய வகையில் அங்கீகரிக்கப்படுவதோடு, இதன் தனித்துவமான கற்பித்தல் முறை, அதாவது அனைத்து நாடுகளிலும் ஒரே விதமான, நேரடியான விரிவுரைகளை நடாத்தி வருகின்றது. இப்பல்கலைக்கழகத்தின் கிளைக் கல்லூரிகள் ஐக்கிய அரபு இராச்சியத்திலும், ஆயஉாநளவநச நகரிலும் அமைந்துள்ளது. மேலும் மாணவர்களுக்கான இலத்திரனியல் மயமான நூலக வசதியினை வழங்கி எண்ணற்ற நூல்களை பெறும் வாய்ப்பினைப் ஏற்படுத்துகின்றது.

றுஊஆவு கல்லூரியானது இலங்கை முதலீட்டு சபையின் (டீழுஐ) அங்கீகாரத்தை பெற்றுள்ள ஒரு அமைப்பாக அதேவேளை சர்வதேச தரம் வாய்ந்த மனித வளங்களை உருவாக்கும் முநுளு நிறுவனத்தின் துணை நிறுவனமாகும். றுஊஆவு கல்லூரியானது டீழடவழஉ பல்கலைக்கழகத்தின் இலங்கையின் பிரதிநிதியாக செயற்படுவதோடு, டீழடவழஉ பல்கலைக்கழகத்தின் ரேடியான கட்டணங்களுக்குச் சமமான வகையில் குறைந்த கட்டணத்தில் பயிலக்கூடிய வாய்ப்பினை ஏற்படுத்துகின்றது.

றுஊஆவு கல்லூரியில் பொறியியல் தொடர்பாக பரந்த பாடநெறிகள் காணப்படுவதோடு சர்வதேச ரீதியான ப்டத்தினை இலகுவாக பெறக்கூடிய வாய்ப்பு ஏற்படுகின்றது. பட்டய பொறியியலாளர் தகமைக்கானதாகவே (ஊாயசவநசநன நுபெiநெநச) கட்டட பொறியியல் பாட நெறியில் புவியியல், நிலப்பரப்பு, ஆய்வு, செயற்திட்டம் தயாரித்தல், நில அளவை ஆகிய பாடப்பரப்புக்களை உள்ளடக்குகின்றது. மின்சாரம் தொடர்பான பொறியியல் டிப்ளோமாவில் வலுச்சக்தி மூலங்கள், சக்திக்கான முறைகள் போன்ற விடயங்களை உள்ளடக்குவதோடு இயந்திரப் பொறியியல் டிப்ளோமாவில் இயக்கவியல். வேப்பவியல் நிகழ்ச்சித்திட்டம் போன்ற பாடப்பரப்புக்கள் உள்ளடக்கப்படுகின்றது.

எமது கல்லூரியில் நவீன ரீதியில் தற்கால பொறியயல்துறை உபகரணங்களையும், மென்பாகத்தினையும் (ளுழகவ றயசநள) கருவிகளையும் கொண்ட வசதியான ஆய்வு கூட வசதிகளை பரித்தானிய தரத்தில் மாணவர் பெற முடியும். மேற்கூறிய பாட நெறிகளின் இறுதி 6 மாதகாலத்தில் அனைத்து மாணவர்களுக்கும் சிறந்த பயிற்சியினை பெற்றுக் கொள்ள பயிலுனராக பல்வேறு நிறுவனங்களில் பணியாற்றக்கூடிய வாய்ப்புக் கிட்டும்.

ஒவ்வொரு பாடங்களும் நிறைவடையும் போது அதற்கான வேலைத்திட்டம் (யுளளபைஅநவெள) மற்றும் பரீட்சைகளை பிரித்தானிய தரத்திற்கேற்ற வகையில் மேற்கொள்ள வேண்டும். உங்களுக்குரிய தகமைச் சான்றிதழ் பிரித்தானிய முன்னளியான கல்வி நிறுவனமான நுனநஒஉநட இனால் வழங்கப்படும். நுனநஒஉநட எலகளாவிய ரீதியில் காணப்படும் பாரிய பரீட்சை பொறிமுறையாக காணப்படுவதோடு ஏறக்குறைய 4 மில்லியன் மாணவர்களை 112 நாடுகளில் கொண்டுள்ளது.

றுஊஆவு கல்லூரியானது தேசிய, சர்வதேச முன்ணணி விரிவுரையாளர்கள் மாணவர்களின் திறனை மேம்படுத்தும் வகையிலான கற்றல் முறையினை பின்பற்றுவதோடு, தற்காலத்திற்குப் பொருத்தமான நடைமுறை அறிவினை வழங்கத்தக்க கற்றல் மூலங்கள் வழங்கப்படுகின்றது. மேலும் கல்லூரியானது குறிப்பான ஆய்வு கூட வசதி, நூலக வசதி மற்றும் முழுவதுமாக றுஜ- குஐ வலையமைப்பையும் ஏற்படுத்தியுள்ளது. இதனூடாக மாணவர்களின் தரமான சித்தியினை உறுதி செய்கின்றமை குறிப்பிடத்தக்கது.

**எமது முகவரி :**
**இல : 54 காலி வீதி கல்கிஸ்ஸ (ஆழரவெ டயஎiநெை)**
**எமது இணையத்தளம் : றறற.றஉஅவநனர.நெவ**
**அழையுங்கள் : 0777727106**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கடனட்டை, வரவட்டை

சிரேஷ்ட்ட விரிவுரையாளர்
G.G. மெத்தானந்த
வணிக முகாமைத்துவப்பீடம்
களனி பல்கலைக்கழகம்

இன்றளவில் கொடுக்கல் வாங்கல்களில் சட்ட ரீதியான பணம் நாணயத்தாள், காசோலை போன்றன பயன்படுத்துவதில் குறைந்து வருவது நீங்கள் அறிந்ததே. இன்று இலத்திரனியல் பணம் பரந்தளவில் பயன்படுத்தப்பட்டு வருவதை காணக்கூடியதாக உள்ளது. இக்கட்டுரையில் இலத்திரனியல் பணம் எந்தளவிற்கு ஒரு கொடுப்பனவு ஊடகமாக பயன்படுத்தப்படுகின்றது என்பதனையும், அவற்றின் தன்மை பற்றியும் கலந்துரையாடப்படுகின்றது. 1970ம் ஆண்டுகளிலேயே கடனட்டையானது முதன்முதலில் பயன்படுத்தப்பட்டது. இலத்திரனியல் பணமானது பிரதானமாக இரு வகைப்படுத்தப்படுகின்றது. நாம் அவற்றை வேறு வேறாக அவதானிப்போம்.

## கடனட்டை (Credit Cards)

பின்னர் செலுத்துகின்ற உடன்பாட்டில் குறிப்பிட்ட பொருட்கள், சேவைகளை தற்காலத்தில் கொள்வனவு செய்வதற்கு பயன்படுத்தக்கூடிய அட்டைகளை கடனட்டை என கூறமுடியும் (Pre approved Credit which can be used for the purchase of items now and payments of them later) இது ஒரு சிறிய பிளாஸ்டிக் அட்டையாகும். கடனட்டையை வழங்குகின்ற வங்கியால்/நிறுவனத்தால் வழங்கப்படுகின்ற உச்ச தொகைக்கு பொருட்கள் சேவைகளை கொள்வனவு செய்ய அல்லது பணத்தை மீளப்பெற முடியும்.

**கடனட்டையோடு தொடர்புடைய தரப்பினர்**

கடனட்டையோடு தொடர்புடைய தரப்பினரை பின்வருமாறு அவதானிப்போம்.

**கடனட்டை உரிமையாளர்**

கொள்வனவு நோக்கில் கடனட்டையை பயன்படுத்தும் வாடிக்கையாளர்

**கடனட்டையை வழங்குகின்ற வங்கி**

கடனட்டையை பயன்படுத்துகின்ற வாடிக்கையாளருக்கு அதனை வழங்கும் வங்கி அல்லது நிதி நிறுவனம் ஆகும். இவ்வட்டையூடாக வங்கி வாடிக்கையாளருக்கு கடன் ஒன்றினை வழங்குவதோடு குறிப்பிட்ட தினத்திற்குள் அத்தொகை செலுத்தப்படாவிடின் அக்குறிப்பிட்ட நட்டத்தை கடனட்டையை விநியோகித்த வங்கி சந்திக்க நேரிடும். கடனட்டையை வழங்குகின்ற வங்கிகளுக்கு உதாரணமாக HSBC, PABC போன்றவற்றை குறிப்பிடலாம்.

**வணிக நிறுவனங்கள்**

கடனட்டை உரிமையாளருக்கு பொருட்களையும், சேவைகளையும் வழங்க கடனட்டையை ஏற்கும் வணிக நிறுவனங்கள்.

## கடனட்டை சங்கம் (Credit Card Association)

கடனட்டை வழங்குகின்ற வங்கிகளின் வலையமைப்பு ஆகும். (A Card association is a network of issuing banks ) கடனட்டை தொடர்பான விதிகளை, உருவாக்கல் கடனட்டை விநியோகிப்பவர் மற்றும் வணிகர்களின் கட்டணங்களை தீர்மானித்தல், போன்ற கருமங்கள் கடனட்டை சங்கங்களினூடாக மேற்கொள்ளப்படும். கடனட்டை சங்கங்களுக்கு உதாரணமாக Visa, Mastercard, American Express என்பனவற்றை குறிப்பிடமுடியும்.

## பெற்றுக்கொள்ளும் வங்கி (Acquiring Bank)

கடனட்டை உரிமையாளருக்கு சந்தைப்படுத்தப்படுகின்ற பொருட்களை சேவைகள் தொடர்பில் வணிகர் சார்பில் கொடுப்பனவுகள் பெற்றுக்கொள்ளும் வங்கியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கடனட்டை இயங்கும் விதம்

கடனட்டையை வழங்குகின்ற நிறுவனம் குறிப்பிட்ட வகையில் கடனட்டை ஒன்றை வழங்குமாயின் அதனை கடனட்டை உரிமையாளர் கடனட்டை ஏற்றுக்கொள்ளும் உரிமையாளரிடம் வழங்கி பொருட்கள் சேவைகளை பெற்றுக்கொள்ளலாம். கடனட்டை ஏற்றுக்கொள்ளுதல் தொடர்பிலும், மறுத்தல் தொடர்பில் வணிகர்கள் பல்வேறு கருத்துக்களை கொண்டிருப்பர். கடனட்டை ஏற்றுக்கொள்ளும் வணிகங்களில் கடனட்டையின் பெயர்கள் வணிகத்தில் காட்சி படுத்தப்பட்டிருக்கும். கடனட்டையை கொடுப்பனவிற்காக வணிகர் பெற்றபின் கடனட்டையின் பயன்பாட்டுத்தன்மை பற்றியும் கடனட்டையில் உரிய கொடுப்பனவை செய்ய போதுமான மீதி இருக்கின்றதா? என்பதை கண்டறிய வேண்டும். இதற்காக இலத்திரனியல் உறுதிபடுத்தல் முறைகள் (Electranic Verification Systems) பயன்படுத்தப்படும்.


இதன்படி வணிகர்கள் மற்றும் வங்கிகளுக்கிடையில் அதாவது வணிகர் சார்பில் கொடுப்பனவை பெற்று கொள்கின்ற வங்கிகளுக்கிடையில் தொடர்பு காணப்படும். வணிகத்தில் காணப்படுகின்ற விற்பனையின் போதான இலத்திரனியல் கொடுப்பனவு முறையினில் (Electronic Funds Transfer at point of Sales) கடனட்டையை செலுத்தும் போது கடனட்டை பின்புறத்தில் காணப்படும் காந்த நிரலில் உள்ள தகவல்கள் கடனட்டை சட்ட ரீதியானதா? என்பதையும் அதில் போதுமான மீதி உள்ளதா? என்பதையும் கண்டறியும் சில கொடுக்கல் வாங்கல்களில் கடனட்டையை வணிகரிடம் வழங்க வேண்டிய அவசியமில்லை. இதற்கான உதாரணமாக இலத்திரனியல் வணிகத்தை குறிப்பிட முடியும். இலத்திரனியல் வணிகத்தில் இணையத்தளத்தினூடாக கடனட்டை பயன்படுத்தி கொடுப்பனவை மேற்கொள்ள வேண்டுமாயின் அங்கு காந்த மை நிரலில் உள்ள இரகசிய இலக்கம், காலாவதி திகதி, முகவரி என்பனவற்றை குறிப்பிட வேண்டும்.

இவ்வாறு கடனட்டைகளை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் அனைத்து கொடுக்கல் வாங்கல்களையும் விபரமான உள்ளடக்கிய கூற்று வங்கியினால் மாதாமாதம் வாடிக்கையாளருக்கு வழங்கப்படும். செலுத்த வேண்டிய மொத்தத்தொகை, செலுத்த வேண்டிய திகதி போன்ற விடயங்கள் உள்ளடக்கப்படும். இதன்படி குறிப்பிட்ட தினத்தில் இழிவளவு கட்டணத்தையோ, முழுத்தொகையையோ செலுத்துதல் வேண்டும். இழிவளவு கட்டணம் மாத்திரம் செலுத்தும் பட்சத்தில் வட்டியொனறு அறவிடப்படும். மேலும் குறிப்பிட்ட தினத்திற்கு பிறகு செலுத்தினால் தாமத கட்டணமொன்றும் அறவிடப்படும்.

### கடனட்டையில் உள்ளடக்கப்படும் விடயங்கள்

கடனட்டை என்பது ஒரு பிளாஸ்டிக் அட்டையென நாம் ஏற்கனவே அவதானித்தோம். இதன் இருபுறத்திலும் தகவல்கள் உள்ளடங்கியிருக்கும். கடனட்டை வகைக்கேற்றவாறு அதில் உள்ளடக்கப்படும் விடயங்களில் சில மாற்றங்கள் காணப்படலாம். கடனட்டையின் முற்பக்கத்தில் காணப்படுகின்ற விடயங்கள் பின்வருமாறு

* விநியோகிக்கும் வங்கியின் இலட்சினை
* முக்கோண அடையாளம் (Hologram)
* கடனட்டை இலக்கம் (Credit Card Number)
* கடனட்டை வியாபார சின்னம் (Credit Brand Logo)
* காலாவதி திகதி (Expiration Date)
* கடனட்டை உரிமையாளரின் பெயர் (Card Holder Name)




**கடனட்டையின் பின்புறத்தில் இடம்பெறும் தகவல்கள்**

* காந்த நிரல் (Magnatic Stripe)
* கையொப்ப நிரல் (Signature Stripe)
* கடனட்டை இரகசிய பாதுகாப்பு குறியீடு (Card Security Code)

**கடனட்டை தொடர்பான கட்டணங்கள்**

கடனட்டை பாவனை அதிகரித்த செலவீனத்தை உண்டு பண்ணும் என்ற கருத்து நிலவுகிறது. இதற்கான காரணம் கடனட்டை தொடர்பில் பல்வேறு கட்டணங்கள் அறவிடப்படுதல் ஆகும். எவ்வாறெனினும் சில கட்டணங்களை முறையாக, ஒழுங்காக கடனட்டையை பயன்படுத்தாத பட்சத்திலேயே செலுத்த வேண்டி ஏற்படும். கடனட்டையோடு தொடர்புடைய கட்டணங்கள் சில கீழே தரப்படுகின்றன.

* வருடாந்த அல்லது மாதாந்த கட்டணம் (Annual or monthly fee)
* விண்ணப்பக்கட்டணம் (Application Processing Fee)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* காசு முற்பண கட்டணம் (Cash Advance Fee)
* தாமத கட்டணம் (Late Fee)
* கடன் எல்லையை மீறுதலுக்கான கட்டணம் (Over the Credit limit Fee)

## வட்டியற்ற காலம் (Grace Period)

கடனட்டையில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற மீதித்தொகைக்கு வட்டி செலுத்த தேவையற்ற காலமே வட்டியற்ற காலம் (Grace Period) எனப்படும். அதாவது கடனட்டை வழங்கப்படும் தினத்திலிருந்து குறிப்பிட்ட தினம் வரை வட்டி அறவிடப்படமாட்டாது. அக்காலத்தை தாண்டியும் கடன்மீதி எஞ்சியிருக்குமாயின் எஞ்சிய தொகைக்கு வட்டி அறவிடப்படும். சாதாரணமாக இக்காலம் 15-45 நாள் வரையில் வழங்கப்படுவதோடு கடனட்டை வகையையும், வழங்கும் நிறுவனத்தையும் பொறுத்து இது வேறுபடும்.

## இழிவளவு மாதாந்த கட்டணம்

கடனட்டை தொடர்பில் ஒவ்வொரு மாதத்திலும் செலுத்த வேண்டிய இழிவளவு தொகை காணப்படுகின்றது. இது செலுத்த வேண்டிய முழுத்தொகையின் ஒரு குறிப்பிட்ட சதவீதம் ஆகும். இங்கு இழிவளவு மாதாந்த கட்டணத்தை விட முடிந்தவரை கூடிய கட்டணத்தை செலுத்தி செலுத்த வேண்டிய முழுத்தொகையையும் செலுத்தினால் வட்டி செலுத்த வேண்டிய தேவை கிடையாது.

## கனட்டையை பயன்படுத்துவதால் கடனட்டை உரிமையாளர் பெற்றுக்கொள்ளும் நன்மைகள்

* கொடுக்கல் வாங்கல் செய்தல் இலகு :- பணம், காசோலை என்பவற்றை விட பயன்படுத்துவது இலகு
* குறிப்பிட்ட கால எல்லை வரை வட்டியற்ற கடனினை பெறக்கூடியமை
* இணையத்தளத்தினூடாகவோ, தொலைபேசியினூடாகவோ மேற்கொள்ளும் கொள்வனவுக்கான செலுத்தல்களை மேற்கொள்ள முடிதல்.
* வினைத்திறனான கொடுப்பனவு முறை :- சிறிய, பாரிய எத்தொகைகளையும் செலுத்தக் கூடியமை
* ATM ஊடாக பணத்தை பெறக்கூடியமை
* பல்வேறு நன்மைகளை பெறக்கூடியமை :- காப்புறுதி, பல்வேறு விலைக்கழிவு, போனஸ் புள்ளிகள் போன்றவை.

## கடனட்டையை பயன்படுத்துவதால் கடன்டை உரிமையாளருக்கு ஏற்படும் தீமைகள்

* ஏனைய ஊடகங்களை விட கிரயம் அதிகம் :- வட்டி, ஆரம்பக்கட்டணம், வருடாந்த வருமானம் போன்ற பல்வேறு கட்டணங்கள்.
* தாம் தாங்கி கொள்ள முடியாத அளவிற்கு கடன் பெறல்.
* ஊழல், மோசடி நடவடிக்கைகள் ஒப்பீட்டளவில் அதிகம்.
* எல்லா வணிகங்களிலும் கடனட்டை வசதி கிடையாது.
* ஒரு எல்லைவரை மாத்திரமே கடன்தொகையினை பெறமுடியும்.
* ஒழுங்காக பயன்படுத்தாவிடில் கடன் பொறிக்குள் சிக்க வேண்டிய நிலை காணப்படல்.
* கடந்த காலத்தில் பெற்ற கடன்களை மீளச்செலுத்த வேண்டி ஏற்படுவதால் நிகழ்கால நுகர்வு பாதிக்கப்படும்.

## கடனட்டையை பயன்படுத்துவதால் வணிகர் பெற்றுக்கொள்ளும் நன்மைகள்

* கடனட்டை ஏற்றுக்கொள்ளும் வசதி காணப்படின் நிறுவனத்தின் விற்பனை அதிகரிக்கும்.
* வாடிக்கையாளர் மத்தியில் நம்பகத்தன்மை அதிகரிக்கும். இது ஒரு செலவற்ற விளம்பரமாகும்.
* நிறுவனத்தின் காசு பாய்ச்சல் அதிகரிக்கும் :- விற்பனையில் கடனட்டையூடாக உடனடியாக பணம் கிடைப்பதால் காசோலை போன்று காகிப்பதும் வரை காத்திருக்கவோ, பணம் பெறும் வரையில் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை.
* கடனட்டை பல்வேறு பொருட்கள், சேவைகளின் நுகர்வையும் தூண்டும்.
* இலகுவான கொடுக்கல் வாங்கல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* போட்டிக்கு முகங்கொடுக்கக்கூடியமை :- போட்டியாளர் கடனட்டை வசதியை ஏற்படுத்துவராயின் தாமும் அவ்வசதியை ஏற்படுத்த வேண்டும்.
* பாதுகாப்பு தன்மை :- கடனட்டையூடாக பெறுவனவுகளை பெற்றுக்கொள்வது பணம் பெறுவதை விட பாதுகாப்பானது. இங்கு வணிகம் வாடிக்கையாளரின் கடன் செலுத்தும் இயலுமையை பரீட்சிக்க வேண்டியதில்லை.

**கடனட்டையை பயன்படுத்துவதால் வணிகர் பெறும் தீமைகள்**

* கிரயம் அதிகம் :- கடனட்டை பாவனையின் போது குறிப்பிட்ட தரகு கட்டணத்தை செலுத்த வேண்டிய நிலை. இங்கு குறைந்த இலாபத்தை உடைய பொருட்களை கடனட்டையூடாக விற்பனை செய்வது பாதகமானதாகும்.
* EFTPOS இயந்திரத்தை பொருத்த பாரிய தொகையினை செலுத்த வேண்டிய நிலை
* ஊழல், பாதுகாப்பற்ற தன்மை.

## கடனட்டையை சரிவர பயன்படுத்தல்

கடனட்டையை பயன்படுத்துவதன் மூலம் பல்வேறு நன்மைகளை பெற்றுக்கொள்ளமுடியும் எனினும் இதனை சரிவர பயன்படுத்துதல் வேண்டும். கடனட்டையை பயன்படுத்தும் போது பின்வரும் விடயங்களை கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்.

* கடனட்டைக்கான பணம் செலுத்துவதற்கான குறிப்பிட்ட தினத்தில் பணம் செலுத்தப்பட்டுள்ளதா? என்பதை பரிசீலிக்க வேண்டும்.
* கடனட்டை மூலம் மேற்கொள்ளும் எந்தவொரு கொடுக்கல் வாங்கல் தொடர்பிலும், பதிவுகளை வைத்துக்கொள்ள வேண்டும்.
* மாதாந்த கூற்று கிடைத்தவுடன், தமது கழிவுகளுடன் ஒப்பிட வேண்டும்.
* மாதாந்த செலுத்த வேண்டிய முழுத்தொகையையும் செலுத்தல் வேண்டும்.

மேற்கூறிய காரணிகளை கருத்திற்கொண்டால் கடனட்டையை சிறப்பாக அனுகூலமான பயன்படுத்தலாம். அன்றேல் கடனட்டை பயன்படுத்துவதை இடை நடுவே இடைநிறுத்த வேண்டி ஏற்படும்.

## வரவட்டை - Debit Cards

வரவட்டையென்பது வாடிக்கையாளர் தமது கணக்கிலிருந்து பணத்தை மீளம்பெறுவதற்கோ, பொருட்கள், சேவைகளை கொள்வனவினை மேற்கொண்டு அவற்றுக்கான கொடுப்பனவினை மேற்கொள்வதற்கோ வசதியாக வங்கியால் வழங்கப்படுகின்ற இலத்திரனியல் அட்டை ஆகும். (An Card Issued by a bank which allow bank clients access to their account to withdraw cash or pay for goods and servieces)

வரவட்டைகளை பயன்படுத்துவதால் வாடிக்கையாளர் வங்கிக்கு சென்று பணம் மீளப்பெற வேண்டிய அவசியம் கிடையாது. வரவட்டையை ATM இயந்திரத்தில் செலுத்தி பணத்தை மீளப்பெற முடியும். மேலும் பொருட்கள், சேவைகளை கொள்வனவு செய்து கொடுப்பனவிற்காகவும் வரவட்டைகளை பயன்படுத்த முடியும். இதனால் காசோலை பாவனை வீழ்ச்சியடைந்துள்ளது. வரவரட்டைகள் மிக விரைவில் கொடுப்பனவுகளை மேற்கொள்ளக்கூடிய சாதனம் ஆகும்.

**வரவட்டையால் வாடிக்கையாளர் பெறும் நன்மைகள்**

* கடனட்டை பெற சில தகமைகள் வாடிக்கையாளர் கொண்டிருக்க வேண்டும் எனினும், வரவட்டையை இலகுவாக பெற முடியும்.
* தமது வைப்புத்தொகைக்கு மாத்திரமே கொள்வனவு செய்ய்முடியும் என்பதால் கொள்வனவு சிறப்பாக கட்டுப்படுத்தப்படும்.
* காசோலை மூலம கொடுப்பனவு செய்யும் போது வாடிக்கையாளரின் நம்பகத்தன்மையை நிருபிக்க வேண்டும். ஆயினும் வரவட்டையில் அவ்வாறு கிடையாது.
* வரவட்டைக்கு அதிக கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வரவட்டைக்கும், கடனட்டைக்கும் இடையிலான வேறுபாடுகள்**

* கடனட்டையில் பெறப்படுவது ஒரு வகை கடனே ஆகும். ஆயினும் வரவட்டையில் வைப்பில் உள்ள தொகையே பெறப்படுகின்றது.
* கடனட்டை பெறுவதற்கு வைப்பு அவசியமில்லை ஆயினும் வரவட்டை பெற வைப்பு அவசியம்.
* கடனட்டையில் குறிப்பிட்ட காலம் வரை வட்டி செலுத்த வேண்டியதில்லை, வரவட்டையில் இவ்வசதி கிடையாது.
* கடனட்டையில் பணம் பெறக்கூடிய வாய்ப்பு இருந்தாலும் வட்டி செலுத்த நேரிடும், ஆயினும் வைப்புத்தொகை இருந்தால் மாத்திரம் வரவட்டையில் பணம் பெறமுடியும்.
* கடனட்டை வரவட்டையைவிட ஒப்பீட்டளவில் கட்டணங்கள் உயர்வானதாகும்.

## விரைவில்...

# www.arivuththedal.com
## அறிவு, வளர்ச்சி, நல்வாழ்வு




அறிவுத்தேடல் தனது 3வது ஆண்டில் வெற்றிகரமாக கால்பதிப்பதை முன்னிட்டு தனது பணியை மேலும் செம்மைப்படுத்த வழிசெய்கிறது. இதுவரை காலமும் எழுத்துருவில் அறிவுத்தேடல் உயர்தர வணிகப் பிரிவு மாணவர்களுக்கான வழிகாட்டலை செவ்வனே வழங்கியுள்ளது. இதன் அடுத்த பரிணாம வளர்ச்சியாக மாணவர்களுக்கான சேவையினை இணையத்தளமூடாகவும் வழங்கவுள்ளது. இலங்கையில் பாடசாலை கல்வி முறைக்கு கீழ் கல்வி பயிலுகின்ற மாணவர்களுக்கு இணையத்தளம் மூலம் தமது முழுமையான பாடப்பரப்புகளை ஆராய்ந்து பயிலுவதற்கான எந்தவொரு இணையத் தளமும் இதுவரை உருவாக்கப்படவில்லை.

அந்நிலையில் அறிவுத்தேடல் தனது இணையத்தளத்தினூடாக மாணவர்களுக்குரிய வழிகாட்டலை வழங்கவுள்ளது. வெறுமனே இணையத்தளம் என்ற அடிப்படையில் இல்லாமல் முழுமையான ஒரு வழிகாட்டல் களர்சியமாக காணப்படும். இதில் முக்கிய பிரிவுகளில் மாணவர்கள் முதன்மையாக பயிற்சியையும் வழிகாட்டலையும் பெறமுடியும்.

**MCQ Online - இணையத்தளத்தில் சுய மதிப்பீடு**
எமது இணையத்தளத்தினூடாக ஒரு மாணவர் ஒரு நாளுக்கு வணிகக்கல்வி, கணக்கீடு, பொருளியல் ஆகிய மூன்று பாடங்களிலும் 9 பல்தேர்வு வினாக்களை பயிற்சி செய்ய முடியும். அதற்குரிய விடைகள் ஒரு நாளில் பயிற்சி செய்து முடிந்தவுடன் தெரிந்து கொள்ள முடிவதோடு இது உங்களை இணையத்தளத்தில் சுயமாக மதிப்பீட்டுக்கொள்ள சிறந்த வழிமுறை ஆகும்.

**Tutors Hub - அனுபவமிக்க ஆசிரியர்களின் பார்வை**
இலங்கையின் அனுபவமிக்க முண்ணனி ஆசிரியர்களின் வழிகாட்டலில் பல விடயங்களில் தெளிவினை பெறமுடியும். இது முழுமுழுக்க எமது இணையத்தளத்திற்கென தயாரிக்கப்படும் ஆக்கங்களாகும்.

**Current Affairs Cafe - நடைமுறை விடயங்களில் தெளிவு**
எமது இணையத்தளத்தில் உட்பிரவேசிக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், பாடவிடயங்கள் தொடர்பான நடைமுறை விடயங்களை தெரிந்து கொள்ளக்கூடிய நிலை இதன்மூலம் ஏற்படுகின்றது.

**My Job - உங்கள் துறை பற்றித் தெரியுமா?**
இன்றைய எமது பிரதான பிரச்சினை வேலை வாய்ப்பு பிரச்சினையே ஆகும். எமக்கு எவ்வெவ் துறைகளில் வாய்ப்பு காணப்படுகின்றது? ஒரு தொழிலில் பிரவேசிக்க எவ்வெவ் தகைமைகள் அவசியம் என ஒவ்வொரு மாதமும், ஒவ்வொரு துறைப்பற்றியும் முழுமையாக இப் பகுதியில் விளக்கத்தை பெறலாம்.

இவ்வாறு ஒப்பற்ற வகையில் பல்வேறு சேவைகளை வழங்க தயாராகும் எமது இணையம் ஒக்டோபர் மாதத்திலிருந்து மாணவர்களுக்கு அறிவுத்தாகத்தை ஈடுசெய்ய எத்தணிக்கும்.

இதழாசிரியர்,
பா. பானுசந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கே.கே. அரஸ்**
மட்டு அம்பாறை வணிகக்கல்வி ஆசிரியர்

| 2013 உயர்தர மாணவர்களே | 2014 உயர்தர மாணவர்களே |
| --- | --- |
| வணிகமுகாமைத்துவம் பாட அலகை மேலும் புரிந்து கொள்ள உதவும் | வணிகத்தின் அடிப்படை பாட அலகில் வணிக நோக்கத்தை புரிந்து கொள்ள உதவும் |

# வணிக எதிர்பார்ப்பு



எல்லா வணிகங்களுக்கும் நோக்கங்கள் உள்ளன. அவை நிறுவனத்தின் இலக்குகளாக அமைந்திருக்கும் அமைப்பு ஒன்றின் எதிர்பார்ப்புகள் மிகப்பரந்த வீச்சுக்களிலிருந்து ஒடுங்கிய வீச்சுவரை பின்வருமாறு ஊடுருவிச் செல்லும்.

**தூரநோக்கு(Vision) , இலட்சிய நோக்கு(Mission), இலக்கு அல்லது நோக்கம்(Goals): குறிக்கோள் (Objectives) கொள்கை(Policies)**

01. தூர நோக்கு
02. இலட்சிய நோக்கு
03. நோக்கங்கள்
04. குறிக்கோள்கள்
05. கொள்கை

## தூர நோக்கு / தூர திருஷ்டி / தொலைநோக்கு - Vision

நெடுங்காலத்தில் ஒரு நிறுவனம் அடைய எத்தனித்தல் தொடர்பான பிரகடனம் அல்லது கனவு தூரநோக்கு எனப்படும்.
**Eg:** நிறுவன உற்பத்தியை சர்வதேச ரீதியில் தனித்துவமான முதல் தர உற்பத்தியாக மாற்றுதல்

மோட்டார் வாகன உற்பத்தியில் முன்னோடியாகக் கருதப்படும் HENRY FORD தனது வணிகத் தூரநோக்கில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

- **" Marking AQffordable Transporation available to every person"**
"ஒவ்வொரு மனிதரும் பெற்றுக்கொள்ளக்கூடிய போக்குவரத்துவசதிகளைத் தயாரித்தல்"



மைக்ரோசொப்ட் (Microsoft) தலைவர் Bill Gates தனது வணிகத்தின் தூரநோக்கை பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

- **"Empowering People though Great Software, Anytime, Any Place and on any Device"**

" எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் எந்த உபகரணத்தின் ஊடாகவும் மென்பொருளினூடாக தனிநபர்களை சக்தியுள்ளவர்களாக்குதல்.



## இலட்சிய நோக்கு / பெரு நோக்கு / செயற்பாட்டு நோக்கம் - Mission

தூர நோக்கினை அடைவதற்கு உருவாக்கப்படும் வெவ்வேறுபட்ட செயற்பாடுகள் இலட்சிய நோக்கு எனப்படும். அதாவது நெடுங் காலத்தில் அடையவேண்டி எதிர்பார்க்கும் எல்லாவற்றையும் உள்ளடக்கும் சுருக்கமான வெளியீடு இலட்சிய நோக்கு எனப்படும்.

**Eg:** நிறுவனம் தரமான பொருட்களை உற்பத்தி செய்தல்.


- நீண்ட காலத்தில் அடைய எதிர்பார்க்கும் விடயங்கள் அடங்கிய பொழிப்பாக்கப்பட்ட கூற்று இலட்சியநோக்கமாகும். நிறுவனத்தில்
- தனிப்பட்டவர்களுக்கு வழிகாட்டும் கட்புலனாக மறைகரம் இலட்சிய நோக்காகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● உலகில் பிரசித்தி பெற்ற நிழற்படபிரதி இயந்திர உற்பத்தி நிறுவனமான சிறோக்ஸ் (XEROX) கம்பனி வெளிப்படுத்திய அதன் இலட்சிய நோக்கு பின்வருமாறு அமைகின்றது.

XEROX Does more the Simply Make copiers, its mission iis to make Business more Productivity by Helping to Create Better System wide Document Mangement.

" சிறொக்ஸ் கம்பனியின் இலட்சிய நோக்கு வெறும் நிழற்படப்பிரதி இயந்திரம் உற்பத்தி செய்வது மட்டுமல்ல, உயர் தரத்திலான முறையான ஆவண முகாமைத்துவத்தை உருவாக்குதல் மூலமான விளைதிறனை உயர்த்துவதற்கு உதவுதலாகும்."





**Peter Drucker**

அவரது The Practice of Managment என்னும் நூலில் இலட்சிய நோக்கை உருவாக்கும்போது கருத்தில் கொள்ள வேண்டிய காரணிகள் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

1) இலக்கு வாடிக்கையாளர் யார்?
2) வணிகம் எது? என்ன பொருள் சேவைகளை முன்வைக்கும்?
3) பூகோளத்தில் சந்தை எது?
4) எதிர்பார்க்கும் உழைப்பும் மேம்படுத்தலும் எவ்வளவு?
5) முக்கிய பெறுமானமும், நம்பிக்கையும் என்ன?
6) வணிகத்தின் சிறப்புத்தன்மை
7) பொதுமக்கள் தொடர்பிலும், அக்கறைகொள்ளும் தரப்பினர் தொடர்பிலும் காட்டும் அக்கறை
8) சூழலுக்கு இணக்கமாகச் சமூகத்திற்கு ஆற்றும் சேவை
9) ஊழியர்கள் தொடர்பிலான அக்கறை
10) பயன்படுத்தும், தொழில்நுட்பத்தின் நலன்களும் அது தொடர்பிலான சிறப்பும்.

**சிறந்த இலட்சிய நோக்க (Mission) கூற்றொன்றில் அவசியமாக உள்ளடக்கப்படவேண்டிய அம்சங்கள் :**


1) வணிகம் செயற்படுதவற்கான காரணம்
2) எவ்வகையான தொழிற்பாட்டை கொண்டுள்ள வணிகம்
3) பிரதான நோக்கங்கள் எவை (இலாபம், நிலைத்திருத்தல், விருத்தி)
4) முகாமைத்தொழிற்பாடு வெளிப்படுத்தப்படும் முறை
5) தரம், சமூகப்பொறுப்பு கவனம் செலுத்தப்படும் முறை

**இலட்சிய நோக்குக்கூற்றின் நோக்கம் :**
நிறுவனம் ஏன் செயற்படுகின்றது.
எதனைச் செய்ய எண்ணுகின்றது.
எதனை அடைய எதிர்பார்க்கின்றது.
போன்ற விடயங்களை நிறுவனத்தின் மீது அக்கறையுடைய தரப்பினருக்கு எடுத்து விளக்குவதாகும்.

*Remark* :- நிறுவனத்தின் திசையையும் தன்மையையும் தீர்மானிக்க பெரும் நோக்கக்கூற்று அவசியமாகக் காணப்படுகின்றது.

வேறுபாடு

| தூர நோக்கு | இலட்சிய நோக்கு |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |




## நோக்கங்கள் அல்லது இலக்கு - Goals / Aims

- நெடுங்காலத்தில் எய்தப்படுவதற்குரிய குறிப்பான விரிந்த பெறுபேறு நோக்கம் எனப்படும்.
- இலக்கு பெரும்பாலும் அளவு ரீதியான வெளிப்பாடாக அமைவதில்லை.

## குறிக்கோள்கள் – Objectives


- அமைப்பு ஒன்றினால் குறுங்காலத்தில் அடைந்த கொள்ள எதிர்பார்க்கப்படும் பெறுபேறு குறிக்கோள் எனப்படும்.
- காலத்துடன் தொடர்புபட்ட அளவு ரீதியில் அமைந்து அளவீடாக குறிக்கோள்களைக் குறிப்பிட முடியும்.

Eg: குறித்த வருடத்திற்குள் ஈடுபடுத்திய மூலதனத்திற்கு 20% இலாபமீட்டுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூரநோக்கு, இலட்சியநோக்கு, நோக்கம், குறிக்கோள்கள் என்பவற்றிற்கிடையிலான தொடர்பு

தூரநோக்கத்தை (Vision) அடிப்படையாகக் கொண்டு இலட்சியநோக்கும் (Mission) தயார் செய்யப்படும். இலட்சிய நோக்கிற்கு அமைவாக நோக்கங்களும் (Goals), குறிக்கோள்களும் (Objectives) உருவாக்கப்படும் இவை எல்லாவற்றிற்கும் இடையிலான தொடர்பை கீழே உள்ள அட்டவணையில் இருந்து புரிந்து கொள்ள முடியும். நிறுவனத்தின் மதிப்பு, நம்பிக்கை என்பவற்றின் அடிப்படையில் தூரநோக்கமும், தூரநோக்கதிற்கு அமைவாக இலட்சிய நோக்கமும், இலட்சிய நோக்கதிற்கு பொருத்தமாக நோக்கங்களும், குறிக்கோள்களும் உருவாக்கப்படும்




## கொள்கை – Policies

உருவாக்கிக் கொள்ளப்பட்ட இலக்கு நோக்கம் என்பவற்றை அடைவதற்கு செயற்படவேண்டிய முறைக்கு வழிகாட்டுவதற்கான காட்சி கொள்கை எனப்படும்.

## நடைமுறைகள் அல்து உபாயமார்க்கம் – Procedures

குறித்த வேலைப் பொறுப்பை நிறைவு செய்வதற்கு பின்பற்ற வேண்டுமென உருவாக்கப்பட்ட படிமுறைகள் செயல் முறை எனப்படும்.

## பிரமாணங்கள் – Rules


கருமங்களினை ஆற்றும்போது செய்யவேண்டியவை, செய்யக்கூடாதவை எனத் திட்டவட்டமாக விபரிக்கப்பட்ட அம்சங்கள், சட்டதிட்டங்கள் பிரமாணங்கள் எனப்படும்

## நிகழ்ச்சித்திட்டம் – Programe

செயல் ஒப்படையும் அவற்றைப் புரிவதற்குத் தேவையான வளங்களின் திரட்சியும் நிகழ்ச்சித்திட்டம் எனப்படும்.

## நிறுவன குறிக்கோள்களில் இருக்க வேண்டிய அடிப்படை அம்சங்கள் / பண்புகள் (SMART)

01. திட்டவட்டமானது *(Specific)* - S
02. அளவிடமுடிதல் *(Measyrabke)* - M
03. அடையமுடிதல் *(Achievable)* - A
04. உண்மையானது *(Realistic)* - R
05. குறித்த காலம் *(Timely)* - T



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வணிகம் ஒன்றிற்கு நோக்கங்களும் *(Aims)* குறிக்கோள்களும் *(Objectives)* முக்கியத்துவம் பெறுவதற்கான காரணங்கள்.


01. நிறுவனம் எதனை நிறைவேற்றிக் கொள்வதற்கு செயற்படுகிறது என்பதை நிறுவனம் தொடர்பான சகல கட்சியினருக்கும் தெளிவாக தெரியப்படுத்துவதற்கு.
02. நிறுவனம் அடைய வேண்டிய இலக்கினை நிறுவனம் தொடர்பான கட்சியினருக்கு வழிகாட்டுவதற்கு.
03. மனித பௌதீக வளங்களை வினைத்திறனுடன் பயன்படுத்த
04. எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சவால்களுக்கு முகம் கொடுக்க.
05. நம்பிக்கையுடன் நிறுவனத்தை நடாத்தி செல்ல
06. ஊழியர்களை ஊக்கப்படுத்த
07. நிறுவன செயற்பாடுகளை / முன்னேற்றங்களை அளவிட்டு அறிவதற்கு
08. முகாமை எதிர்பார்ப்பதனை ஆய்வு செய்ய
09. இலட்சிய நோக்கை அடைவதற்கு முகாமையாளருக்கு உதவுதல்

## வணிகங்களின் பிரதான நோக்கங்களும் குறிக்கோள்களும்

01. இலாபத்தை உச்சப்படுத்தல் (Maximizing Profit)
02. வியாபாரத்தில் நிலைத்திருத்தல் (Survival) நிலைப்பாடு
03. விற்பனையை உச்சப்படுத்தல் (Maximizing Sales) விற்பனைப் புரள்வை அதிகரித்தல்
04. பங்குகளின் விலையை உச்சப்படுத்தல் (Maximizing Share Price)
05. போட்டியாளருக்கு சிறந்த போட்டியை வழங்கல்
06. நன்மதிப்பை உச்சப்படுத்துதல்
07. சேவைகளை வழங்குதல் (Producing Services)
08. ஊழியர்களின் நலனை உச்சப்படுத்தல் (Maximizing employee welfare)
09. வியாபாரியின் தனிப்பட்ட திருப்தி (Personal Satisfaction) சொந்தக்காரரின் தனிப்பட்ட திருப்தி
10. சமூக, சமுதாய நலன் (Social Community welfare)
11. வணிகத்தை விருத்தி செய்தல்.
12. புதிய கண்டுபிடிப்புகள் மேற்கொள்ளல்
13. சந்தைத் தலைமைத்துவம்
14. தரமான பொருட்கள், சேவைகளை உற்பத்தி செய்தல்

## வணிகங்களில் இலாபம் ஈட்டுதல் (இலாபத்தை உச்சப்படுத்துதல்) முக்கியத்துவம் பெறுவதற்கான காரணங்கள்.

01. வணிகத்தின் உரிமையாளர் தாம் ஈடுபடுத்திய மூலதனத்திற்கு ஒரு வருவாயை எதிர்பார்ப்பதால்.
02. வணிகத்தை விரிவு படுத்துவதற்கு இலாபம் முக்கியமாகும்.
03. வணிகத்தைக் கொண்டு நடாத்துவதற்கு (நாளாந்த செலவுகளை ஈடுசெய்வதற்கு) இலாபம் அவசியமாகும்.
04. வணிகத்திற்கு தேவையான நிதியை (பங்குகள், கடன்கள்) பெற்றுக் கொள்வதற்கும் வெளியாரைக் கவர்வதற்கும் இலாபம் அவசியமாகும்.
05. ஊழியர்களுக்கு தேவையான நலன்களை வழங்குவதற்கு இலாபம் அவசியமாகும்.
06. ஆய்வு அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இலாபம் அவசியமாகும்.
07. மீள்முதலீடு செய்வதற்கு.
08. சமூக நல சேவைகளைச் செய்வதற்கு.
09. போட்டியை எதிர்கொள்வதற்கு
10. இலாபத்தினை நிறுத்தி வைப்பதன் மூலம் உரிமையாளரை ஊக்குவிப்பதற்கு




Remarks:

**வணிகங்களுக்கு நோக்கங்கள் பல இருக்கமுடியும் அவற்றுள் சில பின்வருமாறு :**

- இலாபம்
- சந்தைத்தலைமைத்துவம் பெறல்
- புத்தாக்கம்
- ஊழியர் சேமநலனும் ஊழியர் திருப்தியும்
- நிலைத்திருத்தல், வளர்ச்சி, சமூகசேவை
- தரமான பொருட்கள் சேவைகள் வழங்குதல்
- தனிநபர் திருப்தி

Que :

**1) நிறுவனமொன்று குறித்த நன்மைகள் சிலவற்றை தனது உடமையாளர்களுக்கு மட்டுமன்றி, தனது ஊழியர்கள், வாடிக்கை யாளர்கள், சமுதாயம் ஆகியவற்றிக்கும் கூட வழங்குதல் வேண்டும் என்று கூறப்படுகின்றது மேற்குறித்த மூன்று தரப்பினர்களுக்கும் தனித்தனியே எந்நன்மைகள் அளிக்கப்படவேண்டும் என விபரிக்குக.**

---

**2) முதலீட்டாளர்களுக்கு இலாபத்தை வழங்குவதற்கு மேலதிகமாக வணிகத்திலிருந்து ஏனைய அக்கறையுடைய தரப்பினர் பெற்றுக்கொள்ளும் அனுகூலங்களை விளக்குக.**

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினைத்திறன், செயல்திறன், , விளைதிறன்
# Efficiency, Effectiveness and Productivity

### வினைத்திறன் - *Efficiency*

- குறைந்த கிரயத்தோடும் குறைந்த விரயத்தோடும் வளங்களினை உபயோகித்தல் வினைத்திறன் எனப்படும்.

---

### பயனுறுதி / செயல்திறன் - *Effectivencss*

- நிறுவனம் தனது குறிக்கோள்களை குறித்த காலப்பகுதிக்குள் குறித்த முறைமையில் நிறைவேற்றிக் கொள்ளுதல் செயற்றிறன் எனப்படும்.

---

### உற்பத்தித் திறன்/ விளைதிறன் - *Productivity*

குறித்த ஒரு அலகு அளவு உள்ளீடுகளினைப் பயன்படுத்தி பெற்றுக் கொள்ளக்கூடிய வெளியீடுகளின் அளவு உற்பத்தித் திறன் எனப்படும். அதாவது குறித்த ஒரு கால எல்லையினுள் ஒரு வணிக நிறுவனத்தின் உள்ளீட்டிற்கும் வெளியீட்டிற்கும் இடையிலாவிகித தொடர்பு உற்பத்தித் திறன் எனப்படும்.

உற்பத்தித் திறன் = $\frac{\text{வெளியீடு}}{\text{உள்ளீடு}}$ [குறித்த காலத்திற்குள் தரத்துடன்]

குறைவான உள்ளீடுகளுடன் அதிகமான விளைவு பெறப்படுமானால் விளைதிறன் விரும்பத்தக்கதாகும். (பெறுமதி-->1 எனின்)

### உற்பத்தித் திறன் மேம்பாடு நிகழக்கூடிய சந்தர்ப்பங்கள்

01. உள்ளீட்டை மாற்றாமல் அதே நிலையில் வைத்திருந்து வெளியீட்டை அதிகரித்தல்.
02. வெளியீட்டை மாற்றாமல் அதே நிலையில் வைத்திருந்து உள்ளீட்டைக் குறைத்தல்.
03. உள்ளீட்டை சிறியளவினால் அதிகரிக்கும் வேளையில் வெளியீட்டை பெரியளவினால் அதிகரித்தல்.
04. உள்ளீட்டை பெரியளவினால் குறைத்து வெளியீட்டை சிறியளவினால் குறைத்தல்.

### உற்பத்தி திறன் தன்மை *(Productivity)* யின் முக்கியத்துவம்

01. மூலவளங்களின் விரயங்கள் குறைவடையும்.
02. நாட்டின் உற்பத்தி அளவு அதிகரிக்கும்.
03. பண்டங்களின் தரம் மேம்படுத்தப்படும்.
04. பொருட்களின் தன்மை அபிவிருத்தி செய்யப்படும்.
05. பண்டங்களின் விலை குறைவடையும்.
06. வாழ்க்கைச் செலவு குறைவடையும்.
07. சர்வதேச வர்த்தகத்தில் போட்டியிடும் தன்மை அதிகரிக்கும்.


## Questions - Part - II

01. தூரநோக்கு (Vision) என்பதற்கும், இலட்சிய நோக்கு (Mission) என்பதற்கும் இடையிலான தொடர்பினை விளக்குக.

02. வணிக இலக்குகளையும் (Gools ) குறிக்கோள்களையும் (Objective) விளக்கி ஒன்றுகொன்று அவற்றுக்கிடையில் உள்ள தொடர்புகளை விளக்குக.

*Remarks:*

- Peter Drucker கூற்றுப்படி வினைத்திறன் என்பது செயற்பாடுகளைத் திருத்தமாகச் செய்தல் அல்லது ______________ (Doing thing Right) என்பதாகும்.
- Peter Drucker கூற்றுப்படி செயற்திறன் / பயனுறுதி என்பது திருத்தமானவற்றைச் செய்தல் அல்லது சரியான கருமங்களைச் செய்தல்(Doing the Right Things) எனப் பொருள்படும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. ஒரு நிறுவனத்தின் குறிக்கோள்கள் (Objectives), இலக்குகள் (Goals) , இலட்சியம் (Mission) , தூரநோக்கு (Vission) என்பவற்றுக்கு இடையிலான தொடர்பினை விளக்குக.

04. வணிக நிறுவனம் ஒன்றின் தூரநோக்கு (Vision) இலட்சிய நோக்கு (Mission) இலக்கு, நோக்கம் (Goals/ Airm) குறிக்கோள் (Objective)என்பவற்றிகான தொடர்பை விளக்கு.

05. சிறுகுறிப்பு எழுதுக.

(அ) வினைத் திறன் **(Efficency)**

(ஆ) செயல்திறன் **(Effectiveness)**

(இ) தூரதிருஷ்டி (Vision)

(ஈ) இலட்சிய நோக்கு (Mission)

(ஊ) குறிக்கோள் ஒன்றின் சிறப்பியல்புகள்

06. உற்பத்தித் திறன், வினைத்திறன் எனும் எண்ணக் கருக்களை சுருக்கமாக விளக்கி அவற்றிற்கிடையிலான தொடர்பினை எடுத்துக்காட்டுக.

07. வினைத்திறன், பயனுறுதி என்பவற்றை தனித்தனியே விளக்குவதுடன் அவை ஒவ்வொன்றும், மற்றொன்றுடன் எவ்வாறு தொடர்புபட்டுள்ளன என்பதை எடுத்துக்காட்டுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



K.K. அரஸ்
சிரேஷ்ட வணிகக்கல்வி ஆசிரியர்
மட்டு அம்பாறை

## The MCQ Quiz Bank

01. நிறுவனங்கள் அனைத்திற்கும் பொதுவான ஒரு அம்சமாக உள்ளது
   (1) நோக்கம்
   (2) இலாபம்
   (3) விளைபொருள்
   (4) சந்தை
   (5) திட்டம்

[..........]

02. பின்வருவனவற்றுள் வணிகக் குறிக்கோள் ஒன்றின் ஒரு இயல்பாகக் கருதப்பட முடியாதது எது?
   (1) குறிப்பானதாக இருத்தல்
   (2) அளவிடக்கூடியதாக இருத்தல்
   (3) அடையக் கூடியதாக இருத்தல்
   (4) மெய்மை வாய்ந்ததாக இருத்தல்
   (5) பண்புசார்ந்ததாக இருத்தல்

[..........]

03. நீண்டகாலத்தில் ஒரு நிறுவனம் அடைய எத்தனித்தல் தொடர்பான பிரகடனம் / கனவு
   (1) தூரநோக்கு (Vision)
   (2) இலட்சிய நோக்கு (Mission)
   (3) நோக்கங்கள் (Aims)
   (4) குறிக்கோள்கள் (Objectives)
   (5) உபாயங்கள் (Strtegies)

[..........]

04. நிறுவகமொன்று நெடுங்காலத்தில் எய்த எதிர்பார்ப்பதை விளக்குவது பின்வருவனவற்றுள் எது?
   (1) தூரநோக்கு (Vision)
   (2) இலட்சிய நோக்கு (Mission)
   (3) நோக்கங்கள் (Aims)
   (4) குறிக்கோள்கள் (Objectives)
   (5) உபாயங்கள் (Strtegies)

[..........]

05. குறித்துரைத்த கால எல்லைக்குள் நிறுவகமொன்றின் குறிக்கோள்கள் நிறைவேற்றப்படுதலுக்கு வழங்கும் பதம் யாது?
   (1) வினைத்திறமை
   (2) பயனுறுதிப்பாடு
   (3) உற்பத்தித்திறன்
   (4) இலாபமீட்டும் திறன்
   (5) செயல் நிறைவேற்றம்

[..........]

06. முழுமொத்த உற்பத்தித்திறனை அளவிடுவதற்கு பயன்படுத்தப்படும் சமன்பாடு
   (1) உள்ளிடுகை / வெளியீடு = உற்பத்தித் திறன்
   (2) வெளியீடு / உள்ளிடுகை = உற்பத்தித் திறன்
   (3) பொருள்கள் / வெளியீடு = உற்பத்தித் திறன்
   (4) வெளியீடு / உழைப்பு = உற்பத்தித் திறன்
   (5) பூர்த்தியெய்திய பண்டங்கள் / பொருட்கள் = உற்பத்தித் திறன்

[..........]

07. வணிகமொன்று நடாத்துவதற்கான காரணத்தைக் வெளிப்படுத்துவது அதன்
   1. தூரநோக்கு (Vision)
   2. இலட்சிய நோக்கு (Mission)
   3. நோக்கங்கள் (Aims)
   4. குறிக்கோள் (Objective)
   5. உபாயங்கள் (Strtegies)

[..........]

8. நெடுங்காலத்தில் எய்தப்படுவதற்குரிய குறிப்பான விரிந்த பெறுபேறு எவ்வாறு அழைக்கப்படும்?
   1. தூரநோக்கு (Vision)
   2. இலட்சிய நோக்கு (Mission)
   3. இலக்கு (Aim / Goals)
   4. குறிக்கோள் (Objective)
   5. கொள்கை (Policy)

[..........]

09. நெடுங்காலத்தில் நிறுவனம் ஒன்று எய்தவேண்டியது யாது என்பது பற்றி சுருக்கமாகத் தரும் ஒரு கூற்று எவ்வாறு அழைக்கப்படும்?
   1. தூரநோக்கு (Vision)
   2. இலட்சியம் (Mission)
   3. நோக்கங்கள் (Aims)
   4. குறிக்கோள்கள் (Objectives)
   5. இலக்கு (Target)

[..........]

10. குறித்த ஒரு கால எல்லையினுள் ஒரு வணிக நிறுவனத்தில் உள்ளிடுகைக்கும், வெளியிடுகைக்கும் இடையிலான விகிதம் எவ்வாறு அழைக்கப்படும்?
   1. வினைத்திறன்
   2. பயனுறுதிப்பாடு
   3. உற்பத்தித்திறன்
   4. இலாபகரத்தன்மை
   5. முகாமை

[..........]

11. பின்வருவனவற்றில் எது வியாபார நோக்கம் அன்று?
   (1) ஊழியர் நலனை உச்சப்படுத்துவது
   (2) சந்தையில் பிழைத்து வாழ்வது
   (3) விற்பனைகளை உச்சப்படுத்துவது
   (4) சொந்தக்காரரின் தனிப்பட்ட திருப்தி
   (5) தொழிலாளியின் வருமானத்தை உச்சப்படுத்துவது

[..........]

12. குறைந்த கிரயத்தோடும் குறைந்த விரயத்தோடும் வளங்களை உபயோகிப்பது ............. என அழைக்கப்படும்.
   (1) செயற்றிறன்
   (2) வினைத்திறன்
   (3) சாதனை
   (4) உற்பத்தித் திறன்
   (5) கட்டுப்பாடு

[..........]

13. நீண்ட காலத்தில் நிறுவனம் ஒன்று அடையவிரும்பவதன் விளைவு அழைக்கப்படுது
   (1) இலக்கு
   (2) தந்திரோபயம்
   (3) குறிக்கோள்
   (4) இலாபம்
   (5) கொள்கை

[..........]

14. பின்வருவனற்றுள் எந்தவொரு நிறுவனத்தினதும் பொதுவான கூறு
   (1) சேவைகளை உற்பத்தி செய்தல்
   (2) இலக்கு
   (3) இலாபம்
   (4) ஒப்பந்தம்
   (5) பொருட்களை உற்பத்தி செய்தல்

[..........]

15. பின்வருவனவற்றுள் ஒழுங்குமுறையாக வரிசைப்படுத்தப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள தொகுதியைத் தெரிவு செய்துக.
   (1) இலட்சியநோக்கு ➡ தூரநோக்கு ➡ இலக்குகள் ➡ குறிக்கோள் ➡ கொள்கைகள்
   (2) இலட்சியநோக்கு ➡ தூரநோக்கு ➡ குறிக்கோள் ➡ இலக்குகள் ➡ கொள்கைகள்
   (3) தூரநோக்கு ➡ இலட்சியநோக்கு ➡ கொள்கைகள் ➡ இலக்குகள் ➡ குறிக்கோள்
   (4) இலக்குகள் ➡ குறிக்கோள்கள் ➡ கொள்கைகள் ➡ தூரநோக்கு ➡ இலட்சியநோக்கு
   (5) தூரநோக்கு ➡ இலட்சியநோக்கு ➡ இலக்குகள் ➡ குறிக்கோள் ➡ கொள்கைகள்

[..........]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிரேஷ்ட்ட வணிகக்கல்வி ஆசிரியர் கே. கே. அரஸ் அவர்களின் 23வது இதழ் MCQ தொகுப்புக்கான விடைகள்

இடைவெளி நிரப்பும் வினாக்களுக்கு விடையளிக்கும்போது பரீட்சார்த்திகளிடம் குறித்த இடைவெளியில் வரக்கூடிய மிகப்பொருத்தமான விடையே எதிர்பார்க்கப்படுகின்றது. பல்வேறு மாற்று விடைகளை அவற்றில் ஒன்று சரியாக அமையும்போது புள்ளி வழங்கப்பட மாட்டாது.

01) விருப்பம
02) சேவை வணிகங்கள
03) பொருட்கள், சேவைகள
04) 1. தொடடுணர முடியாது
2. பிரிககமுடியாமை
3. வேறுபடும தன்மை
4. களஞ்சியபபடுத்த முடியாமை
05) உலகமயமாககல
06) கைத்தொழில் பொருட்கள அல்லது வணிகப பொருட்கள
07) 2011 – 59.5வீதம்
08) கைத்தொழில் முறை
09) இலத்திரனியல் வணிகம (E-Business)
10) சந்தை
11) அக்கறை செலுத்துவோர (Stakeholders)
12) நாடப்பெறாத பணடங்கள
13) பணம
14) பண்டமாற்று முறைமை
15) தேவைகள
16) அமையச்செலவு அல்லது சந்தர்ப்பச செலவு
17) நிறுவனம அல்லது அமைப்பு
18) உள்ளீடுகள அல்லது உற்பத்திக்காரணிகள
19) முயறசியாளர
20) நட்டம், இலாபம
21) கைத்தொழில் பொருள
22) தேறிய இலாபம அல்லது இலாபம
23) விற்பனைகளை, கிரயங்களை
24) நேர சேவைகள
25) நேர உற்பத்தி
26) நேரில் உற்பத்தி அல்லது பண்டமாற்று முறைமை
27) உற்பத்திப பொருள (Product)
28) வாங்குபவரின நோக்கத்தின அல்லது பாவனையின
29) 1. வசதிப பண்டங்கள
2. கடையிலுள்ள பண்டங்கள
3. விசேட பண்டங்கள அல்லது தனிச்சிறப்புவாய்ந்த பண்டங்கள
4. நாடப்பெறாத பணடங்கள
30) விசேட பண்டங்கள
31) நாடப்பெறாத பணடங்கள
32) கைத்தொழில் பண்டங்கள
33) நேரில் உற்பத்தி
34) உப பொருட்கள
35) உற்பதத்ப்பொருள பல்வகைபபடுத்தல் (Product Diversification)
36) தொழிற பிரிப்பு
37) வேலை சிறப்புத தேர்ச்சி (Job Specialization)
38) வினைத்திறனான முகாமை (Effective Managment)
39) உற்பத்தித திறன (Productivity)
40) 1. பண்டமாற்று முறைமை
2. பணப பாவனை
3. கைத்தொழில் புரட்சி
4. இலத்திரனியல் வணிகம
41) முதலாம நிலை, இரண்டாம நிலை, மூன்றாம நிலை
விவசாயம், கைத்தொழில், சேவை
42) கையடக்க வணிகம (M-Commerce)
43) நோககம
44) இரண்டாந்தரக கைத்தொழில்கள
45) மீள்சுழற்சி (Recycle)
46) கைத்தொழில் பொருட்கள அல்லது வணிகப பொருட்கள
47) இலட்சியம (Mission)
48) 1. குறிப்பானதாக இருத்தல் (Specific)
2. அளவிடக்கூடியதாக இருத்தல் (Measurable)
3. இணங்கிக கொள்ளப்பட்டதாக இருத்தல் (Agreed)
4. யதார்த்தமானதாக இருத்தல் (Realistic)
5. கால வரையறையைக கொண்டிருத்தல் (Time Bound)
49) இலக்கு (Goal)
50) குறிக்கோள (Objective)

## Current Affairs Cafe

- by Editor -

விவசாயத்தில் முக்கியம் பெறுகின்ற இலங்கைப் போன்றதொரு நாட்டில் விவசாயத்துறையில் வேலைவாய்ப்பு மற்றும் வினைத்திறன் என்பது மிக பிரதானமானதொன்றாகும். நடைமுறையில் விவசாய நிலங்களை குறைவாக பயன்படுத்தி வினைத்திறன் அதிகரிப்பதன் ஊடாக இறக்குமதிக்கெதிரான பதிலீடுகளை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்து ஈடுசெய்யக்கூடியதோடு, நெல் உற்பத்தியில் தன்னிறைவு நிலையினை எட்ட முடிவதோடு, இதனூடாக இறக்குமதி செலவினையும் இழிவுபடுத்த முடியும். இங்கு கீழ்காட்டப்படும் புள்ளி விபரங்களினடிப்படையில் இலங்கை நெல் உற்பத்தியில் எத்தகைய நிலையினை பெற்றுள்ளது என்பதை கீழ்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| நாடு | 2005 | 2009 | அதிகரிப்பு சதவீதம் |
|---|---|---|---|
| சீனா | 6253 | 6590 | 5.4 |
| இந்தோனேசியா | 4574 | 4999 | 9.3 |
| பங்களாதேஷ் | 3781 | 3920 | 3.7 |
| பாகிஸ்தான் | 3174 | 3581 | 12.8 |
| இலங்கை | 3547 | 3800 | 7.1 |
| தென்கொரியா | 6568 | 7394 | 12.6 |
| பிரேசில் | 3369 | 4365 | 29.6 |

இப்புள்ளி விபரங்களினூடாக இலங்கையின் நெல் உற்பத்தியின் வினைத்திறன் அதிகரிப்பு ஏற்பட்டிருப்பது காணமுடிவதோடு, இதனை மேலும் அதிகரிக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## "வணிகம்" - அதன் கிளைகளும், பணிகளும். ("Business" - It's Branches & Activities)

மனித தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவு செய்யும் பொருட்டு மேற்கொள்ளப்படுகின்ற இலாப நோக்குடைய, இலாபநோக்கமற்ற எந்தவொரு பொருளாதாரச் செயற்பாடும் வணிகம் என வரையறுக்கப்படுகிறது. இவ் வணிகமானது ஒரு முறைமையாக (System) காணப்படுவதுடன், அதனுள் பல்வேறுபட்ட கிளைகள் / பிரிவுகளும், பல்வேறு வகையான செயற்பாடுகளும் உள்ளடங்கி இருப்பதனைக் காணமுடியும்.

## வணிகத்தின் கிளைகள் / பிரிவுகள் (Branches)





பண்டமாற்று முறைமையினூடாக வியாபாரம் அறிமுகமானது, அவ்வியாபாரத்தில் ஏற்படக்கூடிய தடைகளை நிவர்த்தி செய்து வியாபாரத்தினை எளிமைப்படுத்துவதற்காக துணைச் சேவைகள் அறிமுகமானது. இவ்விரு செயற்பாடுகளும் இணைந்து வர்த்தகம் உருவானது. இவ்வர்த்தகமானது உற்பத்தி நடவடிக்கைகளுடன் இணைகின்ற போது வணிகம் என்ற முழுமையான எண்ணக்கரு தோன்றியது எனலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வணிகத்தின் செயற்பாடுகள் (Activities)




வணிகம் என்பது ஒரு உள்ளீட்டு வெளியீட்டு இயக்கமாகவும் கருதப்படும். இதில் உள்ளீடுகளாக உற்பத்திக் காரணிகளான நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சி, அறிவு, தகவல், நேரம் என்பன கருதப் படுகிறது. வெளியீடுகளாக பொருட்கள், சேவைகள் ஏனைய சந்தைப்படுத்தக் கூடிய உருப்படிகள் அமைகிறது. இவ்விரண்டிற்கும் இடையில் இடம் பெறக்கூடிய பணிகளாகவே வணிகச் செயற்பாடுகள் அமைந்துள்ளது எனலாம். அவை உற்பத்தி, நிதி, மனிதவளம், சந்தைப்படுத்தல், ஆராட்ச்சி அபிவிருத்தி, நிர்வாகம் என இனங்காணப்படுகிறது.

**உயர்தரக் கற்கையின் பின் பல்கலைக்கழகப் பட்டம் ஒன்றினையும் தொழில்சார் தகைமை யொன்றினையும் பெற்றுக்கொள்வது எவ்வாறு?**

ACCA

க.பொ.த. உயர்தர பரீட்சைக்குத் தயாராகிக்கொண்டிருக்கும் நீங்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகுவீர்கள் எனில் பல்கலைக்கழகத்தில் மூன்று அல்லது நான்கு வருடக் கற்கை நெறியினை பூர்த்திசெய்வதோடு இது முகாமைத்துவம் தொடர்பான ஏதேனும் கற்கை நெறியாக அமையலாம்.

கணக்கீடு, வணிக முகாமைத்துவம், சுற்றுலா முகாமைத்துவம், மனிதவள முகாமைத்துவம், முயற்சியாண்மை முகாமைத்துவம், வணிகத் தகவல் தொழில்நுட்பம், நிதி முகாமைத்துவம் போன்ற பல்வேறு துறைகளில் ஏதேனும் ஒரு பட்டத்தினைப் பெற்றுக்கொள்ளலாம். இதற்கு ஈடான தொழில்சார் கற்கைநெறியினை தெரிவுசெய்யும் போது ACCA பற்றிச் சிந்தித்துள்ளீர்களா? ACCA தகைமையானது ஐக்கிய இராஜ்ஜியத்தில் பட்டயம் பெற்ற கணக்கீட்டு நிறுவனத்தினூடாக வழங்கப்படுகின்றது. இதுவரை உலகளாவிய ரீதியில் 404 000 மாணவர்கள் ACCAயினைத் தமது தொழில்சார் கற்கையாக தெரிவு செய்துள்ளனர்.

இக்கற்கை நெறியின் விசேடம் யாதெனில், இக்கற்கை நெறியின் முதற்பகுதியைப் பூர்த்தி செய்வதுடன், இரண்டாவது பகுதியைப் பயிலும் போதே ஐக்கிய இராஜ்ஜியத்தின் Oxford brookes பல்கலைக்கழகத்தில் BSc Applied Accounting Hons பட்டத்தினையும் பெற்றுக்கொள்ளலாம்.

இலங்கையில் பல்கலைக்கழக அனுமதியைப்பெற்ற, பெற்றிராத மாணவர்கள் தம்மை ஒரு சிறந்த கணக்காய்வாளராக ஆக்கிக்கொள்ள ACCA சிறந்த பாடநெறி ஆகும்.

ACCA இலங்கை -
இல 424, R.A.D மெல் மாவத்தை, கொழும்பு 03.
T.P.: 011 2301920, 011 2301923

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



S.K.சோதிலிங்கம்
B.B.A(Hon) Dip.in.Edu
சிரேஷ்ட்ட வணிகக்கல்வி ஆசிரியர்
றோயல் கல்லூரி கொழும்பு 07

The MCQ Quiz Bank

01. வணிகத்தின் உள்ளீட்டு வெளியீட்டுத் தொழிற்பாடு தொடர்புடைய விடயங்களின் சரியான தொகுதியாக அமையாதது பின்வருவனவற்றுள் எது?

- ☐ (1) அறிவு, தகவல், காலம், முயற்சி
- ☐ (2) நிதி, நிர்வாகம், சந்தைப்படுத்தல், உற்பத்தி
- ☐ (3) பொருட்கள், சேவைகள், எண்ணங்கள், இடங்கள்
- ☐ (4) நிலம், உழைப்பு, மூலதனம், தகவல்
- ☐ (5) வணிகம், வர்த்தகம், வியாபாரம், உற்பத்தி

02. வணிகத்தில் அக்கறையுடையோர் வணிகத்தின் மீது கவனம் செலுத்துவது போலவே வணிகமும் அக்கறையுடையோர் மீது அக்கறை கொள்கிறது இதனைக் கருத்தில் கொண்டு கீழ்வரும் அட்டவணையில் பகுதி "அ" வினை, பகுதி "ஆ" வுடன் தொடர்பு படுத்தும் சரியான தொகுதியை கண்டறிக?

| பகுதி "அ" | பகுதி "ஆ" |
|---|---|
| A. அரசாங்கம் | 1. மூலதனமும், முகாமைத்துவமும் |
| B. போட்டியாளர்கள் | 2. சந்தை வாய்ப்பும், நிலைத்திருத்தலும் |
| C. உடமையாளர்கள் | 3. வளவினைத்திறனும், தொழில் திருப்தியும் |
| D. ஊழியர்கள் | 4. சந்தை உபாயங்களும், உறுதியான வெற்றியும் |
| E. வாடிக்கையாளர்கள் | 5. ஊக்குவிப்புக்களும், வசதிகளும் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ☐ | 1. | A - 1 | B - 2 | C - 3 | D - 4 | E - 5 |
| ☐ | 2. | A - 2 | B - 4 | C - 5 | D - 3 | E - 1 |
| ☐ | 3. | A - 3 | B - 1 | C - 2 | D - 5 | E - 4 |
| ☐ | 4. | A - 4 | B - 5 | C - 3 | D - 1 | E - 2 |
| ☐ | 5. | A - 5 | B - 4 | C - 1 | D - 3 | E - 2 |

03. வணிகம் என்பது ஒரு முறைமையாகும். இதில் பல்வேறு பணிகளும், கருமங்களும் உள்ளடக்கியுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு பின்வரும் அட்டவணையில் காணப்படும் பகுதி "அ" வினைப் பகுதி "ஆ" வுடன் இணைக்கும் சரியான தொகுதியை இனங்காண்க.

| வணிகப்பணிகள் | நடவடிக்கைகள் |
|---|---|
| (A) நிதிச் செயற்பாடு | 1- விற்பனையும், விலையிடலும் |
| (B) மனிதவளச் செயற்பாடு | 2. பொருள் வடிவமைப்பும், பொறியியலும் |
| (C) உற்பத்திச் செயற்பாடு | 3. அலுவலக நிர்வாகமும், ஆவணப்படுத்தலும் |
| (D) சந்தைப்படுத்தல் செயற்பாடு | 4. இலாபத்தன்மையும், திரவத்தன்மையும் |
| (E) நிர்வாகச் செயற்பாடு | 5. ஆட்சேர்த்தலும், ஊக்குவிப்புக்களும் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ☐ | 1. | A - 1 | B - 2 | C - 3 | D - 4 | E - 5 |
| ☐ | 2. | A - 2 | B - 4 | C - 3 | D - 1 | E - 5 |
| ☐ | 3. | A - 3 | B - 2 | C - 1 | D - 5 | E - 4 |
| ☐ | 4. | A - 4 | B - 5 | C - 2 | D - 1 | E - 3 |
| ☐ | 5. | A - 5 | B - 4 | C - 3 | D - 2 | E - 1 |

04. A இலத்திரனியல் வணிகம், தொடர்பான பின்வரும் விடயங்களில் தவறானது எது?

☐ (1) நடமாடும் வணிகம் (Mobile Business) என்பதும் இவற்றில் ஒரு பகுதியாக அமைகிறது.

☐ (2) வணிகத்திலிருந்து வாடிக்கையாளருக்கான (B to C) வியாபார முறை சில்லறை வியாபாரமாக கருதப்படுகிறது.

☐ (3) வணிகமொன்று, அரசிற்குரிய வரிகளை வலையமைப்பின் மூலமாக செலுத்துவது B to G முறையாக கருதலாம்.

☐ (4) நேரடி வியாபார முறையில் காணப்படும் நன்மைகள் யாவும் இவ்வணிகத்தில் கிடைக்கும்.

☐ (5) இவ்வியாபார முறையில் இலத்திரனியல் பண முறைமைகள் முலமாக கொடுப்பனவு தீர்க்கப்படும்.

B ஒரு வணிக நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற வணிக மட்டங்களுக்கிடையிலான பரஸ்பர தொடர்பு எவ்வாறு அழைக்கப்படும்?

☐ (1) வணிகச் சக்கரம் (Business Cycle)

☐ (2) உற்பத்திச் சக்கரம் (Production Cycle)

☐ (3) உற்பத்தி சங்கிலி (Production Chain)

☐ (4) உற்பத்தி கலவை (Product Mix)

☐ (5) கூட்டு உற்பத்தி (Joint Product)

05. கீழே காணப்படும் விடயங்கள் வணிகமொன்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுப்பெறுபேறுகளாகும். இவற்றினுள் "A" உள்ளக ஆய்வுப் பெறுபேறுகள் எனவும், "B" வெளியக ஆய்வுப் பெறுபேறுகள் எனவும் தொகுதியாக்குக?

(1) வறுமையும், வேலையின்மையும் உயர்வாக உள்ளது
(2) பௌதீக வளங்கள் பற்றாக்குறையாக காணப்படுகிறது
(3) பொருளாதாரம் மந்த நிலையிலுள்ளது
(4) முகாமையாளர்கள் நேரான மனப்பாங்குடன் உள்ளனர்
(5) பணச் சந்தையில் வட்டி வீதம் அதிகரித்துள்ளது
(6) உற்பத்திச் செலவு உயர்வாகக் காணப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| ☐ | (1) | A - 1, 2, 3 | B - 4, 5, 6 |
| ☐ | (2) | A - 2, 4, 6 | B - 1, 3, 5 |
| ☐ | (3) | A - 3, 5, 6 | B - 1, 2, 4 |
| ☐ | (4) | A - 1, 3, 4 | B - 2, 5, 6 |
| ☐ | (5) | A - 1, 3, 5 | B - 2, 4, 6 |

06. கீழே பேரண்டச் சூழலும், அவற்றுடன் தொடர்புடைய விசைகளும் தரப்பட்டுள்ளது. இவற்றுக்கிடையிலான சரியான தொடர்பினைக் காட்டும் தொகுதியினை தெரிவு செய்க?

| வணிகச் சூழல்கள் | விசைகள் |
|---|---|
| A - இயற்கைச் சூழல் | 1 - வரிகளும், வட்டி வீதமும் |
| B - அரசியல் சட்ட சூழல் | 2 - உள்ளீடுகளும், எரிபொருட்களும் |
| C - பூகோளச் சூழல் | 3 - சடங்குகளும், சம்பிரதாயங்களும் |
| D - சமூக கலாச்சார சூழல் | 4 - சட்டங்களும் விதிகளும் |
| E - பொருளாதாரச் சூழல் | 5 - இலத்திரனியல் வணிகமும் வர்த்தகமும் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ☐ | (1) | A - 1 | B - 2 | C - 3 | D - 4 | E - 5 |
| ☐ | (2) | A - 2 | B - 4 | C - 3 | D - 5 | E - 1 |
| ☐ | (3) | A - 3 | B - 1 | C - 5 | D - 2 | E - 4 |
| ☐ | (4) | A - 4 | B - 3 | C - 1 | D - 5 | E - 2 |
| ☐ | (5) | A - 2 | B - 4 | C - 5 | D - 3 | E - 1 |

07. A. வணிக நிறுவனமொன்று பின்வரும் நான்கு பிரதான தரப்பினர்கள் தொடர்பாக சமுகப் பொறுப்புக்களை நிறைவு செய்ய வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. இவை தொடர்பாக சரியான இணைப்பினைக் காட்டும் தொகுதி எது?

A - சமூகமும் சூழலும்
B - ஊழியர்கள்
C - வாடிக்கையாளர்கள்
D - உரிமையாளர்கள்

1 - நியாயமான கொடுப்பனவும், தொழிற்பாதுகாப்பும்
2 - நியாயமான விளைவுகளும், பொருளாதார அனுகூலமும்
3 - நியாயமாக செயற்படுத்தலும், உரிமைப் பாதுகாப்பும்
4 - வேலைவாய்ப்பும், பசுமை வணிகமும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ☐ | (1) | A - 1 | B - 2 | C - 3 | D - 4 |
| ☐ | (2) | A - 2 | B - 4 | C - 3 | D - 1 |
| ☐ | (3) | A - 3 | B - 2 | C - 1 | D - 4 |
| ☐ | (4) | A - 4 | B - 1 | C - 3 | D - 2 |
| ☐ | (5) | A - 4 | B - 3 | C - 1 | D - 2 |

B. வணிக ஒழுக்கநெறிகள் என்பதுவணிகத்தின் பல்வேறு தொழிற்பாடுகளுடன் தொடர்பு புடையதாகும். தேசிய, சர்வதேச தரநியமங்களைச் சரியாக கடைப்பிடித்தல் என்பது?

☐ 1 - சந்தைப்படுத்தடுல் சார் ஒழுக்க நெறியாகும்
☐ 2 - மனிதவளம் சார் ஒழுக்க நெறியாகும்
☐ 3 - உற்பத்தி சார் ஒழுக்க நெறியாகும்
☐ 4 - நிதி, கணக்கீடு சார் ஒழுக்க நெறியாகும்
☐ 5 - புலமைச் சொத்துக்கள் சார் ஒழுக்க நெறியாகும்

08. A. அரசாங்கம் வணிக முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்காகவும், ஒழுங்குபடுத்துவதற்காகவும் பல்வேறு வழிகளில் வணிகங்களின் மீது தலையிடுகின்றது?

A - குறைவான வட்டி வீதத்தில் கடன்களை வழங்குதல்
B - சலுகைக் கட்டணத்தில் மின்சாரம் வழங்குதல்
C - சமூகப் பொறுப்பு வரிகளை அறவீடு செய்தல்
D - கம்பனிகளை சட்டப்படி பதிவு செய்தல்
E - தனியாரிடமிருந்து முடிவுப் பொருட்களை கொள்வனவு செய்தல்

மேலுள்ள விடயங்களை கட்டுப்பாட்டாளர், கொள்கை வகுப்பாளர், உட்கட்டமைப்பு வழங்குபவர், வரி முகவர், வாடிக்கையாளர் எனும் அடிப்படையில் சரியாக ஒழுங்குபடுத்தும் தொகுதி எது?

☐ (1) A,B,C,D,E ☐ (3) E,C,A,B,D ☐ (4) D,A,B,C,E
☐ (2) C,A,B,E,D ☐ (5) E,D,C,B,A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

B. கீழ்வரும் தொகுதிகளில் நேரில் வரிவருமானமூலங்களாக மட்டும் கருதப்படக்கூடியவை எவை?

- ☐ 1 அனுமதிக் கட்டணம் / முத்திரைக் கட்டணம் / தண்டப்பணம்
- ☐ 2 கம்பனி வரி / வங்கி வரவுவரி / மூலதன ஆதாயவரி
- ☐ 3 வருமானவரி / பெறுமதி சேர்வரி / சமூகப் பொறுப்புவரி
- ☐ 4 உற்பத்தி வரி / கலால் வரி / சுங்கவரி
- ☐ 5 பெறுமதி சேர்வரி / தேச நிர்மாணவரி / வருமானவரி

09. கீழே அரசாங்க பொருளாதாரக் கொள்கைகள் A, B, C, D, எனவும், அவற்றுடன் தொடர்புடைய காரணிகள் 1,2,3,4 எனவும் தரப்பட்டுள்ளது. இவற்றுக்கிடையிலான தொடர்பினைக் குறித்துக் காட்டும் சரியான தொகுதி எது?

A - பிசுக்கால் கொள்கை
B - பணக் கொள்கை
C - சர்வதேச வர்த்தகக் கொள்கை
D - வரிக் கொள்கை

1 - அனுமதிப்பங்கு முறையினைக் கடைப்பிடித்தல்
2 - வாகன இறக்குமதித் தீர்வையினை அதிகரித்தல்
3 - அரசாங்க செலவினங்களைக் கட்டுப்படுத்தல்
4 - வட்டிவீதசெல்இடை வெளியினை ஒழுங்கு படுத்தல்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ☐ | (1) A - 1 | B - 2 | C - 3 | D - 4 |
| ☐ | (2) A - 2 | B - 4 | C - 1 | D - 3 |
| ☐ | (3) A - 3 | B - 1 | C - 2 | D - 4 |
| ☐ | (4) A - 4 | B - 3 | C - 2 | D - 1 |
| ☐ | (5) A - 3 | B - 4 | C - 1 | D - 2 |

10. வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனியொன்றின் மூலதனக் கட்டமைப்பின் கூறுகள் பகுதி "அ" விலும், பண்புகள் பகுதி "ஆ" விலும் தரப்பட்டுள்ளது. சரியான தொடர்பினைக் குறிக்கும் தொகுதியினைத் தெரிவு செய்க.

| பகுதி "அ" | பகுதி "ஆ" |
|---|---|
| A - சாதாரண பங்குகள் | 1 - கழிவு விலையுடன் வழங்குதல் |
| B - முன்னுரிமைப் பங்குகள் | 2 - தோற்றுவிப்பாளர்களுக்கு உரிமை வழங்குதல் |
| C - வணிகப்பத்திரம் | 3 - நீண்ட காலக்கடன் பத்திரம் |
| D - தொகுதிக் கடன் பத்திரம் | 4 - கூட்டங்களில் பங்கு பற்றுதல் |
| E - பின்னுரிமைப் பங்குகள் | 5 - உறுதியான பங்கிலாபம் வழங்குதல் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ☐ | (1) A - 1 | B - 2 | C - 3 | D - 4 | E - 5 |
| ☐ | (2) A - 2 | B - 4 | C - 5 | D - 3 | E - 1 |
| ☐ | (3) A - 3 | B - 1 | C - 4 | D - 2 | E - 5 |
| ☐ | (4) A - 4 | B - 5 | C - 1 | D - 3 | E - 2 |
| ☐ | (5) A - 5 | B - 4 | C - 3 | D - 2 | E - 1 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. பொதுக்கம்பனி தொடர்பான ஆவணங்கள் கீழே தரப்பட்டுள்ளது. இவற்றினை 2007(07) கம்பனிச் சட்டப்படி "A" அவசியமானவை, "B" அவசியமற்றவை என தொகுதியாக்கும் சரியான விடையனை தெரிவு செய்க?

P - முன்விபரணம்  S - அமைப்பு அகவிதிப்பத்திரம்
Q - ஆண்டறிக்கை  T - அமைப்பு புறவிதிப்பத்திரம்
R - வியாபார ஆரம்பத்திரம்  U - சட்ட முறைப் பிரகடனம்

- ☐ (1) A - P, Q, R  B - S, T, U
- ☐ (2) A - S, T, U  B - P, Q, R
- ☐ (3) A - T, U, R  B - P, Q, S
- ☐ (4) A - P,Q,S  B - R, T, U
- ☐ (5) A - P, Q, T  B - R, S, U

12. வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனியொன்றின் பங்கு மூலதனம் தொடர்பான விடயங்களில் தவறானது எது?

- ☐ (1) ஆரம்ப வழுங்கலும், பருவகால வழுங்கலும்
- ☐ (2) உரிமை வழுங்கலும், உபகார வழுங்கலும்
- ☐ (3) சாதாரண பங்குகளும், முன்னுரிமைப்பங்குகளும்
- ☐ (4) முன் விபரணமும், கடன் தீர்க்கும் ஆற்றல் சோதனையும்
- ☐ (5) வழுங்கும் இல்லமும், ஒப்புறுதி நிறுவனமும்

13. கீழே அரசதுறை நிறுவனங்கள் A,B,C,D எனவும் அவற்றுடன் தொடர்புடைய பண்புகள் 1,2,3,4 எனவும் தரப்பட்டுள்ளது.இவற்றுக்கிடையிலான சரியான தொடர்பினைக் காட்டும் தொகுதி எது?

A - அரசாங்க கம்பனிகள்
B - அரச திணைக்களங்கள்
C - அரச கூட்டுத்தாபனங்கள்
D - உள்ளுராட்சி அதிகார சபைகள்

1 - தனியாரும், அரசும், இணைந்த இலாப நோக்க முயற்சி
2 - அத்தியாவசிய சேவைகளை வழுங்குதல்
3 - ஊரக அபிவிருத்தியும், கட்டுப்பாடும்
4 - அரசியல் தலையீடும், சிவப்பு நாடாவும்

- ☐ (1) A - 1  B - 4  C - 2  D - 3
- ☐ (2) A - 2  B - 4  C - 3  D - 1
- ☐ (3) A - 3  B - 1  C - 2  D - 4
- ☐ (4) A - 4  B - 3  C - 2  D - 1
- ☐ (5) A - 1  B - 3  C - 2  D - 4

14. விலை கூறப்பட்ட கம்பனிகளின் அதிகரிப்பின் மூலமாக தேசியப் பொருளாதாரம் அடையக் கூடிய நன்மை எனக் கருத முடியாதது எது?

- ☐ (1) சேமிப்புக்களும், முதலீடுகளும் அதிகரிக்கும்
- ☐ (2) மூலதனச் சந்தை விரிவுபடுத்தப்படும்
- ☐ (3) அரசவரிவருமானங்கள் அதிகரிக்கும்
- ☐ (4) Blue Chips கம்பனிகளின் தொகை அதிகரிக்கும்
- ☐ (5) இரண்டாந்தர பங்குச்சந்தை நடவடிக்கைகள் விருத்தியடையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுத்தேடல்

ACCA

## அறிவுத்தேடல் சஞ்சிகை ACCA உடன் இணைந்து வழங்கும் கணக்கீடு பல்தேர்வு வினாத்தொகுப்பு

# The MCQ
Quiz Bank

அறிவுத்தேடல் சஞ்சிகைக்கென ACCA அனுசரணையில் கணக்கீட்டு கல்வியில் அனுபவமிக்க ஆசிரியர்களான M. J. M. இம்திஹான், A. நீவின் மற்றும் S. S. குமரன் ஆகியோரின் வினாத்தொகுப்பு இம்முறை இலவச இணைப்பில் இடம்பெறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வெற்றிக்கான உங்களது பாதையில் உங்களது எதிர்காலத்தைச் சிறப்பிக்கும் கற்கைதனைத் தெரிவுசெய்தல் வேண்டுமல்லவா?

வெற்றிக்கான உங்களது பாதையில் உங்களது எதிர்காலத்தைச் சிறப்பிக்கும் கற்கைதனைத் தெரிவுசெய்தல் வேண்டுமல்லவா? பாடசாலைக் கல்வியினைப் பதின்மூன்று வருடங்களாக கற்ற நீங்கள் கற்கை நிறைவடைந்த பின்னர் ஒரு கட்டமைப்பிலிருந்து சடுதியாக ஒரு சுயாதீனமான பரப்பினுள் நுளைகின்றீர்கள்.

ஏதிர்காலம் பற்றிய எண்ணற்ற கனவுகள் உங்களுள் தோன்றுகின்றது. உண்மையில் உங்களது கனவுகள் இன்றைய உலகிற்கு பொருத்தமானதாக இருக்கவேண்டும். எஞ்சியிருக்கும் உங்களது எதிர்கால வாழ்க்கையினை சிறந்த முறையில் திட்டமிட்டுக் கொள்ளவேண்டும். ஒரு கட்டிடத்திற்கு அத்திவாரமானது அவசியமானதோ அதே போன்று உங்களது எஞ்சியிருக்கும் வாழ்க்கை சிறப்பாக்கி கொள்ள நீங்கள் இரண்டு மூன்று வருடங்களில் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் முக்கியமானதாகும். இத்தகைய தீர்மானங்களை மேற்கொள்ளும் போது இன்றைய உலகில் காணப்படும் மிகப்பெரிய சவால் யாதெனில் உங்களுக்கு தொழில்சார் கற்கைநெறிகள் சந்தையில் கொட்டிக்கிடக்கின்றன. ஆனால் இத்தகைய தொழில்சார் கற்கைகளின் தெரிவு உங்களது எதிர்காலத்தில் தாக்கம் செலுத்தும் என்பதனை கருத்தில் கொள்ள வேண்டும். ஆகவே உங்களது வாழ்க்கை தரத்தை உயர்த்துகின்ற உயர்ந்த சம்பளத்தை பெற்றுத் தருகின்ற சமூக அந்தஸ்துடைய சூழல் பாங்கிற்கு ஈடு கொடுக்கக்கூடிய கற்கை நெறியை தெரிவு செய்ய வேண்டும்.

கணக்கீட்டுத் துறையானது இன்றைய உலகில் பல்வேறு வாய்ப்புக்களை ஏற்படுத்துகின்றது. கணக்காளர்கள் நிறுவனத்தின் செயற்பாட்டில் பிரதான இடத்தை வகிக்கின்றனர். வெற்றிகரமான முயற்சியாளர்களை உற்று நோக்கினால் அவர்கள் சிறந்த கணக்காளர்களாக இருப்பதனை அவதானிக்க முடியும். இன்று பல்வேறு நிறுவனங்களிலும் கணக்கீட்டுத் துறையிலும் மனித வளங்களை மிகப்பொருத்தமான வகையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான உந்துதல் காணப்படுகின்றது. ஆகவே இவ்வனைத்து தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்யக்கூடிய கற்கை நெறியை தெரிவு செய்ய வேண்டும். இன்றைய உலகில் பல்வேறு நிறுவனங்களில் ஆட்சேர்ப்பு செய்யும்போது அவ்வூழியத்தின் கணக்கீட்டு அறிவு பரீட்சிக்கப்படுகினறது. ஆகவே இத்தகைய சவால்களை நிவர்த்திக்கும் கற்கை நெறியொன்றை பின்பற்ற வேண்டுமல்லவா?

ACCA கற்கை நெறியானது கணக்கீட்டுத்துறையில் இருக்கும் திறமையானவர்களுக்கு சரியான தளத்தினை ஏற்படுத்துகிறது. உலகளாவிய ரீதியில் கணக்கீட்டுத் துறையென்றால் ACCA என்ற நிலை உருவாகியுள்ளது. ஒருவர் எந்த பின்னணியில் இருந்தாலும் அக்கற்கை நெறியானது அவர்களை சிறந்த கணக்காளர்களாக மிளிரச் செய்கிறது. இத்தகைய கற்கை நெறிதனை தெரிவு செய்யும்போது நீங்கள் பெறுகின் நன்மைகளை எண்ணிப்பாருங்கள். ACCA கற்கை நெறி உங்களை கணக்கியல் துறையில் சிறந்த மனிதர்களாக மாற்றும் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



M.J.M. இம்திஹான்
B.Com (Hons), Colombo
பொருளியல், கணக்கீட்டு ஆசிரியரும்,
சிரேஷ்ட்ட வரி அதிகாரியும்.
இறைவரித் திணைக்களம் (பே.மா) - கொழும்பு

"கணக்கீட்டு உள்ளீடுகளைப் பதிவு செய்தல்", "கணக்கீட்டுச் சமன்பாடு" தொடர்பிலான கணக்கீடு II இற்கான வினாக்கள் இங்கு தரப்படுகின்றன.

# கணக்கீடு - II

**01.** 2012 ஜனவரி 01ஆம் திகதி இருந்தபடி ஹிருணிகா சில்லறை வியாபாரத்தின் சொத்துக்களும் பொறுப்புக்களும் வருமாறு.

| | ரூபா |
|---|---|
| காணி | 285,000 |
| தளபாடமும் பொருத்தும் | 140,000 |
| இருப்பு | 80,000 |
| கடன்பட்டோர் - ரமேஸ் | 7,500 |
| - அருண் | 18,000 |
| வங்கி | 119,300 |
| சில்லறைக்காசு | 200 |
| கடன் கொடுத்தோர் - தயா | 4,600 |
| - சிவா | 1,300 |

ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற வியாபார நடவடிக்கைகளுக்கான மூல ஆவணங்கள் வருமாறு.

**அ) விற்பனைப்பட்டியல்.**

| | | |
|---|---|---|
| ஜனவரி 04 - ரமேஸ் | 4,400 ரூபா. | [ பட்டியல் இல 411 ] |
| 08 - அருண் | 19,800 ரூபா. | [ பட்டியல் இல 412 ] |
| 21 - சிவதாஸ் | 22,000 ரூபா. | [ பட்டியல் இல 413 ] |

**ஆ) கொள்வனவுப்பட்டியல்**

| | | |
|---|---|---|
| ஜனவரி 02 - தயா | 2,200 ரூபா. | [ பட்டியல் இல 44 ] |
| 08 - சன்டெல் ( தொலைபேசி நுகர்வு ) | 4,400 ரூபா | [ பட்டியல் இல 1410 ] |
| 19 - சிவா | 17,000 ரூபா. | [ பட்டியல் இல 104 ] |
| 21 - E.H குரே (தளபாடம் கொள்வனவு) | 22,000 ரூபா | [ பட்டியல் இல 714 ] |
| 27 - ஹிஷானி | 13,200 ரூபா. | [ பட்டியல் இல 71 ] |

**இ) பற்றுச்சீட்டு**

| | | |
|---|---|---|
| ஜனவரி 04 - ரமேஸ் | 7,500 ரூபா. | [ பற்றுச்சீட்டு இல161 ] |
| 06 - அருண் | 8,000 ரூபா. | [ பற்றுச்சீட்டு இல162 ] |
| 14 - விற்பனை | 38,500 ரூபா. | [ பற்றுச்சீட்டு இல163 ] |
| 20 - காணி விற்பனை | 60,000 ரூபா. | [ பற்றுச்சீட்டு இல164 ] |
| 28 - சிவதாஸ் | 15,000 ரூபா. | [ பற்றுச்சீட்டு இல165 ] |

**ஈ) காசோலைக் கச்சாத்து / காசோலை அடியிதழ்.**

| | | |
|---|---|---|
| ஜனவரி 03 - தயா | 4,000 ரூபா. | [ காசோலை இல 10011 ] |
| 10 - சன்டெல் | 4,400 ரூபா. | [ காசோலை இல 10012 ] |
| 25 - சிவா | 5,000 ரூபா. | [ காசோலை இல 10013 ] |
| 28 - சம்பளம் | 15,000 ரூபா. | [ காசோலை இல 10014 ] |
| 30 - கொள்வனவு | 21,000 ரூபா. | [ காசோலை இல 10015 ] |

**உ) நாட்குறிப்பு கச்சாத்து.**

ஜனவரி 31 - ரமேஸின் வருமதி அறவிடமுடியாக்கடனாக உறுதி செய்யப்பட்டது. [கச்சாத்து இல 18]

**ஊ) செலவுத்தாள்.**

ஜனவரி 29 - அருண் (திருப்பம்) 2,200 ரூபா [ செலவுத் தாள் இல 07 ]

**எ) சிறுசெலவுக் கச்சாத்து.**

| | | |
|---|---|---|
| ஜனவரி 04 - முத்திரை வாங்கியது | 48 ரூபா. | [ கச்சாத்து இல 72 ] |
| உபசரிப்புச் செலவு | 40 ரூபா. | [ கச்சாத்து இல 73 ] |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 09 - புகைப்படப் பிரதித்தாள் கொள்வனவு | 175 ரூபா. | [ கச்சாத்து இல 74 ] |
| 10 - முச்சக்கர வண்டி வாடகை | 90 ரூபா. | [ கச்சாத்து இல 75 ] |
| 14 - தேயிலை, சீனி கொள்வனவு | 160 ரூபா. | [ கச்சாத்து இல 76 ] |
| 18 - தபால் உறை வாங்கியது | 50 ரூபா. | [ கச்சாத்து இல 77 ] |
| பஸ் கட்டணம் | 60 ரூபா. | [ கச்சாத்து இல 78 ] |
| 27 - அழிமை வாங்கியது | 75 ரூபா. | [ கச்சாத்து இல 79 ] |
| 28 - பிஸ்கட் வாங்கியது | 60 ரூபா. | [ கச்சாத்து இல 80 ] |
| 31 - தபால் அட்டை வாங்கியது | 70 ரூபா. | [ கச்சாத்து இல 81 ] |

**மேலதிக தகவல்கள்.**

1. இந்நிறுவனத்தில் ஜனவரி 01 இலும், 29இலும் சில்லறைக்காசு மீள்நிரப்பப்பட்டது.
2. சில்லறைக்காசு முற்பணமானது ஜனவரி 01 இல் 1,000 ரூபாவாகவும் பின்னர் முற்பணம் விரைவாகத் தீர்வடைகின்றமையால் ஜனவரி 29இல் இருந்து 1,500 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டது.

**வேண்டப்படுவது.**

1. ஜனவரி மாதத்தின் மேற்போந்த கொடுக்கல்வாங்கல்களையும், நிகழ்வுகளையும் தேவையான முதன்மை ஏடுகளில் பதிந்து காட்டுக.
2. முதன்மை ஏட்டுப் பதிவுகளை அடிப்படையாகக் கொண்டு பொதுப்பேரேட்டில் கட்டுப்பாட்டுக்கணக்குகள் உட்பட தேவையான கணக்குகளைத் தயாரிக்க.
3. ஜனவரி 31 இல் பொதுப்பேரேட்டில் பரீட்சை மீதியினைத் தயாரிக்க.

**02.** "காமினி முயற்சிகள்" நிறுவனத்தின் 2012 மே மாதத்தில் இடம்பெற்ற வியாபார நடவடிக்கைகளும், சீராக்கங்களும் வருமாறு.

அ) திரவ நெருக்கடியை சமாளிக்கும் நோக்கில் உரிமையாளர் காசாக மேற்கொண்ட மேலதிக முதலீடு 70,000 ரூபா

ஆ) உரிமையாளர் பிரத்தியேக கடனட்டை கூற்றிற்கிணங்க நிறுவனத்தால் செலுத்திய கடனட்டை வைப்புத் தொகை 24,000 ரூபா.

இ) ஒரு மாத தவணைக் காலத்தில் கடனுக்கு கொள்வனவு செய்த மீள் விற்பனைப் பண்டங்கள் ரூபா 21,000.

ஈ) 18,000 ரூபா கொள்விலையிலான பண்டங்கள் 50% இலாபம் வைத்து விற்பனை செய்யப்பட்டது.

உ) செலுத்திய செயற்பாட்டுச் செலவுகள் 7,500 ரூபா

ஊ) ஏற்கனவே விஷேட ஐயக்கடன் ஏற்பாட்டிற்குள்ளாகியிருந்த வாடிக்கையாளரின் வருமதி 4,400 அறவிடமுடியாக்கடனாயிற்று.

எ) மாதத்திற்கான கணனி மற்றும் கணனிமென் பொருட்களின் தேய்மானம் 500 ரூபா

**வேண்டப்படுவது :**

1. மேற்போந்த கொடுக்கல் வாங்கல்களையும், சீராக்கங்களையும்,
   "மூலதனம் + வருமானம் - செலவினம் + பொறுப்பு = சொத்து" என்ற கணக்கீட்டு சமன்பாட்டில் ஏற்படுத்தும் மாற்றங்களை குறிப்பிடுக.
2. மேற்தரப்பட்ட தரவுகளுக்கமைய
   அ) எளிய வருமான கூற்று.
   ஆ) எளிய உரிமை மாற்றக் கூற்று (தரப்பட்ட உருப்படிகளை மாத்திரம் கவனத்தில் கொள்ளவும்).

**03.** கீழ்வரும் ஒவ்வொரு வியாபார நடவடிக்கைகளையும் சீராக்கங்களையும்
"மூலதனம் + பொறுப்பு = சொத்து"
என்ற கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்படுத்தும் மாற்றங்களை குறிப்பிட்டுக் காட்டுவதுடன் வருமானக்கூற்றையும் தயாரிக்க.

அ) தொழில் உரிமையாளரின் ஊழியர் சார்பிலான ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்பு 12,000 ரூபா

ஆ) நிதிக்கம்பனியில் உள்ள காலவைப்பிற்கான அட்டுறுவட்டி 25,000 ரூபா.

இ) அட்டுறுச் சம்பளம் 12,000 ரூபா

ஈ) ஐயக்கடன்களுக்கான ஏற்பாடு 17,000 ரூபா

உ) 8,000 ரூபா பெறுமதியான பண்டங்களை உரிமையாளர் தனது சொந்த உபயோகத்திற்காக எடுத்துச் சென்றார்.

ஊ) 40,000 ரூபா காசு முன்னைய காசாளரால் களவாடப்பட்டது. இத்தொகை வருமானக்கூற்றில் வரவு வைத்து பதிவழிக்கப்பட்டது. எனினும் முன்னைய காசாளரினால் பிணையாக வைப்புச்செய்யப்பட்டுள்ள 100,000 ரூபா பணத்திலிருந்து அத்தொகையை ஈடுசெய்யமுடியும்.

எ) ஆண்டிற்கான காட்சியறை பொருத்துக்களின் தேய்மானம் 2,500 ரூபா

ஏ) உரிமையாளர் தனது சொந்த கடனட்டையைக் கொண்டு செலுத்திய நிறுவனத்தின் தொலைபேசிக் கட்டணம் 6,500 ரூபா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**04.** பின்வரும் செலவினக் கூறுகள் மூலதனச் செலவு, வருமானச் செலவு மற்றும் பிற்போடப்பட்ட வருமானச் செலவு என்பவற்றுள் எதனை அடையாளப்படுத்தும் என கூறுக.

அ) பொது முகாமையாளரின் அலுவலக அறைக்கான காற்றுச் சீராக்க வசதிக்கான (Air conditioning) கிரயம்

ஆ) அண்மையில் இரண்டாந் தரச் சந்தையில் (2nd Hand Market) கொள்வனவு செய்யப்பபட்ட தளபாடத்திற்கான வர்ணம் பூசுவதற்கான கிரயம்

இ) உள்ளுராட்சி மன்றத்தில் வருடாந்த வாகன அனுமதிப்பத்திர வரி புதுப்பித்தல் செய்தல் கிரயம்.

ஈ) இயந்திர நிறுவுதலுக்கென (Machinery Installation) ஊழியர்களுக்கு செலுத்திய கூலிக்கிரயம்.

உ) அரசாங்க கட்டளைக்கு அமைய திரைப்பட அரங்கொன்றில் வெளியேறும் வழிகளை (Exits) அதிகப்படுத்துவதற்கான கிரயம்.

ஊ) திரைப்பட அரங்கை மீள் அலங்கரித்தலுக்கான (Re-Decorationg) கிரயம்.

எ) சினிமா அரங்கொன்றில் இறங்குவரிசை படிக்கட்டு ஆசனங்களை (gallery) மேலதிகமாக உருவாக்குவதற்கான கிரயம்

ஏ) பழைய நிறுவனம் ஒன்றை கொள்வனவு செய்வதனூடாக செலுத்திய நன்மதிப்புக்கான கிரயம்

ஐ) புதிய வகை உற்பத்தி பொருளுக்கென செய்யப்பட்ட பாரிய விளம்பரச் செலவு (Heavy Advertisement)

ஒ) பெரிய கட்டிடம் ஒன்றைக் கட்டுவதற்காக மூலப்பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்கென அமைக்கப்பட்ட தற்காலிக வேலை அறைக்கான கிரயம்.

**05.** 2012 மார்ச் 31 ஆம் திகதி இருந்தவாறான வரையறுத்த காஞ்சனா கம்பனியினது பரீட்சை நிலுவையிலிருந்த வித்தியாசமானது தொங்கற் கணக்கிற்கு செலவில் மாற்றப்பட்டு உடனடியாக திட்ட வரைபு வருமானக்கூற்று தயாரிக்கப்பட்டது. பின்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வானது பின்வரும் வழுக்களை வெளிப்படுத்தி நிற்கின்றது.

[நிறுவனம் கட்டுப்பாட்டுக் கணக்கை பொதுப்பேரேட்டில் பேணி நிற்கின்றது]

1. கொள்வனவுத் திரும்பல் ஏட்டில் 2000 ரூபா குறைவாக பதிவுசெய்யப்பட்டுள்ளது.
2. விற்பனை தின ஏட்டில் 5,000ரூபா விற்பனை ஒன்று தவறவிடப்பட்டுள்ளது.
3. பெறுமதிசேர்வரி பதிவுசெய்யாத இந்நிறுவனம் 1,200 ரூபா பெறுமதிசேர்வரி உள்ளடங்கலான செலுத்த வேண்டிய விளம்பரச்செலவு 11,200 ரூபாவை விளம்பரச்செலவுக் கணக்கில் மாத்திரம் உள்ளடக்கி இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
4. வாகனத்தில் எரிபொருள் சிக்கனத்தை ஏற்படுத்துவதற்காக 8000ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்ட நுட்ப அபிவிருத்தியானது வாகனப் பராமரிப்புச் செலவானமாகக் காட்டப்பட்டுள்ளது.
5. ஊழியர்களிடமிருந்து அறவிட்ட ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்பு 17,000ரூபா சம்பளக் கட்டுப்பாட்டுக் கணக்கில் மாத்திரம் பதியப்பட்டிருந்தமை. கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

**வேண்டப்படுவது:**

1) மேற்போந்த வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவு.
2) தவறு திருத்தத்தினால் தேறிய இலாபத்தில் ஏற்பட்ட விளைவு.
3) தொங்கற் கணக்கு.

**சிரேஷ்ட்ட கணக்கீட்டு ஆசிரியர் A. நீவின் அவர்களின் இதழ் 25 - வினாக்களுக்குரிய விடைகள்**

| வினா இலக்கம் | விடை | வினா இலக்கம் | விடை |
|---|---|---|---|
| 01 | 133,000/31,000/102,000 | 11 | 21:7:8 |
| 02 | 100,000 | 12 | பாலன் - 13,000 குறையும்<br>தினா - 8,000 அதிகரிக்கும் |
| 03 | A,B | | |
| 04 | 405,000 - 435,000 | 13 | 28,550 இலாபம் |
| 05 | 84,600 | 14 | அ, ஆ, இ |
| 06 | 330,000 or 325,000 | 15 | 850,000 |
| 07 | 5,000 இலாபம் | 16 | 50,000 |
| 08 | அ - 25,000 ஆ - 20,000<br>இ - 48,750 ஈ - 65,000 | 17 | 30,000 |
| | | 18 | 22,100 |
| 09 | 135 பேர் | 19 | 39,500/360,000 |
| 10 | 22,080/92 பேர்/21880 | 20 | 83,000<br>தேய்வு கணக்கு வரவு 18,250<br>சொத்து கணக்கு செலவு 18,250 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



A. நீவின்
B.Com (Hons), Dip.in.Ed
சிரேஷ்ட்ட கணக்கீட்டு ஆசிரியர்
புனித சவேரியார் பெண்கள் கல்லூரி
(தேசிய பாடசாலை) - மன்னார்.

**01**. A - வணிக கணக்கீட்டு அலகு ஒன்றில் காணப்படும் வரையறுக்கப்பட்ட வளங்களில் மனித வலுவும் ஒன்று ஆகும்.

B - கடும் மழை காரணமாக களஞ்சியத்தில் இருந்த வியாபார இருப்புக்களில் ரூ 40,000 கிரயமான சில பண்டங்கள் மழைநீரால் பழுதடைந்துள்ளதென்பது வணிக கொடுக்கல் வாங்கல்களில் ஒன்றாகும்.

C - அக்கறை செலுத்தும் தரப்பினருக்கு பயனுள்ள தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு ஏற்றவகையில் பொருளாதார தகவல்களை வழங்கும் முழுமையான செயற்பாடு கணக்கீடு ஆகும்.

# எக் கூற்று சரியானது/சரியானவை என்பதனை தெரிவு செய்க

(1) **AB** (2) **BC** (3) **AC** (4) **ABC** (5) **A** மட்டும்.

**02**. A - மனித சமூதாயத்தின் வேலையில்லாப் பிரச்சினையை தீர்த்து பொருளாதார அபிவிருத்தியின் காரணமாக வாழ்க்கைத்தரம் உயர்த்தப்படுவதன் மூலம் சமூகப் பொறுப்பு கணக்கீட்டின் ஊடாக நிறைவேற்றப்படுகின்றது எனலாம்.

B - பலதரப்பட்ட வாடிக்கையாளர்களது நடத்தைப்பாங்கு தொடர்பில் வணிகம் கவனஞ்செலுத்துதல் என்பது ஒரு நதிசாராத தகவல் ஆகும்.

C - முகாமையாளரும், முயற்சியாளரும் உச்சப்பயனை பெறும் வகையில் கணக்கீட்டுத் தகவல்களை உருவாக்குதலும் முன்வைத்தலுமான கருமம் நிதிக் கணக்கீடு ஆகும்.

# எக் கூற்று சரியானது/சரியானவை என்பதனை தெரிவு செய்க

(1) **AB** (2) **BC** (3) **AC** (4) **ABC** (5) **B** மட்டும்.

**03**. A - வணிகங்கள் தமது வாடிக்கையாளரை கவரக்கூடிய விதமாக தமது கணக்கு பதிவு முறையை தயாரிக்க வேண்டும் என்பது கணக்கீட்டின் தரப்பண்புகளில் "பொருத்தமான தன்மை" என்பதனை தெளிவு படுத்துகின்றது.

B - மூலஆவணங்களை ஆதாரப்படுத்தி கணக்கீட்டுப்பதிவு மேற்கொள்ளும் செய்முறை கணக்கீட்டின் தரப்பண்புகளில் "சரியான தன்மை" என்பதனை தெளிவு படுத்துகின்றது.

C - நடப்பு வருட நிதிப் பெறுபேறுகளை கடந்தகால பெறு பேறுகளுடனும், ஏனைய நிறுவனங்களுடன் வாய்ப்பு பார்ப்பதற்கு ஏற்ற விதமாக தயாரிப்பது கணக்கீட்டின் தரப்பண்புகளில் "ஒப்பிடக்கூடிய தன்மை" என்பதனை தெளிவு படுத்துகின்றது.

# எக் கூற்று சரியானது/சரியானவை என்பதனை தெரிவு செய்க

(1) **AB** (2) **BC** (3) **AC** (4) **ABC** (5) **C** மட்டும்.

**04**. A - செயற்பாட்டு, முதலீட்டு, நிதி போன்ற வகுதிகள் நிதி நிலை மாற்றக்கூற்று தொடர்பான மூலகங்கள் எனக் கூறப்படுகின்றது

B - கணக்கீட்டு சமன்பாடு ஒன்றில் நிதி நிலைக்கூற்றின் மூலகங்கள் மட்டும் வெளிப்படுத்த முடியும்.

C - வருமானக்கூற்று ஒன்றின் மூலகங்கள் செலவு, வருமானம் என்பவையாக மட்டுமே காணப்படுகின்றது.

D - உரிமைத்துவத்தில் ஏற்படுகின்ற அதிகரிப்பிற்கு வணிக செயல்திறன் தொடர்பான விளைதிறனின் சாதகமான நிலையும் ஒரு காரணமாகும்

# எக் கூற்று சரியானது/சரியானவை என்பதனை தெரிவு செய்க

(1) **AB** (2) **BC** (3) **CD** (4) **AC** (5) **BDC** மட்டும்.

**05**. A - இலங்கை அரசானது துணிகளுக்கான (மூலப்பொருள்) இறக்குமதிக்கு வரி விடுதலையளித்து தைத்த ஆடைகளின் இறக்குமதிக்கு தடைவிதித்துள்ளது என்பது ஒரு சமூகக் கலாச்சாரக் காரணியாகும்.

B - எண்ணை இறக்குமதி நாடுகளின் விலை அதிகரிப்பால் இலங்கையில் எரிபொருளின் விலை அதிகரித்துக் கொண்டு செல்வது ஒரு பொருளாதார சூழல் காரணியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

C - 2007 ம் ஆண்டு 7ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் படி கம்பனிகள் தமது வழமையான கணக்கீடு நடைமுறையை மாற்றம் செய்யவேண்டி நிலை ஏற்பட்டது. சட்டச்சூழல் காரணியாகும்.

D - சுனாமி அனர்த்தம் காரணமாக இலங்கையின் ஒரு சில பாகங்களில் கட்டிடப்பொருளுக்கான கேள்வி அதிகரித்திருந்தது. இது ஒரு இயற்கைச் சுழல் காரணியாகும்.

# எக் கூற்று சரியானது/சரியானவை என்பதனை தெரிவு செய்க

(1) **ABC** (2) **BCD** (3) **ACD** (4) **ABCD** (5) **BD**

**06.** A - கடன் கொடுத்தோர் ஒருவருக்கு ரூ 18,000 செலுத்திய போது அவரது ரூ 20,000 கடன் தீர்க்கப்பட்டது

B - ரூ 3,000 வருமதியான கடன்பட்டோர் ஒருவரிடம் இருந்து அவரது கடன் அறவிடமுடியாது போனது.

C - வங்கிகடன் தவணைக்கட்டணம் ரூ 10,000 செலுத்தப்பட்டது. இக்கட்டணம் ரூ 1,000 வட்டியை உள்ளடக்கியுள்ளது.

D - நிறுவனம் நடைமுறையல்லாச் சொத்துக்களின் மீது மேற்கொண்டுள்ள தேய்வுத் தொகை ரூ 4,000 ஆகும்.

# நிகழ்வாக மட்டும் கருதக்கூடியது எதுவென தெரிவு செய்க

(1) **AB** (2) **AC** (3) **AD** (4) **BD** (5) **CD**

**07.** A - தேறிய சொத்தில் ஏற்படும் அதிகரிப்பானது, வருமானத்தில் ஏற்படும் அதிகரிப்பிலும் பார்க்க செலவில் ஏற்படும் அதிகரிப்பு குறைவானதாக இருத்தலாகும்.

B - செலவுத் தொகையில் ஏற்படுகின்ற ரூ 20,000 குறைவும், தேறிய சொத்தில் ஏற்படும் ரூ 5,000ஐ அதிகரிப்பும், சொத்தில் ரூபா 25,000 பெறுமதியை அதிகரிக்க ஏதுவாக அமையும்

C - நடைமுறையல்லாச் சொத்தில் ஏற்படுகின்ற ஒரு குறைவு, அதே அளவு பெறுமதியால் தேறிய சொத்தைக் குறைப்பதில்லை.

D - சொத்தில் ஏற்படுகின்ற குறைவும், தேறிய சொத்தில் ஏற்படுகின்ற குறைவும், பொறுப்பில் ஏற்படுகின்ற குறைவிற்கு சமமாக அமையும்.

# எக் கூற்று சரியானது/சரியானவை என்பதனை தெரிவு செய்க

(1) **AB** (2) **CD** (3) **ABC** (4) **BCD** (5) **ABCD**

**08.** A - மூடிய கணக்கு வகைகள் அனைத்தும் நிதிக் கூற்று தயாரிக்கும் போது நிதி நிலைக் கூற்றில் வெளிப்படுத்தப்படும்..

B - காசு பாய்ச்சல் கூற்றுறானது காசு அடிப்படையில் தயாரிக்கப்படும் நிதிக் கூற்றின் ஒரு வகுதியாகும்.

C - ஐந்து வகை பேரேட்டுக்கணக்குளும் நிறுவனம் தொடர்ச்சியாக பலகாலம் செயற்படும் என்ற அடிப்படையில் நிதிக்கூற்று தயாரிக்கப்படுகின்றது

# எக் கூற்று சரியானது/சரியானவை என்பதனை தெரிவு செய்க

(1) **A** (2) **B** (3) **C** (4) **AB** (5) **BC**

**09.** A - சொத்துக்கணக்கு | B - பொறுப்புக்கணக்கு

C - உரிமைத்துவக் கணக்கு | D - செலவுக் கணக்கு

E - வருமானக் கணக்கு

வரவு, செலவு பக்க பதிவுகள் குறித்த கணக்கின் மீதிகளை முறையே குறைவடைதலுக்கும், அதிகரித்தலுக்கும் ஏதுவான கணக்குகளை கொண்டுள்ள தொகுதி எது?

(1) **ABC** (2) **BCD** (3) **BCE** (4) **CDE** (5) **ADE**

**10.** A - ரூ 200,000 பெறுமதியில் தளபாடம் கடனுக்கு வாங்கப்பட்டது.

B - திருப்பி பெறப்பட்ட விற்பனைப்பண்டங்களின் பெறுமதி ரூ 4,000.

C - வைப்பிலிட்டு மறுக்கப்பட்ட காசோலையின் பெறுமதி ரூ 10,000.

D - தபால் செலவுகளுக்காக சில்லறை காசாளரால் வழங்கியுள்ள காசுத் தொகை ரூ 480.

மேற்குறித்த கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்யப்பயன்படுத்தும் முதன்மை ஏடுகளை கொண்டுள்ள தொகுதிகளில் சரியானது எது?

(1) A - காசேடு B - உட்திருப்பல் ஏடு C - காசேடு D - காசேடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) A - பொதுநாளேடு B - உட்திருப்பல் ஏடு C - காசேடு D - காசேடு
(3) A - காசேடு B - உட்திருப்பல் ஏடு C - காசேடு D - சில்லறை காசேடு
(4) A - பொது நாளேடு B - வெளித்திருப்பல் ஏடு C - காசேடு D - சில்லறை காசேடு
(5) A - பொது நாளேடு B - உட்திருப்பல் ஏடு C - காசேடு D - சில்லறை காசேடு

**11.** வணிகமொன்றின் 31.12.2010 திகதியில் பேரேட்டு கணக்கின் கடன்வருமதி தொகை ரூ 100,000 01.01.2011 ற்கு முன்கொண்டு வரப்பட்டு, பின்னர் அவரிடம் இருந்து வருமதியான தொகையில் 80% மட்டும் காசாக பெறப்பட்டிருந்தது. மிகுதி அறவிடமுடியாத கடனாக பதிவழிப்பு செய்யப்பட்டது. எனின் அவ் கொடுக்கல் வாங்கல்களையும் நிகழ்வுகளையும் ஏடுகளில் பதிவிடப் பயன்படுத்தும் மூல ஆவணங்களை ஒழுங்கு முறையாகக் குறிப்பிடுக.
(1) பொதுநாட்குறிப்பு கைச்சாத்து, கைச்சாத்து, பொதுநாட்குறிப்பு கைச்சாத்து
(2) பொதுநாட்குறிப்பு கைச்சாத்து, பற்றுச் சீட்டு, பொதுநாட்குறிப்பு கைச்சாத்து
(3) கைச்சாத்து, பொதுநாட்குறிப்பு கைச்சாத்து,
(4) பற்றுச் சீட்டு, பொதுநாட்குறிப்பு கைச்சாத்து,
(5) தொடக்கப்பதிவு ஏடுகள், பற்றுச் சீட்டு, பொதுநாட்குறிப்பு கைச்சாத்து

**12.** A - ஒத்த தன்மையுடைய கொடுக்கல் வாங்கல்கள் ஒரே ஏட்டில் பேணக்கூடியதாக இருக்கும்.
B - வாடிக்கையாளர் வழங்குனரிடம் நம்பிக்கை தன்மையை உறுதிப்படுத்த முடியும்.
C - மிகச்சிறந்த கட்டுப்பாட்டுடன் நடவடிக்கைகளை மேற் கொள்ள முடியும்.
D - வழுக்கள் இடம்பெறுவது தடைப்படும்.
E - இடம் பெறக்கூடிய வழுக்களை விரைவாக வெளிப்படுத்த முடியும்.
மேற் குறிப்பிடப்பட்டவைகளில் மூலஏடுகளை தயாரிப்பதன் மூலம் பெறக்கூடிய பயன்களில் ஒன்றாக கருதமுடியாதது எதுவென தெரிவு செய்க.
(1) A (2) B (3) C (4) D (5) E

**13.** வணிகமொன்றினது பதிவுக்குட்பட்ட கணக்கீட்டுத் தகவல்கள் வருமாறு.
கடன் கொள்வனவுகள் ரூ 400,000 காசுக் கொள்வனவுகள் ரூ 150,000
கொள்வனவு திருப்பம் ரூ 20,000 கடன்கொடுனர் மீதியில் ஏற்பட்ட குறைவு ரூ 30,000
வங்கியால் கடன்கொடுத்தோருக்கு வழங்கியதில் மறுக்கப்பட்டுள்ள காசோலை பெறுமதி ரூ 40,000
கடன் கொடுனருக்கு வழங்கிய காசோலையின் பெறுமதி ரூ 280,000
கடன் கொடுனருக்கு செலுத்தியுள்ள காசுத் தொகை யாது?
(1) ரூ 210,000 (2) ரூ 260,000 (3) 320,000 (4) 150,000 (5) ரூ 170,000

**14.**
2012 ஓகஸ்ட் மாத காசேடு (வங்கி நிரல்)

| | | | |
|---|---|---|---|
| 1.8.2012 மீ/வ/நிலுவை | 40,000 | வரைந்து வழங்கிய காசோலைகள் | 290,000 |
| மொக்க வைப்புக்கள் | 310,000 | 31.08.2012 மீ/வ/நிலவை | 60,000 |
| | 350,000 | | 350,000 |

ஓகஸ்மாத வங்கி கூற்றில் குறித்த மாதத்தில் செலவுவைக்கப்பட்டுள்ள காசோலைகளின் பெறுமதி ரூ 220,000 ஆகவும், வரவு வைக்கப்பட்டுள்ள காசோலைகளின் பெறுமதி ரூ 270,000 ஆகவும் காணப்பட்டது. எனின் 31.08.2012 ல் வங்கி கூற்று மீதி யாது?
(1) ரூ 10,000 செலவு (2) ரூ 90,000 செலவு (3) ரூ 10,000 வரவு
(4) ரூ 90,000 வரவு (5) ரூ 260,000 செலவு

**15.** வணிகமொன்றின் சில்லறைச் செலவு வசக்கட்டு முற்பணத் தொகை மாத தொடக்கத்தில் மீள் நிரப்பப்பட்டு ரூ 1,000 ஆக பராமரிப்பது வழக்கம்.
31.12.2011 ல் சில்லறைக் காசு மீதி ரூ 350 ஆகவும், 2012 ஜனவரி மாத சிறுசெலவு கைச்சாத்து ஆவணங்களின் மொத்தப் பெறுமதி ரூ 710 ஆகவும் இருந்தது. 1 பெப்ரவரி முதல் சில்லறைச் செலவு வசக்கட்டு முற்பணத்தொகையானது 25% தால் குறைப்பதற்கு முகாமை தீர்மானித்துள்ளது. எனின் 28.02.2012 மீள் நிரப்பு செய்யப்பட வேண்டிய சிறு செலவுத் தொகையாது?
(1) ரூ 710 (2) ரூ 290 (3) 460 (4) 40 (5) ரூ 410

**16.** குமார் கம்பனி சில்வா வாணிபத்திற்கு 20.5.2012ல் ரூ 400,000 பட்டியல் விலையான பண்டங்களை 10% வியாபாரக்கழிவில் விற்பனை செய்தது. இதன் போது பட்டியலில் குறிப்பிடப்பட்டிருந்த நிபந்தனை வருமாறு: "20.06.2012 ற்குள் பணம் செலுத்தப்படுமாயின் 5% காசுக் கழிவு வழங்கப்படும்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10.06.2012ல் சில்வா வாணிபம் ரூ 190,000 காசு செலுத்தி கடனில் ஒரு பகுதியை தீர்த்த போதும், மிகுதிக்கடன் 20.07.2012 வரை தீர்க்கப்படாதிருந்தமையால் குமார் கம்பனியால் ரூ 6,000 வட்டி விதிக்கப்பட்டது. எனின் 20.07.2012ல் உள்ள சில்வா வாணிபத்தின் சென்மதியாளர் தொகை யாது?

(1) ரூ 154,000 (2) ரூ 166,000 (3) 176,000 (4) 164,000 (5) ரூ 160,000

**17.** A - வழுக்கள் திருத்தப்படும் பதிவுகள்

B - ஆதனம்,பொறி, உபகரணம் தொடர்பான கடன் விற்பனை பதிவுகள்.

C - கணக்குகளை மூடும் பதிவுகள்.

D - அனைத்து கடன் கொள்வனவுகளுக்குமான பதிவுகள்

E - மேலதிக சீராக்கங்களுக்கான பதிவுகள்.

மேற்குறிப்பிட்டவைகளில் எது பொதுதினசரியில் பதியப்படாத பதிவாகும்.

(1) A (2) B (3)C (4) D (5) E

**18.** வணிகமொன்றின் பரீட்சை மீதி வரவு செலவு பக்கம் சமப்படாமையால் தொங்கல் மீதி காணப்பட்டது. இவ்வழுக்களுடன் இறுதி நிதிக் கூற்று தயாரிக்கப்பட்டு தேறிய இலாபம் பெறப்பட்டுள்ளது.

- கடன்பட்டோரிடம் பெற்ற காசு ரூ 6,000 காசு விற்பனையாகப் பதிவிடப்பட்டிருந்தது.
- வெளித்திரும்பல் நாளேடு கூட்டும் போது ரூ 2,000 குறைவாகக் கூட்டப்பட்டிருந்தது.
- உபகரணக் கொள்வனவு ரூ 15,000 உபகரணக் கணக்கில் ரூ 5,000 என பதிவிடப்பட்டிருந்தது.

| | பரீட்சை மீதியில் ஏற்பட்டிருக்க கூடிய தொங்கல் மீதி (ரூபா) | வழுக்களின் காரணமாக தேறிய இலாபத்தில் ஏற்பட்டிருக்கும் தேறிய விளைவு (ரூபா) |
|---|---|---|
| (1) | 8,000 செலவு | 4,000 அதிகம் |
| (2) | 8,000 வரவு | 4,000 குறைவு |
| (3) | 8,000 வரவு | 4,000 அதிகம் |
| (4) | 12,000 வரவு | 4,000 அதிகம் |
| (5) | 8,000 செலவு | 4,000 குறைவு |

**19.** 31.03.2012 ல் நிமல் வணிகத்தின் கடன் கொடுத்தோர் துணைப்பேரேட்டு கணக்கு விபரம் வருமாறு:

| | |
|---|---|
| அமலன் | ரூ 4,000 |
| கமலன் | ரூ (3,000) |
| விமலன் | ரூ 14,900 |

பின்வரும் தவறுகள் துணைப்பேரேட்டில் இடம்பெற்றுள்ளது கண்டறியப்பட்டுள்ளது.

- விமலனிடம் இருந்து பெற்றகழிவு 1,000ஆனது அவருடைய கணக்கில் ரூ 100என பதிவிடப்பட்டுள்ளது.
- அமலனது ரூ 3,000 கிரயப்பட்டியல் ஒன்று அவருடைய கணக்கில் இடம்பெறவில்லை.
- கமலனுடைய1.4. 2011 ல் இருந்த ஆரம்ப செலவுமீதி ரூ 1,000 தவறுதலாக வரவு மீதியாய கருதப்பட்டுள்ளது.

| | சீராக்கிய பின்னர் துணைப்பேரேட்டு மொத்த செலவு மீதி (ரூபா) | சீராக்கிய பின்னர் துணைப்பேரேட்டு வரவு மீதி (ரூபா) |
|---|---|---|
| (1) | 23,000 | 3,000 |
| (2) | 22,000 | 2,000 |
| (3) | 23,900 | 3,900 |
| (4) | 23,000 | 3,000 |
| (5) | 22,000 | 3,000 |

**20.** A - நிதி நிலை, இலாபம் உழைத்தல், நிதிநிலை மாற்றம் தொடர்பான தீர்மானமெடுத்தலுக்கான தகவல்களை வழங்குதல்.

B - சொத்து, பொறுப்பு, உரிமை, வருமானம், செலவு என்பவற்றை நிதிக் கூற்றில் வெளிப்படுத்தல்.

C - வணிகத்தில் பொருளாதார நன்மைகள் உள்வரல், அல்லது வெளிச் செல்லல் தொடர்பான கிரயம் ல்லது பெறுமதி பண அடிப்படையில் பதிவு செய்தல்..

D - மூலஆவணங்களை சான்றுப்படுத்தி நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல்.

E - தரவுகளை பொழிப்பாக்கி பின்னர் நிதிக்கூற்றில் ஒழுங்கு முறையாகப் பதிவிடுதல்.

நியமசட்டகத்தின்படி கீழே குறிப்பிடப்படுகின்ற அதன்பகுதிகளை தெளிவாக விபரிப்பது எது?

(1) A -நோக்கம், B -தரப்பண்புகள், C -மூலகங்கள், D -இனம்காணல், E - அளத்தல்

(2) A -நோக்கம், B -தரப்பண்புகள், C -இனம்காணல், D மூலகம், E - அளத்தல்

(3) A -நோக்கம், B -மூலகம், C -அளத்தல், D -தரப்பண்பு, E -இனம் காணல்

(4) A -நோக்கம், B -அளத்தல், C -இனம்காணல், D -தரப்பண்பு, E - மூலகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



S.S. குமரன்
B.B.A
சிரேஷ்ட்ட கணக்கீட்டு ஆசிரியர்
மட்டு. ஏறாவூர்

(01) கணக்கீடு தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் எவை சரியானவை?

A. கணக்கீடு ஒரு "சமூக விஞ்ஞானமாகும்" ஏனெனில் அது கணக்கீட்டுச் சூழல் காரணிகளில் ஏற்படுகின்ற மாற்றங்களுக்கேற்ப மாற்றமடைந்து வருகின்றது

B. பயன்பாட்டாளர்களின் தகவல் தேவையை பூர்த்திசெய்வதை அடிப்படையாகக் கொண்டு கணக்கீடானது "நிதிக் கணக்கீடு" எனவும் "முகாமைக் கணக்கீடு" எனவும் இரண்டாக வகைப்படுத்தப்படுகிறது

C. கணக்கீட்டின் முதன்மை நோக்கமானது "வளங்களை சிக்கனமாக பயன்படுத்துதல்" ஆகும்

D. கணக்கீட்டின் ஆரம்ப தொழிற்பாடு "தரவு சேகரித்தல்" ஆகும். கணக்கீட்டின் இறுதித் தொழிற்பாடு / முதன்மை தொழிற்பாடு "தகவல் வழங்குதல்" ஆகும்

(1) A,B,C (2) B,C,D (3) A,C,D
(4) A,B,D (5) A,B,C,D

(02) நிறுவனம் ஒன்றில் பின்வரும் நடவடிக்கைகள் தொடர்பாக பெறுமதியிட்டு ஏடுகளில் பதிவுகள் செய்யப்பட்டன

A. உரிமையாளர் மீள்விற்பனைப் பண்டங்களை பற்றினார்

B. பொறி ஒன்று கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது

C. இருப்புக்கள் சில களவாடப்பட்டன

D. பொறி பெறுமானத் தேய்வடைந்தது

E. இருப்பின் கிரயத்தைவிட தேறக்கூடிய பெறுமதி வீழ்ச்சியுற்றது

மேற்தரப்பட்டவற்றில் கொடுக்கல் வாங்கல்களையும் நிகழ்வுகளையும் சரியாக வேறுபடுத்தி காட்டுவது எது?

| | கொடுக்கல் வாங்கல்கள் | நிகழ்வுகள் |
|---|---|---|
| (1) | A,B | C,D,E |
| (2) | A,B,C | D,E |
| (3) | A,B,C,D,E | --- |
| (4) | A,C,D | B,E |
| (5) | A,C,D,E | B |

(03) ஐயனார் தனிவியாபாரியின் பொதுப்பேரேட்டில் காணப்பட்ட சில கணக்குகள் வருமாறு

(அ) வாகனக் கணக்கு
(ஆ) வாகன தேய்வுக் கணக்கு
(இ) வாகன தேய்வேற்பாட்டுக் கணக்கு
(ஈ) வெளித்திரும்பல் கணக்கு
(உ) உட்திரும்பல் கணக்கு
(ஊ) ஆரம்ப இருப்புக் கணக்கு
(எ) இறுதி இருப்புக் கணக்கு
(ஏ) பற்றுக் கணக்கு
(ஐ) நிறுத்தி வைத்த வருவாய் கணக்கு
(ஒ) கடன்கொடுத்தோர் கணக்கு

மேற்தரப்பட்ட பேரேட்டு கணக்குகளின் சரியான வகைப்படுத்தலை பின்வருவனவற்றில் எது காட்டுகிறது?

| | சொத்துக் கணக்குகள் | பொறுப்புக் கணக்குகள் | உரிமைக் கணக்குகள் | வருமானக் கணக்குகள் | செலவுக் கணக்குகள் |
|---|---|---|---|---|---|
| (1) | அ,ஊ,எ | இ,ஒ | ஏ | ஐ,ஈ | ஆ,உ |
| (2) | அ,இ,ஊ | ஒ | ஏ | ஈ,எ,ஐ | ஆ,உ |
| (3) | அ,இ,எ | ஒ | ஏ,ஐ | உ | ஆ,ஈ,ஊ |
| (4) | அ,ஊ | ஒ | ஏ | ஈ,எ,ஐ | ஆ,இ,உ |
| (5) | அ,இ,ஊ | ஒ | ஏ,ஐ | ஈ,எ | ஆ,உ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(04) (அ) சொத்து (ஆ) பொறுப்பு (இ) உரிமை (ஈ) வருமானம்
(உ) செலவு (ஊ) காசப்பாச்சல் கூற்று (எ) கணக்கீட்டு கொள்கையும் குறிப்பும்
(ஏ) வருமானக்கூற்று (ஐ) ஐந்தொகை (ஒ) உரிமை மாற்ற கூற்று

மேற்தரப்பட்டவற்றில் எவற்றை நிதிக்கூற்றின் மூலகங்களாக கருதமுடியும்
(1) அ,ஆ,இ,ஈ,உ (2) அ,ஆ,இ,ஈ,உ,ஊ (3) ஏ,ஐ,எ
(4) ஏ,ஐ (5) ஊ,எ,ஏ,ஐ,ஒ

(05) வணிக நிறுவனம் ஒன்றிலே குறித்த ஒரு நிதிவருடத்தில் தயாரிக்கப்பட்ட சில கூற்றுக்கள் பின்வருமாறு தரப்படுகின்றன
(அ) வருமானக் கூற்று (ஆ) வங்கி இணக்க கூற்று
(இ) கிரயப் பகுப்பாய்வு கூற்று (ஈ) உரிமை மாற்ற கூற்று
(உ) காசுப் பாச்சற் கூற்று
மேற்தரப்பட்டவை தொடர்பாக சரியான இணைப்பினைக் காட்டுவது எது?

| | குறித்த ஒரு காலத்துக்கு தயாரிக்கப்படுபவை | குறித்த ஒரு தினத்தில் தயாரிக்கப்படுபவை | கணக்கீட்டு வெளியீடுகள் |
|---|---|---|---|
| (1) | அ,ஆ,உ | இ,ஈ | அ,உ |
| (2) | அ,ஆ,ஈ,உ | இ | அ,ஈ,உ |
| (3) | அ,ஆ,இ,ஈ,உ | --- | அ,ஆ,இ,ஈ,உ |
| (4) | அ,இ,ஈ,உ | ஆ | அ,ஆ,இ,ஈ,உ |
| (5) | அ,ஈ,உ | ஆ,இ | அ,இ,ஈ,உ |

(06) கப்புறு வியாபாரி 2012.01.01 இல் தனது வியாபாரத்தை தொடங்கினார். 2012.01.31 இல் அவர் தனது வணிகம் சார்பாக பின்வரும் மூல ஆவணங்களை சமர்ப்பிக்கிறார்
விற்பனைக் கிரயப்பட்டியல் ரூபா 250,000
கொள்வனவுக் கிரயப்பட்டியல் ரூபா 150,000
பெற்ற மின்சாரப் பட்டியல் ரூபா 2,000
வரவுத்தாள் ரூபா 20,000
செலவுத்தாள் ரூபா 30,000
பற்றுச் சீட்டு ரூபா 110,000 (மூலதனம்)
கச்சாத்து ரூபா 18,000 (சம்பளம்)
நாட்குறிப்பு கச்சாத்து ரூபா 45,000 ( 31.01 இல் இருப்பு)
மூல ஆவணங்களை பதிவுக்கு உட்படுத்தினால் அவற்றின் தேறிய விளைவு பின்வரும் கணக்கீட்டு சமன்பாட்டில் எவ்வாறு அமையும்?

| | மூலதனமும் பொறுப்பும் ரூபா | + வருமானம் ரூபா | = சொத்து ரூபா | + செலவு ரூபா |
|---|---|---|---|---|
| (1) | 242,000 | 220,000 | 357,000 | 105,000 |
| (2) | 240,000 | 220,000 | 355,000 | 105,000 |
| (3) | 240,000 | 265,000 | 485,000 | 20,000 |
| (4) | 232,000 | 230,000 | 357,000 | 105,000 |
| (5) | 242,000 | 295,000 | 519,000 | 18,000 |

(07) நிறுவனம் ஒன்று வசக்கட்டு முற்பண முறையில் சில்லறை காசேட்டை பராமரிக்கின்றது. இத்தொகையின் அடிப்படையில் மீள்நிரப்புதலானது மாத முதல் தினத்தில் இடம்பெறுகின்றது. 31.07.2012 இல் சில்லறை காசேட்டு செலவுப் பகுப்பாய்வு நிரல்களின் கூட்டுத்தொகைகள் பின்வருமாறு இருந்தது
பிரயாணம் ரூபா 2,500
உபசரிப்பு ரூபா 3,500 பத்திரிக்கை ரூபா 2,000 தபால் ரூபா 1,000
சிறு கூலி ரூபா 1,500
30.06.2012 இல் சில்லறை காசு மீதி ரூபா 2,500 31.07.2012 இல் சில்லறை காசு மீதி ரூபா 1,500 ஆகவும் இருந்தது எனின் பின்வருவனவற்றில் சில்லறைக் காசேடு தொடர்பில் சரியான இணைப்பு எது?

| | சில்லறை காசு வசக்கட்டு நிதி ரூபா | 01.07.2012 இல் மீள்நிரப்பிய தொகை ரூபா | 01.08.2012 இல் மீள்நிரப்ப வேண்டிய தொகை ரூபா |
|---|---|---|---|
| (1) | 9,500 | 7,000 | 8,000 |
| (2) | 12,000 | 9,500 | 10,500 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| (3) 11,500 | 10,000 | 9,000 |
| (4) 11,500 | 9,000 | 10,000 |
| (5) 9,500 | 8,000 | 7,000 |

(08) கார்மேகம் நிறுவனத்தின் வருமானக் கூற்றில் 31.03.2012 இல் முடிந்த வருடத்திற்கான மொத்த இலாபம் ரூபா 91,500 தேறிய இலாபம் ரூபா 63,000 ஆகும். எனினும் ஏடுகளில் பின்வரும் வழுக்கள் அறியப்பட்டன

1. வாடகை கட்டணத்திற்கு பதிலாக மீள விற்கும் பண்டங்கள் அதன் விற்பனை விலையான ரூபா 4,000 பெறுமதியில் கட்டிடக்காரர் மோகனுக்கு வழங்கப்பட்டது. இது மோகன் கணக்கில் ரூபா 4,000 என வரவிடப்பட்டு கொள்வனவுக் கணக்கில் ரூபா 400 என செலவிடப்பட்டது
2. சம்பளப்பட்டியலில் காணப்பட்ட மொத்தச் சம்பளம் ரூபா 42,300 சம்பள கட்டுப்பாட்டு கணக்கில் ரூபா 24,300 எனவும் சம்பளக் கணக்கில் ரூபா 23,400 எனவும் பதியப்பட்டுள்ளது

தொங்கல் கணக்கின் மூல மீதி, சீராக்கிய மொத்தலாபம், சீராக்கிய தேறிய இலாபம் என்பவற்றின் சரியான இணைப்பு எது?

| தொங்கல் கணக்கின் மூல மீதி ரூபா | சீராக்கிய மொத்தலாபம் ரூபா | சீராக்கிய தேறிய இலாபம் ரூபா |
|---|---|---|
| (1) 4,300 வரவு | 40,500 | 87,900 |
| (2) 4,300 வரவு | 87,900 | 40,500 |
| (3) 4,500 வரவு | 91,500 | 43,700 |
| (4) 4,500 செலவு | 43,700 | 91,500 |
| (5) 2,700 செலவு | 95,100 | 43,700 |

(09) தனிவியாபார நிறுவனமொன்று வற் வரிக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தில் 31.12.2011 இல் முடிந்த ஆண்டில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றன

| | | | |
|---|---|---|---|
| கடன்கொள்வனவு | ரூபா 100,000 | கடன்விற்பனை | ரூபா 150,000 |
| உட்திருப்பம் | ரூபா 10,000 | வெளித்திருப்பம் | ரூபா 5,000 |
| செலுத்திய வற்வரி | ரூபா 3,000 | செலுத்திய செயற்பாட்டு செலவு | ரூபா 5,000 |

இவ்வாண்டில் ரூபா 10,000 கிரயமான இருப்புக்கள் முழுமையாக பழுதடைந்து விட்டன மிகுதி இருப்பு ரூபா 20,000 31.12.2011 இல் விற்கப்படாதுள்ளன

பொருத்தமான எல்லா சந்தர்ப்பங்களிலும் 10% வற்வரி சேர்க்கப்படவேண்டும்

31.12.2011 இல் முடிந்த ஆண்டில் உழைத்த தேறிய இலாபம், 31.12.2011 இல் வற் பொறுப்பு என்பவை தொடர்பில் சரியானது எது?

| உழைத்த தேறிய இலாபம ரூபா | வற் பொறுப்பு ரூபா |
|---|---|
| (1) 65,000 | 1,500 |
| (2) 40,000 | 1,500 |
| (3) 60,000 | 1,500 |
| (4) 50,000 | 3,000 |
| (5) 45,000 | 1,500 |

(10) நிறுவனமொன்றின் பரீட்சைமீதி 31.03.2012 இல் சமப்படாமையினால் தொங்கல் கணக்கு திறக்கப்பட்டு முடிவுக் கணக்குகள் தயாரிக்கப்பட்டன. இதன்பின்னர் பின்வரும் வழுக்கள் ஏடுகளில் கண்டுபிடிக்கப்பட்டன

A. வாடகைக் கணக்கு மீதி ரூபா 7,500 பரீட்சை மீதியில் இடம்பெறவில்லை

B. ரூபா 3,000 கிரயமான பொருள்பற்று தொடர்பாக எப்பதிவும் செய்யப்படவில்லை

C. மோகனுக்கு விற்பனை ரூபா 20,500 மோகன் கணக்கில் மட்டும் பதியப்படவில்லை

D. தளபாடத்தேய்வு ரூபா 1,500 தளபாடக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது

மேற்தரப்பட்டவற்றில் ஏடுகளில் ஒரு பதிவின் மூலம் திருத்தப்படக்கூடிய வழுக்களையும், மேலுள்ளவற்றை திருத்துவதால் உரிமையில் ஏற்படும் தேறிய விளைவையும் காட்டுவது எது?

| ஒரு பதிவு செயது திருத்தப்படுவன | உரிமையில் ஏற்படும் தேறிய விளைவு (ரூபா) |
|---|---|
| (1) --- | 7,500 குறையும் |
| (2) A | 10,500 குறையும் |
| (3) A,C | 10,500 குறையும் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) A,B 10,500 குறையும்

(5) A,D 10,500 குறையும்

(11) கடன்கொடுத்தோர் பேரேட்டுப் பட்டியல் மொத்தம் ரூபா 99,000 ஆக இருந்தபோது கட்டுப்பாட்டுக் கணக்கு பிரிதொரு மீதியை காட்டியது
ஏடுகளில் அறியப்பட்ட வழுக்கள் பின்வருமாறு

1. கட்டுப்பாட்டுக் கணக்கில் வரவிட்டு, நபர் கணக்கில் வரவிடப்படாத வெளித்திருப்பம் ரூபா 2,000 ஆகும்
2. நபர் கணக்கில் செலவிட்டு, கட்டுப்பாட்டுக் கணக்கில் வரவிடப்பட்ட தண்டவட்டி ரூபா 500 ஆகும்
3. கட்டுப்பாட்டுக் கணக்கிலும் நபர் கணக்கிலும் பதியத்தவறிய பெற்றகழிவு ரூபா 3,000 ஆகும்
4. நபர் கணக்கில் செலவிடாது, கட்டுப்பாட்டுக் கணக்கில் செலவிட்ட கொள்வனவு ரூபா 8,000 ஆகும்

சீராக்கம் செய்தபின்னர் பட்டியல் மொத்த மீதியும், சீராக்கம் செய்யமுன்னர் உள்ள கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியும் முறையே பின்வருவனவற்றில் எது?

| சீராக்கம் செய்தபின்னர் பட்டியல் மொத்த மீதி ரூபா | சீராக்கம் செய்யமுன்னர் உள்ள கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியம் (ரூபா) |
|---|---|
| (1) 96,000 | 104,500 |
| (2) 102,000 | 104,500 |
| (3) 96,000 | 104,000 |
| (4) 101,000 | 98,000 |
| (5) 102,000 | 104,000 |

(12)

| எண்ணக்கரு | கணக்கீட்டில் பின்பற்றப்படும் நடைமுறை ஒன்று |
|---|---|
| அ பண அளவீட்டு எண்ணக்கரு | முகாமை, தொழிலாளர் திறன் போன்ற பணத்தால அளக்கமுடியாத விடயங்கள் கணக்கில் பதியப்படாமை |
| ஆ தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு | சொத்து, பொறுப்பு என்பவை ஐந்தொகையில் நடைமுறை, நடைமுறை அல்லாதவை என வகைப்படுத்தப்படுதல் |
| இ அலகுசார் எண்ணக்கரு | மூலதன கணக்கும் பற்றுக்கணக்கும் பேணப்படுகின்றமை |
| ஈ கால அளவு எண்ணக்கரு | நிறுவன ஆயுள் காலப்பகுதிகளாக பிரிக்கப்பட்டு செயற்பாட்டுப் பெறுபேறு கணிக்கப்படுதல் |

எண்ணக்கருக்களுக்கு சரியான நடைமுறைகளை மட்டும் குறிக்கும் தொகுதி எது?

(1) அ,ஆ,இ (2) ஆ,இ,ஈ (3) அ,இ,ஈ
(4) அ,ஆ,ஈ (5) அ,ஆ,இ,ஈ

(13) நிதிக்கூற்றுக்களை தயாரித்து சமர்ப்பிப்பது தொடர்பில் அடிப்படையான இரண்டு கணக்கீட்டு எண்ணக்கருக்களாக அமைவது எது?

(1) பண அளவீட்டு எண்ணக்கரு - இரட்டை விளைவு எண்ணக்கரு
(2) அலகுசார் எண்ணக்கரு - இரட்டைவிளைவு எண்ணக்கரு
(3) பண அளவீட்டு எண்ணக்கரு - அலகுசார் எண்ணக்கரு
(4) தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு - அட்டுறு எண்ணக்கரு
(5) கொள்கைமாறா எண்ணக்கரு - வெளிப்படுத்தல் எண்ணக்கரு

(14) கம்பனி ஒன்றில் ஊழியர் சேமலாப நிதிக்கு ஊழியர் 8% மும், தொழில் கொள்வோர் 10% மும், தொழிலாளர் நம்பிக்கை நிதிக்கு தொழில் கொள்வோர் 2% மும் பங்களிப்பு செய்வர். 31.03.2012 இல் முடிந்த மாத வருமானக் கூற்றில் காட்டப்பட்ட ஊழியர் தொடர்பான மொத்த செலவுத்தொகை ரூபா 100,800 ஆகும். இம்மாதத்தில் ஊழியரிடமிருந்து சம்பள முற்பணம் சார்பாக ரூபா 11,000 கழிப்பனவு செய்யப்பட்டது.
31.03.2012 இல் தேறிய சம்பளத்தையும் தொழிலாளர் சேமலாப நிதிப் பொறுப்பையும் காட்டுவது எது?

| தேறிய சம்பளம் (ரூபா) | சேமலாப நிதிப் பொறுப்பு (ரூபா) |
|---|---|
| (1) 71,800 | 18,000 |
| (2) 71,800 | 16,200 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| (3) 101,000 | 20,160 |
| (4) 79,000 | 9,000 |
| (5) 79,000 | 16,200 |

(15) நியம வடிவ உடைகளை உற்பத்தி செய்யும் நிறுவனம் ஒன்று பற்றிய தகவல்கள் வருமாறு
01.01.2011 இல் துணி இருப்பு 12,000 ரூபா (100 மீற்றர்கள்)
2011 இல் துணி கொள்வனவு 94,500 ரூபா (630 மீற்றர்கள் )
31.12.2011 இல் துணி இருப்பு 70 மீற்றர்கள்
உடை ஒன்றை உற்பத்தி செய்வதற்கான நியமத் தகவல்கள் பின்வருமாறு
துணி 3 மீற்றர் தையல் கூலி ரூபா 250 பொதியிடல் செலவு ரூபா 30
2011 இல் எழுந்த பொதியிடல் செலவு ரூபா 6,000 ஆகவும் மேந்தலை செலவு ரூபா 7,000 ஆகவும் இருந்தது. குறித்த நிதியாண்டில் முடிவடையா வேலைகள் துணி மற்றும் தையல் கூலி என்பவற்றை மட்டும் நுகர்ந்துள்ளன. நிறுவனம் முதலில் கொள்வனவு செய்யும் மூலப்பொருட்களை முதலில் உற்பத்திக்கு பயன்படுத்துவதை கொள்கையாக கொண்டுள்ளது
31.12.2011 இல் உள்ள மொத்த குறைவேலை இருப்பின் பெறுமதி, உற்பத்தி அலகு ஒன்றுக்கான கிரயம் என்பவற்றை சரியாக குறிப்பது?

| குறைவேலை இருப்பின் பெறுமதி (ரூபா) | உற்பத்தி அலகு ஒன்றுக்கான கிரயம (ரூபா) |
|---|---|
| (1) 10,000 | 715 |
| (2) 10,400 | 715 |
| (3) 14,000 | 750 |
| (4) 12,200 | 759 |
| (5) 4,400 | 750 |

(16) நிறுவனம் ஒன்றினால் மேற்கொள்ளப்பட்ட சில செலவுகள் பின்வருமாறு தரப்படுகிறது

A. பழைய வாகனமொன்றை கொள்வனவு செய்து அதனை பாவனையில் ஈடுபடுத்த முன்னர் ஏற்பட்ட திருத்த செலவு

B. கட்டிடம் ஒன்றை நிறுவுவதற்காக வாங்கப்பட்ட காணியை கட்டிடம் கட்டுவதற்கு முன்னர் துப்பரவு செய்வதற்கு செலுத்திய கூலிச் செலவு

C. புதிய பொறியொன்றை பொருத்துவதற்காக பழைய பொறியை அகற்ற ஏற்பட்ட செலவு

D. களஞ்சியசாலை பரப்பளவு போதாதிருந்தமையால் அதன் ஒரு பகுதியை இடித்து விரிவாக்கிய செலவு

E. கணிணி ஒன்றை கொள்வனவு செய்வது தொடர்பாக ஏற்பட்ட வற்வரி (Vat) செலவு

மேற்தரப்பட்ட செலவுகள் தொடர்பில் மூலதனச் செலவு, வருமானச் செலவு என்ற வகைப்படுத்தலை சரியாகக் காட்டும் இணைப்பு எது?

| | மூலதனச் செலவு | வருமானச் செலவு |
|---|---|---|
| (1) | C,D | A,B,E |
| (2) | A,B,C,D,E | --- |
| (3) | --- | A,B,C,D,E |
| (4) | B,C, | A,E |
| (5) | A,C,E | B,D |

(17) 31 டிசம்பரில் நிதிவருடம் முடிவடையும் கம்பனி ஒன்றில் 01.01.2011 இல் காணப்பட்ட கணக்கு நிலுவைகள் பின்வருமாறு

- வினியோக வாகனம் கிரயம் ரூபா 400,000
- வினியோக வாகன தேய்வேற்பாடு ரூபா 180,000

எல்லா வாகனங்களும் ரூபா 300,000 ஆக 01.07.2011 இல் மீள்மதிப்பு செய்யப்பட்டது. நிறுவனம் வாகனங்களுக்கு கிரயத்தில் அல்லது மீள்மதிப்புச் செய்யின் மீள்மதித்த பெறுமதியில் 10% தேய்மானமிடுவதை கொள்கையாக கொண்டுள்ளது
மீள்மதிப்பீட்டால் 31.12.2011 இல் முடிந்த ஆண்டுக்கான இலாபத்தில் ஏற்பட்ட தேறிய விளைவும், 31.12.2011 இல் உள்ள உரிமையில் ஏற்பட்ட தேறிய விளைவும் முறையே பின்வருவனவற்றில் எது?

| இலாபத்தில் ஏற்பட்ட தேறிய விளைவு (ரூபா) | உரிமையில் ஏற்பட்ட தேறிய விளைவு (ரூபா) |
|---|---|
| (1) --- | 100,000 அதிகரிப்பு |
| (2) 5,000 குறைவு | 85,000 அதிகரிப்பு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| (3) 5,000 குறைவு | 100,000 அதிகரிப்பு |
| (4) 10,000 குறைவு | 90,000 அதிகரிப்பு |
| (5) 5,000 அதிகரிப்பு | 105,000 அதிகரிப்பு |

(18) 31.12.2011 இல் உள்ள ஐந்தொகையில் எடுத்த உருப்படிகள்

மூலதனம் ரூபா 125,000 | தேறியலாபம் ரூபா 45,000
பற்றுதல் ரூபா 20,000 | பொறுப்புக்கள் ரூபா 50,000

31.12.2011 இல் முடிந்த ஆண்டில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள்

- ரூபா 25,000 கிரயமான இருப்பு ரூபா 55,000 கடனுக்கு விற்பனை செய்யப்பட்டது
- உரிமையாளர் ரூபா 10,000 கிரயமான இருப்புக்களையும் ரூபா 10,000 காசையும் பற்றினார்
- ரூபா 30,000 பணத்தை உரிமையாளர் மேலதிக மூலதனமாக இட்டார்
- பெற்ற தரகு வருமானம் ரூபா 15,000

01.01.2011 இல் உள்ள மொத்தச் சொத்துக்களும் அதே தினத்தில் மூலதனக் கணக்கு மீதியும் முறையே எது?

| மொத்தச் சொத்து (ரூபா) | மூலதனக் கணக்கு மீதி (ரூபா) |
|---|---|
| (1) 255,000 | 155,000 |
| (2) 135,000 | 115,000 |
| (3) 145,000 | 70,000 |
| (4) 145,000 | 95,000 |
| (5) 145,000 | 120,000 |

(19) 01.05.2011 இல் இருப்பு ரூபா 26,500

01.05.2011 இல் இருந்து 31.05.2011 வரையான நாட்களில் நிகழ்ந்த கொடுக்கல் வாங்கல்கள் கொள்வனவுகள் ரூபா 242,500 விற்பனைகள் ரூபா 293,000

31.05.2011 இல் தீ விபத்து ஏற்பட்டு ரூபா 9,200 கிரயமான இருப்புக்கள் மட்டும் பகுதி சேதத்துடன் மீட்கப்பட்டன இவற்றை ரூபா 6,000 த்திற்கு திறந்த சந்தையில் விற்கமுடியுமென மதிப்பிடப்பட்டுள்ளது. முழுமையாக அழிந்த இருப்புக்களில் ¾ பகுதியை மட்டும் இழப்பீடாக தருவதாக காப்புறுதிக் கம்பனி உறுதிப்படுத்தியது. மொத்த இலாபம் விற்பனையில் 40% காப்புறுதிக் கம்பனியிடம் கோரக்கூடிய அதிகூடிய இழப்பீட்டுத் தொகை, தீ விபத்தால் ஏற்பட்ட நட்டம் என்பவற்றை சரியாகக் குறிப்பது எது?

| இழப்பீட்டுக் கோரிக்கை (ரூபா) | நட்டம் (ரூபா) |
|---|---|
| (1) 87,200 | 24,200 |
| (2) 145,800 | 44,850 |
| (3) 84,000 | 21,000 |
| (4) 142,600 | 44,850 |
| (5) 84,000 | 24,200 |

(20) நிறுவனம் ஒன்றின் 31.12.2010 இல் உள்ள கணக்கு மீதிகளை 31.12.2011 இல் உள்ள கணக்கு மீதிகளுடன் ஒப்பிட்டபோது பின்வரும் விளைவுகள் காணப்பட்டன

| | |
|---|---|
| வாகனம் கிரயம் ரூபா 50,000 அதிகரிப்பு | வாகனம் தேய்வேற்பாடு ரூபா 20,000 அதிகரிப்பு |
| இருப்பு ரூபா 35,000 குறைவு | கடன்கொடுத்தோர் ரூபா 15,500 குறைவு |
| கடன்பட்டோர் ரூபா 29,000 அதிகரிப்பு | ஐயக்கடன் ஏற்பாடு ரூபா 2,000 அதிகரிப்பு |
| அட்டுற்ற வாடகை ரூபா 4,000 அதிகரிப்பு | காசும் வங்கியும் ரூபா 39,000 அதிகரிப்பு |


31.12.2011 இல் முடிந்த ஆண்டில் உரிமையாளர் ரூபா 44,000 த்தை மேலதிக மூலதனமாக புகுத்தியும் ரூபா 61,000 த்தை பற்றியுமிருந்தார். இவை ஏடுகளில் முறையாக பதிவுசெய்யப்பட்டுள்ளன

31.12.2011 இல் முடிந்த ஆண்டில், உரிமையில் ஏற்பட்ட மாற்றத்தையும் உழைத்த இலாபத்தையும் முறையே குறிப்பது பின்வருவனவற்றில் எது?

| உரிமையில் ஏற்பட்ட மாற்றம் ரூபா | உழைத்த இலாபம் ரூபா |
|---|---|
| (1) 133,500 அதிகரிப்பு | 150,500 இலாபம் |
| (2) 133,500 அதிகரிப்பு | 116,500 இலாபம் |
| (3) 72,500 அதிகரிப்பு | 89,500 இலாபம் |
| (4) 110,000 அதிகரிப்பு | 116,500 இலாபம் |
| (5) 93,500 அதிகரிப்பு | 110,500 இலாபம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. "ஒரு சிறந்த முயற்சியாளன் உருவாகுவதுடன், உருவாக்கவும் படுகின்றான்" இதற்கு "A"- தனிநபர், "B"- சமூக, "C"- சூழல் காரணிகள் அடிப்படையாக அமைகிறது. கிழே தரப்பட்ட காரணிகளை A,B,C எனும் அடிப்படையில் தொகுதியாக்குக.

1 - வளங்களும் வாய்ப்புக்களும்
2 - கல்வியும் பயிற்சியும்
3 - வலைப்பின்னல் தொடர்புகள்
4 - பொருளாதார நிலைமை
5 - குடும்பமும், நண்பர்களும்
6 - நன்மதிப்பும், சமூக அத்தஸ்தும்

☐ (1) A - 1, 2 B - 3, 4 C - 5, 6
☐ (2) A - 2, 4 B - 1, 3 C - 5, 6
☐ (3) A - 3, 5 B - 4, 6 C - 1, 2
☐ (4) A - 5, 6 B - 3, 4 C - 1, 2
☐ (5) A - 2, 6 B - 3, 5 C - 1, 4

**சிரேஷ்ட்ட வணிகக்கல்வி ஆசிரியர் S. K. சோதிலிங்கம் அவர்களின் இதழ் 25ன் MCQ தொகுப்புக்கான விடைகள்**

(1) 3 (2) 4 (3) 5 (4) 3 (5) 4, 3 (6) 5, 5 (7) 5 (8) 2 (9) 4 (10) 5, 4
(11) 5 (12) 2 (13) 5,3 (14) 4 (15) 5

**சிரேஷ்ட்ட வணிகக்கல்வி ஆசிரியர் S. K. சோதிலிங்கம் அவர்களின் இதழ் 26ன் MCQ தொகுப்புக்கான விடைகள்**

(1) 4 (2) 4, 4 (3) 4 (4) 5 (5) 3, 4 (6) 3 (7) 5, 5 (8) 4 (9) 4 (10) 5
(11) 3 (12) 5 (13) 5 (14) 4, 3 (15) 3

## Current Affairs Cafe

- by Editor -

**இலங்கையின் வெளிநாட்டு ஒதுக்குகள் மேலும் வீழ்ச்சியடைந்துள்ளது.**

அபிவிருத்தியடைந்து வரும் நிலையில் காணப்படுகின்ற இலங்கையின் பிரதான தேவைப்பாடான வெளிநாட்டு ஒதுக்குகள் மேலும் வீழ்ச்சியடைந்துள்ளது. வெளிநாட்டு ஒதுக்குகள் 2011 ஜுலை மாதம் காணப்பட்ட 8.1 பில்லியன் அமெரிக்க டொலர்கள் டிசெம்பர் மாதத்தில் 6 பில்லியன் அமெரிக்க டொலர்களாக வீழ்ச்சியடைந்துள்ளது. இவ் வீழ்ச்சிக்கான காரணமாக வெளிநாட்டிலிருந்து பெறப்பட்ட கடன்களாகும். இதற்கான மற்றுமொரு பிரதான காரணம் ஏற்றுமதியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியாகும். இதன் மூலம் இலங்கையின் சென்மதி நிலுவை பிரச்சினை மேலும் அதிகரிக்கலாம் என கூறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VICEGUIDE

சிரேஷ்ட்ட விரிவுரையாளர்
கலாநிதி ந. கணேச மூர்த்தி
பொருளியல் துறை
கொழும்பு பல்கலைக்கழகம்

# பொருளாதார வளர்ச்சி : எண்ணக்கருக்களும், அளவீடுகளும், பிரயோகங்களும்.

**1.0 அறிமுகம் :**

எந்தவொரு நாடும் அடைந்துகொள்ள எத்தணிக்கும் பேரினப் பொருளாதார இலக்குகளில் மிகப் பிரதானமானது பொருளாதார வளர்ச்சியே ஆகும். அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் உயர் பொருளாதார வளர்ச்சியை அடைவதை குறிக்கோளாகக் கொண்டு இயங்குகின்றன. அபிவிருத்தி அடைந்த நாடுகள் தாம் எய்திய பொருளாதார வளர்ச்சியில் ஏற்ற இறக்கங்கள் உருவாவதை கட்டுப்படுத்தும் நோக்கில் இயங்குகின்றன. இதன் காரணமாகவே அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் அண்மைக் காலங்களில் எய்தி வரும் வளர்ச்சி வேகங்களோடு ஒப்பிடுகையில் அபிவிருத்தி அடைந்த நாடுகளின் வளர்ச்சி வீதங்கள் மிகக்குறைவான வேகங்களில் இருப்பதைக் காணலாம். இக்கட்டுரையிலே நாம் பொருளாதார வளர்ச்சி பற்றிய எண்ணக்கருக்கள், அளவீட்டு முறைகள் மற்றும் அவற்றின் நடைமுறைப் பிரயோகங்கள் குறித்து ஆராய உள்ளோம்.

**2.0 பொருளாதார வளர்ச்சி மற்றும் பொருளாதார வளர்ச்சி வேகம் என்பதனாற் கருதப்படுவது என்ன?**

பொருளாதாரமொன்றின் மெய்த்தேசிய உற்பத்தியில் அல்லது சாத்திய வள (Potential) வெளியீட்டு மட்டத்தில் ஏற்படும் நீண்டகால ரீதியானதும் தொடர்ச்சியானதுமான விருத்தி அல்லது அதிகரிப்பு பொருளாதார வளர்ச்சி என அறிமுகப்படுத்தப்படலாம். இது கேள்வி நிரம்பல் மற்றும் வினைத்திறன் போன்ற சகல காரணிகளும் தொழிற்படும் இயங்கியல் நிகழ்வாகும். பொருளாதார வளர்ச்சியின் போது பொருளாதாரமொன்றில் பொருள்கள் மற்றும் சேவைகளை உற்பத்தி செய்யும் இயலளவு அதிகரிக்கிறது.

கோட்பாட்டு ரீதியில் பொருளாதார வளர்ச்சியை / பொருளாதாரமொன்றின் உற்பத்தி இயலளவில் அல்லது சாத்தியவள வெளியீட்டு மட்டத்தில் ஏற்படும் அதிகரிப்பென வரைவிலக்கணப்படுத்தலாம். நடைமுறையில் பொருளியலாளர்கள் பொருளாதார வளர்ச்சியை அளவிட இரு அணுகுமுறைகளைப் பயன்படுத்துகின்றனர்.

(i) குறிப்பிட்ட ஒரு காலப்பகுதிகளில் மெய் மொத்த தேசிய உற்பத்தியில் (Real GNP) அல்லது தேறிய தேசிய உற்பத்தியில் ஏற்படும் ஓர் அதிகரிப்பை அளவிடுவது.

(ii) குறிப்பிட்ட ஒரு காலப்பகுதிகளில் தலைக்குரிய மெய் மொத்த தேசிய உற்பத்தியில் அல்லது தலைக்குரிய தேறிய தேசிய உற்பத்தியில் ஏற்படும் ஓர் அதிகரிப்பை அளவிடுவது.

இது தவிர குறிப்பிட்ட காலப்பகுதியில் மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்படும் அதிகரிப்பையும் பொருளாதார வளர்ச்சி எனக்கூறலாம். இலங்கையிலும் சர்வதேச நிதி நிறுவனங்களின் அறிக்கைகளிலும் மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி அல்லது தலைக்குரிய மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியை அடிப்படையாக கொண்ட கணிப்பீடுகளும் ஒப்பீடுகளும் இடம் பெறுவதைக் காணலாம்.

பொருளாதார வளர்ச்சி பெரும்பாலும் ஒரு வருட காலப்பகுதிக்கே கணிப்பிடப்படுவதுண்டு. ஆயினும் காலாண்டு அடிப்படையிலும் வளர்ச்சி தரவுகளை பெறமுடியும். பொருளாதார வளர்ச்சியும், பொருளாதார வளர்ச்சி வேகம் வீதமும் ஒன்றன்று. மெய்மொத்த உள்நாட்டு / தேசிய உற்பத்தியில் ஏற்படும் அதிகரிப்பை நூற்றுவீத அடிப்படையில் கூறுவதே பொருளாதார வளர்ச்சி வீதமாகும்.

**பொருளாதார வளர்ச்சி வீதத்தைக் கணிப்பீடு செய்ய பின்வரும் சூத்திரம் பயன்படுத்தப்படுகிறது.**

$$g_t = \frac{Y_t - Y_{t-1}}{Y_{t-1}} x100$$

இங்கு,

$g_t$ = t என்னும் காலப்பகுதியில் பொருளாதார வளர்ச்சி வீதம்


$g_t$ = t என்னும் காலப்பகுதியில் மெய் மொத்த / உள்நாட்டு / தேசிய உற்பத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

$Y_{t-1}$ = t காலப்பகுதிக்கு 1 வருடம் முன்னைய காலப்பகுதியில் மெய்மொத்த/உள்நாட்டு/தேசிய உற்பத்தி. அதாவது பொருளாதார வளர்ச்சியானது பொருளாதாரமொன்றின் பொருள் சார் விரிவாக்கத்தை நூற்று வீதமாக குறித்த ஒரு காலப் பகுதியை அடிப்படையாகக் கொண்டு கூறுகிறது.


பொருளாதார வளர்ச்சியை வெளிப்படுத்த பொருளியலில் உற்பத்தி இயல்தகவு வளையி மற்றும் மொத்த நிரம்பல் வளையி போன்ற கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. உற்பத்தி இயல்தகவு வளையியினை பொருளாதார வளர்ச்சி எண்ணக்கருக்களை விளக்கப் பயன்படுத்தலாம். உற்பத்தி இயல்தகவு வளையி பொருளாதார மொன்றின் சாத்திய வளங்களை வெளிப்படுத்துவதனால் பொருளாதார வளர்ச்சியைக் காட்ட அது மிகவும் பொருத்தமானதாகவுள்ளது.

**வரைபடம் 01**





உற்பத்தி இயல்தகவு வளையியின் வெளிப்புற நகர்வின் மூலம் பொருளாதார வளர்ச்சியை நாம் காட்டலாம். நாட்டின் சாத்திய வள உற்பத்தி அதிகரிக்கும் போது உற்பத்தி இயல்தகவு வளையியின் வெளிப்புற நகர்வின் மூலம் அதனைக் காட்டலாம். இவ்வாறான ஒரு நகர்வு சமாந்தரமானதாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. மாறாக சமாந்திரமற்ற நகர்வின் மூலம் இரு அச்சுகளின் ஏதாவதொன்றில் மாற்றம் ஏற்படாத நிலையில் வளையியின் வெளிப்புறச் சுழற்சியின் மூலமும் பொருளாதார வளர்ச்சியை காட்டலாம்.


**வரைபடம் 02**





**வரைபடம் 03**




**வரைபடம் 04**




**வரைபடம் 05**





வரைபடம் 02, 03, 04, 05 உம் வெவ்வேறு வகையிலான பொருளாதார வளர்ச்சி நிலைகளைக் காட்டுகின்றன. இவை ஒவ்வொன்றினதும் பொருளாதார வளர்ச்சி சமச்சீரற்று காணப்படுகிறது. வரைபடம் 02ல் பொருளாதார வளர்ச்சிக்கு பிரதானமாக நுகர்வுப் பொருள் உற்பத்தி பங்களிப்பு செய்துள்ளது. வரைபடம் 03ல் பொருளாதார வளர்ச்சி மூலதனப் பொருள் உற்பத்தித் துறையில் ஏற்பட்ட விரிவாக்கத்தினால் ஏற்பட்டுள்ளது. வரைபடம் 04ல் பொருளாதார வளர்ச்சி முற்று முழுதாக நுகர்வுப் பொருள் உற்பத்தி துறையில் ஏற்பட்ட விரிவாக்கத்தினால் ஏற்பட்டுள்ளது. வரைபடம் 05ல் வளர்ச்சி முற்று முழுதும் மூலதனப்பொருள் உற்பத்தி துறையின் விரிவாக்கத்தில் தங்கியுள்ளது.


இது தவிர நிகழ்காலத்தில் ஒரு பொருளாதாரம் மேற்கொள்ளும் உற்பத்தி சேர்க்கை எதிர்காலத்தில் எவ்வாவாறான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் என்பதனையும் நாம் உற்பத்தி இயல்தகவு வளையியை அடிப்படையாகக் கொண்டு விளக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**வரைபடம் 06**





**வரைபடம் 07**




**வரைபடம் 08**




**வரைபடம் 09**




நிகழ்காலத்தில் அதிகளவு நுகர்வுப் பொருள்களும் குறைந்தளவு மூலதனப் பொருள்களும் உற்பத்தி செய்யப்பட்டால் அடுத்துவரும் காலப்பகுதியின் பொருளாதார வளர்ச்சி குறைவாகவே இருக்கும். வரைபடம் 06, 07 ஆகியன இதனை விளக்குகின்றன. மாறாக நிகழ்காலத்தில் குறைந்தளவு நுகர்வுப் பொருள்களும் அதிகளவு மூலதனப் பொருள்களும் உற்பத்தி செய்யப்பட்டால் அடுத்துவரும் காலப்பகுதிக்கான வளர்ச்சி சாத்தியங்கள் உயர்வாகக் காணப்படும். இந் நிலையினை வரைபடம் 08, 09 ஆகியன விளக்குகின்றன.

(தொடரும்...)

BMS make learning happen | northumbria UNIVERSITY



"My journey continues...
but it is, as always, with immense gratitude that I remember my tutors at BMS, and with pride that I reflect on its growth and continuing success."

Vignesh Yoganathan
PhD student
Northumbria University, UK.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

VICEGUIDE

சிரேஷ்ட்ட விரிவுரையாளர்
கலாநிதி ந. ரவீந்திரகுமரன்
பொருளியல் துறை
கொழும்பு பல்கலைக்கழகம்



**2014ம் ஆண்டு மாணவர்களுக்கென விஷேடமாக தயாரிக்கப்பட்டது.**

## பொருளாதாரப் பிரச்சினை
## The Economic Problem

மனித வரலாற்றில் பாரிய மாற்றங்கள் தினமும் இடம்பெற்று வருகின்றன. நமது மூதாதையர்கள் வாழ்ந்த காலத்துடண் ஒப்பிடின் இன்றைய எமது வாழ்வில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளமை அவதானிக்கத்தக்கது. நமது அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் பொருள்கள் மற்றும் சேவைகளில் மாத்திரமன்றி பழக்கவழக்கங்கள், சிந்தனைகள் மற்றும் செயற்பாடுகள் என்பவற்றிலும் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி என்பன நமது மூதாதையர்களை விட எம்மை செல்வந்தர்களாக்கியுள்ளது. நாம் நுகர்வு செய்கின்ற பொருள்கள் மற்றும் சேவைகள் அனைத்தும் எம்மால் மாத்திரம் உற்பத்தி செய்யப்படுபவை அல்ல. உலகத்திலுள்ள பல நாடுகள் தமது அனுபவங்களை ஏனைய நாடுகளுடன் பகிர்ந்து கொள்கின்றன. வரலாற்றில் உலக நாடுகள் பல பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தியில் உயர்ந்த ஒரு நிலையைஅடைந்த போதும் அவை பற்றாக்குறை என்ற பிரச்சினையிலிருந்து விடுபட முடிந்ததா? ஏன் முடியவில்லை? உயரளவான செல்வத்தினை கொண்டிருந்த போதும் தெரிவுகளை எதற்காக மேற்கொள்கின்றோம்? செலவுகளை ஏன் எதிர்நோக்குகின்றோம்? இலவச மதிய உணவு ஏன் கிடைப்பதில்லை?

உயரளவான சிறப்புத் தேர்ச்சி மற்றும் வர்த்தகம் என்பன உலகளாவிய ரீதியில் காணப்படுகின்றன. மக்கள் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு தொழிலில் சிறப்புத் தேர்ச்சியுடையவர்களாக இருக்கின்றார்கள். மக்கள் ஒவ்வொருவரும் உயரளவான சிறப்புத் தேர்ச்சியுடையவர்களாக இருப்பதனால் ஒரு பண்ணைத் தொழிலாளியே நூற்றிற்கும் மேற்பட்ட மக்களுக்குத் தேவையான உணவினை வழங்கக் கூடிய தேர்ச்சியினை பெற்றுள்ளார். ஏன் நாம் சிறப்பத் தேர்ச்சி உடையவர்களாகின்றோம்? சிறப்புத் தேர்ச்சி மற்றும் வர்த்தகம் என்பவற்றினூடாக நாம் எத்தகைய பயன்களை பெறுகின்றோம்? பல நூற்றாண்டுகளாக நிறுவனங்கள் மற்றும் சமூக ஒழுங்கமைப்புக்கள் விருத்தியடைந்து கொண்டே வருகின்றன. அவற்றில் மிக முக்கியமாக அமைவது சந்தைகள். ஏன் இத்தகைய சமூக ஒழுங்கமைப்புக்கள் விருத்தியடைகின்றன? அவை எவ்வாறு உற்பத்தியை அதிகரிக்கின்றன?

இவ் கட்டுரையிலே மேலே வினாவப்பட்ட வினாக்கள் தொடர்பாக நாம் கவனம் செலுத்த உள்ளோம். முதலில் நாம் பிரதான பொருளியல் பிரச்சினைகளான அருமை, தெரிவு மற்றும் உற்பத்தி சாத்திய வளையி போன்ற விடயங்களுடன் ஆரம்பிப்போம். பின்பு பொருளியலின் மையக்கருத்தான வினைத்திறன் என்பதனை நோக்குவோம். வர்த்தகம், மற்றும் சிறப்புத்தேர்ச்சி என்பவற்றினால் உற்பத்தியை எவ்வாறு விரிவு படுத்த முடியும் என்பது பற்றியும் விளக்கவுள்ளோம். இக்கட்டுரையினை வாசிப்பதன் மூலம் பொருளியலின் பிரதான அடிப்படை விடயங்களை அறிந்து கொள்ள முடிகின்றது.

### வளங்களும் தேவைகளும்
### Resourses and Wants

மனித வாழ்க்கையை இரண்டு விடயங்கள் ஆதிக்கம் செலுத்துகின்றன.

- வரையறுக்கப்பட்ட வளங்கள்
- வரையறுக்கப்படாத தேவைகள்

இவ்விரு விடயங்களுமே **அருமை** அல்லது **பற்றாக்குறை** என்ற எண்ணக்கருவினை வரையறுக்கின்றன. மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய கிடைக்கத்தக்கதாகவுள்ள வளங்கள் போதுமான அளவு காணப்படாமையே இத்தகைய நிலைமைக்கு காரணமாகும். அருமை என்பது அனைவரது வாழ்க்கையுடனும் தொடர்புபட்ட ஒரு விடயமாகும். இது நம் ஒவ்வொருவரையும் தனித்தனியாக தாக்கமடையச் செய்வதுடன் எமது குடும்பங்கள், சமூகங்கள் மற்றும் நாடுகள் என்பவற்றையும் தாக்கமுறச் செய்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்கு மிகவும் முக்கியமாகத் தேவைப்படும் விடயங்களை நிறைவேற்றுவதற்காக வரையறுக்கப்பட்ட வளங்களை பயன்படுத்துதல் என்பதே அடிப்படை பொருளாதாரப் பிரச்சினையாகும். ஏற்கனவே குறிப்பிட்டது போன்று, பொருளியல் என்பது **அருமையான** வளங்களைக் கொண்டு தமது தேவைகளை நிறைவேற்றுவதற்காக மக்கள் எவ்வாறு **தெரிவுகளை** மேற்கொள்கின்றனர் என்பது பற்றிய ஒரு கற்றல் ஆகும். அந்த வகையில், எமக்குச் சொந்தமான வரையறுக்கப்பட்ட வளங்களைக் கொண்டு அதிகளவு தேவைகளை நிறைவேற்ற நாம் ஒவ்வொருவரும் எவ்வாறு தனித்தனியாக முயற்சி செய்கின்றோம் என்பது பற்றியதான ஒரு ஆய்வே பொருளியல் ஆகும். வரையறுக்கப்பட்ட வளங்கள் மற்றும் வரையறுக்கப்படாத தேவைகள் என்பன தொடர்பாக நாம் விரிவாக ஆராய்வோம்.

### வரையறுக்கப்பட்ட வளங்கள்
### Limited Resources

பொருள்கள் மற்றும் சேவைகளை உற்பத்தி செய்வதற்காக பயன்படுத்தப்படும் வளங்களை நான்கு வகையாக பாகுபடுத்த முடியும்.

- ஊழியம்
- நிலம்
- மூலதனம்
- முயற்சியாண்மை

பொருள்கள் மற்றும் சேவைகளை உற்பத்தி செய்வதற்காக நாம் செலவிடும் நேரம் மற்றும் முயற்சி என்பதே **ஊழியம்** (Labor) ஆகும். ஊழியம் என்பதற்குள் பௌதீக மற்றும் உளரீதியான செயற்பாடுகள் அனைத்தும் உள்ளடங்குகின்றன.

பொருள்கள் மற்றும் சேவைகளை உற்பத்தி செய்வதற்காக இயற்கை வழங்கிய நன்கொடையே **நிலம்** (Land) ஆகும். நிலம் என்பதற்குள் காற்று, நீர், நிலப்பகுதி மற்றும் பூமிக்கு அடியிலுள்ள தாதுப்பொருள்கள் என்பன உள்ளடக்கப்படுகின்றன.

உற்பத்தி செய்யப்பட்ட ஒருவகை பொருளே **மூலதனம்** (Capital) ஆகும். இதனை நாம் மற்றுமொரு பொருளை அல்லது சேவையினை உற்பத்தி செய்யப் பயன்படுத்துகின்றோம். கட்டடங்கள், பாரிய இயந்திரங்கள், பாரிய நீர்ப்பாசனக் குழங்கள், மற்றும் தொழிற்சாலைகள் போன்ற பல்வகை விடயங்கள் இதனுள் உள்ளடக்கப்படுகின்றன. கல்வி மற்றும் வேலையில் ஈடுபடுவதனூடாக அடைந்துகொள்ளும் பயிற்சி என்பவற்றிலிருந்து மக்கள் பெற்றுக்கொள்ளும் திறன் மற்றும் அறிவு போன்ற மனித மூலதனமும் இதற்குள் உள்ளடக்கப்படுகின்றது. பொருளியல் மற்றும் ஏனைய பாடங்களை கற்பதனூடாகவும் ஒரு முழுநேர வேலையில் ஈடுபடுவதனூடாகவும் உங்களது மனித மூலதனத்தை அதிகரிக்க முடியும். மனித மூலதனம் ஊழியத்தின் தரத்தினை விரிவடைய செய்யும்.

ஊழியம், நிலம் மற்றும் மூலதனம் ஆகிய உற்பத்திக் காரணிகளை ஒழுங்கமைக்கும் ஒரு வளமே **முயற்சியாண்மையாகும்** (Entrepreneurship). வியாபாரம் தொடர்பான தீர்மானங்களை மேற்கொண்டு அத்தீர்மானங்களினால் தோற்றம்பெறும் ஆபத்துக்களை தாங்கிக் கொள்பவர் முயற்சியாண்மை யாளராவார். மேலும் என்ன பொருளை, எவ்வாறு, எப்போது, மற்றும் யாருக்காக உற்பத்தி செய்தல் போன்றவை தொடர்பாக தீர்மானங்களை எடுப்பவரும் முயற்சியாண்மையாளரே.

கிடைக்கத்தக்கதாகவுள்ள தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி எம்மிடமுள்ள வரையறுக்கப்பட்ட வளங்களை பொருள்கள் மற்றும் சேவைகளாக மாற்றுகின்றோம். இத்தொழில்நுட்பம் எமது அறிவு (எமது மனித மூலதனம்) மற்றும் எம்மிடமுள்ள ஏனைய வளங்கள் என்பவற்றினால் வரையறுக்கப்படுகின்றது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



H.M.M. பாக்கீர்
B.A(SL) Econ
மட்டு அம்பாறை பிரபல ஆசிரியர்

# The MCQ Quiz Bank


1. பின்வரும் கூற்றுக்களில் தவறான கூற்று?
   1. அடுத்து நடைபெறவிருக்கும் ஒலிம்பிக் இறுதிக் கிரிக்கட் போட்டியை பார்வையிடுவதற்கு உமக்கு இரு இலவசமாக பயணச்சீட்டுக்கள் இரண்டு கிடைத்ததெனில் அதற்கு சந்தர்ப்பச் செலவு உண்டு
   2. சந்தர்ப்பச் செலவிலிருந்து தவிர்ப்பதற்கு உள்ள நல்ல வழி பணத்தைக் கையில் வைத்துக் கொள்ளுதலாகும் ஏனெனில் பணத்திற்குச் சந்தர்ப்பச் செலவு இல்லை
   3. இயற்கை நீர், சூரிய ஒளி, காற்று என்பவற்றுக்கு சந்தர்ப்பச் செலவு இல்லை
   4. பொருட்கள் சேவைகள் உற்பத்தியின் போதும் நுகர்வின் போதும் சந்தர்ப்பச் செலவு உண்டு
   5. சந்தர்ப்பச் செலவின் வரைவிலக்கணத்தை கூறும் போது கருத்தில் கொள்ளப்படும் பிரதான எடுகோள் மாற்றுத் தெரிவின் சிறந்த ஒன்று என்பதாகும்

2. பின்வருவனவற்றில் நேர்க் கூற்றை இனங்காண்க
   1. சேவைகள் துறையில் உள்ள வினைத்திறன் குறைந்த தொழிலாளர்களுக்கு கூலி உயர்வு வழங்கப்பட வேண்டும்
   2. சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை குறைக்கப்பட வேண்டும்
   3. ரூபாவின் பெறுமதி தேய்வை சீர் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்
   4. பகுதி நேர வேலை செய்யும் தொழிலாளரது விகிதாசாரம் நாட்டின் ஊழியப்படையில் உயர்ந்து வருகிறது
   5. வேலையின்மை மட்டம் மிக உயர்வாகும்

3. பின்வருவனவற்றல் நிலம் என்பதில் சேராதது?
   1. பருவப் பெயர்ச்சிக் காற்று
   2. வட கடலிலுள்ள கணிய நெய்
   3. நன்னீர் குளத்திலுள்ள மீன்
   4. ஆடைகளை உளர்த்த பயன்படும் சூரிய ஒளி
   5. கிழக்குக் கரையில் குவிந்து கிடக்கும் கணிய மணல்

4. பின்வருவனவற்றுள் உம்மால் உடன்பட முடியாத கூற்றை இனங்காண்க.
   1. அருமை என்பது தீர்வுகாணமுடியாததும் ஆனால் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைக்கான தீர்வு ஒரு முக்கிய கடமையாகும்
   2. உற்பத்திக் காரணிகளுக்கு வழிவந்த கேள்வி காணப்படும் போது நுகர்வுப் பொருட்களுக்கு நேர்க் கேள்வி காணப்படும்
   3. வறுமை என்பது அருமையல்ல
   4. அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினை யாவும் தெரிவுப் பிரச்சினையாகும்
   5. சந்தர்ப்பச் செலவு கணிப்பீட்டின் போது காலம் கருத்தில் கொள்ளப்படுவதில்லை

5. பின்வரும் உற்பத்தி இயல்தகவு எல்லை X பண்டத்தின் உற்பத்தியில் புதிய தொழிநுட்பம் தாக்கம் விளைவிக்க முன்பும், பின்பும் இருப்பதை விளக்குகின்றது.




Y இன் சார்பாக OF அளவு X இன் உற்பத்தியின் மொத்த அமையச் செலவில் குறைப்பை பிரதிபலிக்கும் இடைவெளி எது?


1. CB  2. CA  3. BA
4. FG  5. GH

6. பின்வருவனவற்றுள் காரணி விளைதிறனை அதிகரிக்காத காரணி எது?
   1. பௌதீக மூலதனம்
   2. ஆராய்ச்சி அபிவிருத்திக்கான முதலீடு
   3. உள்ளீட்டு அலகு ஒன்றின் வெளியீட்டு அளவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. தொழிநுட்ப அறிவு
5. அறநெறியும் மனப்பாங்கும்

7. திட்டமிடல் பொருளாதாரம் தொடர்பான மிகச் சரியான கூற்று?
   1. எல்லா வளங்களும் அரச உடமையாகும்
   2. வெளிவாரி விளைவுகள் ஏற்படுவதில்லை
   3. வருமான ஏற்றத்தாழ்வு ஏற்படுவதில்லை
   4. விலைகளின் பங்களிப்பு உண்டு
   5. மேலே குறிப்பிட்ட யாவும்


8. 


வளங்கள் குறைபயன்பாட்டை நோக்கிச் செயற்படும் திசையைச் சரியாகக் காட்டுவது?
   1. A யிலிருந்து B வரை
   2. B யிலிருந்து C வரை
   3. C யிலிருந்து D வரை
   4. D யிலிருந்து C வரை
   5. B யிலிருந்து A வரை

9. சுதந்திர சந்தைப் பொருளாதாரமொன்றில் விலை முறையின் பிரதான தொழிற்பாடுகளில் ஒன்றாக அமைவது
   1. பொதுப் பொருட்களை வழங்குதல்
   2. வருமான சமமின்மையை உறுதி செய்தல்
   3. அருமையான வழங்களை பங்கீடு செய்தல்
   4. நிறைதொழில் நிலமையை உறுதி செய்தல்
   5. விலை மட்டங்களை உறுதியாகப் பேணுதல்

10. பின்வரும் வாக்கியத் தொடர்களில் பொருளாதாரப் பொருட்கள் மூன்றைக் குறிப்பிடும் மிகச் சரியான வாக்கியத் தொடரைத் தெரிவு செய்க.
   1. ஆடம்பரப்பொருள்/அத்தியவசியப் பொருள்/சுதந்திரப் பொருள்
   2. ஏற்றுமதிப் பொருள்/இறக்குமதிப் பொருள்/உள்நாட்டுப் பொருள்
   3. நுகர்வுப் பொருள்/இடைநிலைப் பொருள்/மூலதனப் பொருள்
   4. தனியார் பண்டம்/அரச பண்டம்/நன்கொடைப் பண்டம்
   5. காற்று/பாண்/கோதுமை மா

11. கருத்தில் கொள்ளபபடும் விலைக்கும் கேள்வித் தொகைக்குமிடையே எதிர்க்கணியத் தொடர்பு ஏற்படுவதற்கான காரணம்?
   1. பொருள் இழிவுப் பண்டமாக இருப்பது
   2. பொருள் கிபன் பண்டமாக இருப்பது
   3. பதிலீட்டு விளைவாகும்
   4. பொருள் பதிலீடாக இருத்தல்
   5. பொருள் ஆடம்பரப் பண்டமாக இருத்தல்

12. 


கீழே காட்டப்பட்ட கேள்வி வரைபில் யு புள்ளியில் நெகிழ்ச்சி?
   1. 1.0 ஆகும்
   2. 0.1 ஆகும்
   3. 0.33 ஆகும்
   4. 3.33 ஆகும்
   5. 0.67 ஆகும்

13. பொருளொன்றின் சமநிலை விலையில் கேள்வி நெகிழ்ச்சி -1.2 ஆகும். நிரம்பல் நெகிழ்ச்சி 0.8 ஆகும். பொருளின் எல்லா அலகுகளுக்கும் ரூபா 10 உற்பத்தி வரி விதிக்கப்படுமாயின் வரியில் உற்பத்தியாளர் தாங்கும் பாகம்?
   1. ரூபா 6 ஆகும்
   2. ரூபா 4 ஆகும்
   3. ரூபா 7 ஆகும்
   4. ரூபா 3 ஆகும்
   5. ரூபா 7.50 ஆகும்

14. பொருளொன்றுக்கான சந்தை சமநிலை விலை ரூபா 8 ஆகவும் சமநிலை தொகை 50 அலகுகள் எனவும் கற்பனை செய்து கொள்க. விலை ரூபா 16 இல் கேள்வித் தொகை பூச்சியமாகும் விலை பூச்சியத்தில் நிரம்பல் தொகை 25 ஆகும். எனில் நுகர்வோர் மிகையும் உற்பத்தியாளர் மிகையும் முறையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ரூ 200/=, ரூ 300/=
2. ரூ 300/=, ரூ 200/=
3. ரூ 400/=, ரூ 100/=
4. ரூ 200/=, ரூ 100/=
5. ரூ 50/=, ரூ 75/=

15. கணணி கல்வி நெறிக்குரிய பொதுக் கல்வித் திட்டத்திற்காக அரசு குறை நிரப்புக் கொடுப்பனவை வழங்க முன்வருமாயின் அக்கல்வி சேவையின் நிரம்பல் நெகிழ்ச்சியின் தன்மை?
1. நெகிழ்ச்சியற்றதாக இருத்தல்
2. நெகிழ்ச்சியுடையதாக இருத்தல்
3. நிறைவு நெகிழ்ச்சியாக இருத்தல்
4. அலகு நெகிழ்ச்சியாக இருத்தல்
5. பூச்சிய நெகிழ்ச்சியாக இருத்தல்

## CIMAவின் தேவை

எம்மில் அநேகமானோருக்கு எதிர்காலம் பற்றிய வேட்கை இருக்கவே செய்கின்றது. சிறந்த தொழிலொன்றை பெறவேண்டும் அத்தொழிலில் உச்ச நிலைக்கு செல்லவேண்டும் என்ற எதிர்பார்ப்பு எல்லோருக்கும் இருப்பதுண்டு குறிப்பாக இன்றைய மாணவர்கள், இளம் சமுதாயத்தினர் சிறந்த தொழில்வாய்ப்பொன்றை பெறவேண்டும் என்பதில் உறுதி பூண்டுள்ளனர். இன்றைய நிலையில் பெற்றோரும் தமது பிள்ளைகள் சிறந்த உயர் தொழிலில் ஈடுபடவேண்டும் என்ற எதிர்பார்ப்போடும், ஆர்வத்தோடும் பிள்ளைகளுக்கான கல்விக்கு அதிக முதலீட்டினை செய்கின்றனர். இன்றைய போட்டிச் சூழலில் மட்டுப்படுத்தப்பட்ட தொழில்வாய்ப்புக்களே காணப்படுகின்றன. இதனால் தொழில்களை பெறுவதற்கு தொழில் சூழலுக்குள் உள்நுழையும் எவரும் தம்மை வேறுபடுத்தி அடையாளங்காட்ட வேண்டிய தேவை காணப்படுகின்றது. இன்றைய வணிகச்சூழலும் உலகமயமாக்கத்திற்கு உட்பட்டிருப்பதால் உலகத்தரம் வாய்ந்த, உலகசந்தைக்கு ஈடுகொடுக்கத்தக்க வகையிலான ஊழியர்களையே எதிர்பார்க்கின்றனர். இதனாலேயே தொழில்சார் கற்கை நெறிகளுக்கான தேவை அதிகரித்துள்ளது. இன்று எமது நாட்டில் மாணவர்களுக்கான கல்வி வாய்ப்புக்கள் ஏராளமாக குவிந்து கிடக்கின்றன. இத்தகைய எண்ணற்ற தெரிவுகளில் மாணவர்கள் தமது இலட்சியத்தையும் ஒப்பீடு செய்து ஏதேனும் கல்வியினை தொடர நினைக்கின்றனர். உண்மையில் இத்தகைய தீர்மானங்களை மேற்கொள்ளும்போது பல்வேறு விடயங்களையும் சிந்திக்க வேண்டியுள்ளது. நீங்கள் எந்தத்துறைக்கு பிரவேசிக்க வேண்டுமென்றாலும் இன்றைய நிலையில் வணிக அறிவு என்பது மிக அவசியமாகின்றது. ஒரு பொறியியலாளர், மென்பொருள் பொறியியலாளர், வைத்தியர், கணக்காளர், சட்டவல்லுனர் ஆகிய எத்தரப்பில் உயர்தொழிலை மேற்கொள்ள விரும்பினாலும் அவருக்கு வணிகங்கள் பற்றிய அறிவு அவசியமாகின்றது. அதுமட்டுமன்றி புதிய ஒரு வணிகத்தை தொடங்குவதற்கும் வணிகம் பற்றிய அறிவு அவசியம். இன்றைய நிலையில் எல்லா தொழில்களும் வணிகமயப்பட்டிருப்பதால் வெறுமனே தொழில்நுட்ப அறிவினைக் கொண்டு நேரடியாக மிக உயர்தொழிலுக்கு செல்லமுடியாது. ஆகவே இத்தகைய வணிகம் சார்ந்த உலகத்தரம் வாய்ந்த கற்கை நெறியொன்றை தெரிவுசெய்ய வேண்டுமல்லவா?

இலங்கையில் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக வணிகத்துறையில் சிறந்த தலைவர்களை உருவாக்கிய சர்வதேச தொழில்சார் தகமையாக CIMA தனக்கென தனியிடம் வகிக்கின்றது. இலங்கையில் மட்டுமல்ல சர்வதேச ரீதியாக இன்றளவில் ஏறக்குறைய 182 நாடுகளில் சிறந்த வணிகத்தலைவர்களை உருவாக்குவதில் CIMA தனக்கென தனியிடம் வகிக்கின்றது. ஐக்கிய இராச்சியத்தின் (UK) தகமைச்சான்றிதழான பட்டய முகாமைத்துவ கணக்கீட்டு கற்கைநெறி (CIMA) 1948ம் ஆண்டு உருவாக்கப்பட்ட உயர் தொழில்சார் கற்கை நிறுவனமாகும். இன்றளவில் ஐக்கிய இராச்சியத்திற்கு அடுத்தபடியாக இலங்கையே இதன் பாரிய பங்காளராக காணப்படுகின்றது. CIMA கற்கை நெறி போட்டிமிக்க வணிகச் சூழலை எதிர்கொள்ளக்கூடிய மனிதவளங்களை உருவாக்கிக் கொண்டிருக்கின்றது. உலகின் முன்னணி நிறுவனங்களை முகாமைசெய்யக்கூடிய வல்லமையை CIMA கற்கைநெறி வழங்குகின்றது. இதனாலேயே CIMA கற்கைநெறியை பூர்த்தி செய்கின்ற மாணவர்கள் வணிகம் பற்றிய பூரண அறிவோடு எத்தகைய வணிகச் சவால்களையும் எதிர்கொள்ளக்கூடிய மனித வளங்களாக மாறுகின்றனர். CIMA கற்கை நெறி மாணவர்களுக்கு பிரயோக ரீதியான அறிவினை வழங்குகின்றது. CIMA கற்கைநெறியின் பாடத்திட்டங்களானது முழுக்க முழுக்க பிரயோக ரீதியில் அமைவதோடு 5 வருடங்களுக்கு ஒரு முறையேனும் மீளாய்வு செய்யப்படுகின்றது. இந்த மீளாய்வு வணிகச்சூழலில் அன்றாடம் ஏற்படுகின்ற மாற்றங்களை பல்வேறு ஆய்வுகளின் மூலம் கண்டறிந்து மீளாய்வு செய்கின்றது. இத்தகைய மீளாய்வு செய்யப்படும் முறையினைக் கொண்ட ஒரே தொழில்சார் கற்கை நெறி CIMAவே ஆகும்.

உயர்தரப்பரீட்சைகள் நிறைவடைகின்ற நிலையில் மாணவர்கள் தமது அடுத்தக்கட்ட தீர்மானம் பற்றி சிந்திக்குமிடத்து எத்துறையை தெரிவு செய்தாலும் வணிக ரீதியான அறிவையும் இணைத்தே பெறவேண்டும். இதற்கு CIMA ஒரு சிறந்த வழிமுறையாகும். பெறுபேறுகள் வெளியாகியபின் பல்கலைக்கழகம் செல்லும் எதிர்பார்ப்பிலே இருக்கின்ற மாணவர்கள் பல்கலைக்கழகம் தொடங்குவதற்கு முன்பு CIMA கற்கைநெறியை ஆரம்பிக்க முடியும்.

எம்மில் பலர் CIMA கற்கைநெறி ஒரு கணக்கீட்டு கற்கைநெறியென்றும் இது க.பொ.த உயர்தரத்தில் வணிகப்பிரிவில் பயின்ற மாணவருக்கு மாத்திரமே பொருந்தும் என எண்ணுகின்றனர். ஆனால் CIMA கற்கைநெறி முகாமைத்துவ கணக்கீட்டு கற்கைநெறியாகும். இதன்கீழ் கணக்கீட்டு அறிவுடன் இணைத்து முகாமைத்துவ அறிவும் பூரணமாக அவசியமாகின்றது. எனவே இன்றைய நிலையில் எத்துறையினருக்கும் முகாமைத்துவ அறிவுஅவசியமாகின்றது. உதாரணமாக ஒரு வைத்தியர், பொறியியலாளர் அல்லது சட்டத்தரணி தமது தொழிற்சூழலில் எண்ணற்ற வணிக ரீதியிலான சவால்களை எதிர்நோக்க நேரிடும், மனித வளங்களை முகாமை செய்ய வேண்டி ஏற்படும், எதிர்கால செயற்திட்டங்களை உருவாக்க வேண்டி நேரிடும். இத்தகைய விடயங்களில் எத்துறையில் இருப்போருக்கும் முகாமைத்துவ அறிவு என்பது இன்றியமையாததாகின்றது. இத்தகைய பிரயோக ரீதியலான முகாமைத்துவ அறிவினை CIMA கற்கைநெறி வழங்குகின்றது. இன்றைய நிலையில் இலங்கையில் பல்வேறு துறைகளில் பயில்வோரும் CIMA கற்கைநெறியை தெரிவு செய்வதற்கான காரணமும் இதுவே ஆகும். குறிப்பாக பொறியியல், சட்டம் ஆகிய துறையினர் CIMA கற்கைநெறியை தெரிவு செய்கின்றனர் ஆகவே CIMA வணிகப்பிரிவு மாணவர்களுக்கு மட்டுமன்றி எத்துறை மாணவர்களுக்கும் பொருத்தமான ஒரு கற்கை நெறியாகும். ஆகவே பல்கலைக்கழகம் செல்லுகின்ற மாணவர்கள் கல்விசார் தகமையோடு தொழில்சார் தகமையையும் CIMA பயிலுவதனூடாக பெறமுடியும். இதன் மூலம் தொழிற்சூழலில் உயரிய தொழில்களுக்கு நேரடியாக பிரவேசிக்க முடியும்.

பல்கலைக்கழக வாய்ப்பை தவறவிடும் மாணவர்களும் இன்று பல்வேறு கற்கைநெறிகளில் ஈடுபடுகின்றனர். ஆயினும் CIMA கற்கைநெறி ஒரு முழுமையான, வினைத்திறனான கற்கைநெறி என்பதனால் CIMA கற்கைநெறியை பூர்த்தி செய்வதன் மூலம் சிறந்த உயர்தொழில் வாய்ப்புக்களை பெறமுடியும். பல்கலைக்கழக கனவு நனவாகாத மாணவர்கள் CIMA வை முழுமையாக பூர்த்தி செய்வதனூடாக ஐக்கிய இராச்சியத்தின் முன்னணி பல்கலைக்கழகங்களான Birimingam, Northurmbria, Ballarate என்பனவற்றில் வணிகமானி (BSC) வணிகமுதுமாணி (MBA) ஆகிய கல்விசார் தகமைகளை மேலும் ஒரு வருடத்தில் இலகுவாக பெற முடியும். எனவே CIMAவினூடாக கல்விசார் தகமைகளினை தனதாக்கி கொள்ளக்கூடிய வாய்ப்பும் உண்டு. மேலும் சர்வதேச ரீதியாக உள்ள பல்வேறு முன்னணி நிறுவனங்களும் தமது முகாமை ஊழியர்களை CIMA பயில முதலீடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சர்வதேச நாடுகளில் உயர் தொழிலில் ஈடுபட விரும்புவோர் CIMA பயிலுவதனூடாக உலகின் முன்னணி நாடுகளிலுள்ள முன்னணி நிறுவனங்களில் சிறந்த தொழில்வாய்ப்பை பெறமுடியும். இன்றளவில் போட்டிமிக்க தொழிற்சூழலில் தலைநகரில் இருப்போர் கூடுதலாக இத்தகைய வாய்ப்புக்களை பெற்றுக்கொள்கின்றனர். இந்நிலையின்றி CIMA கற்கைநெறி பற்றி எல்லா பிரதேசத்தினரும் அறிந்துகொள்வதோடு அதன் மூலம் பயன் பெறுவதே சிறந்த நிலையாகும். எத்துறையில் இருப்போரையும் குறுகிய காலத்தில் சிறந்த வணிகத்தலைவராக மாற்றும் வல்லமை CIMA கற்கைநெறிக்கு உண்டு. CIMA கற்கைநெறியின் உங்களது முதலீடு உங்களது ஒட்டுமொத்த எதிர்காலம் தொடர்பான முதலீடாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ECON BITZ

V. பரமேஸ்வரன்
B.B.A (Hons), MA (Econ)
சிரேஷ்ட்ட பொருளியல் ஆசிரியர்
சென். ஜோசப் கல்லூரி கொழும்பு.

01. "வள அருமை" என்பதனை விளக்குக.

- வரையறையற்ற சமூக விருப்பங்களுடன் ஒப்பிடுமிடத்து வரையறுக்கப்பட்ட வளங்கள் பற்றாக் குறையாக காணப்படுவதனை வள அருமை குறிக்கும்.
- வறையறுக்கப்பட்ட வளங்களும் வரையறையற்ற சமூகத்தின் விருப்பங்களும் அருமைப் பிரச்சினைக்கு காரணங்களாகும்.
- உலகில் தோன்றுகின்ற எல்லா பொருளாதாரப் பிரச்சினைகளுக்கும் மூலகாரணம் வள அருமை ஆகும்.
- அருமை இல்லாத சமூகத்தில் பொருளாதாரப் பண்டம் என்று எதுவும் இருக்க முடியாது.
- பொருளொன்றிற்கு சந்தையில் நிலவும் தற்காலிக பற்றாக்குறை அருமைப் பிரச்சினையாக கருதப்பட மாட்டாது.
- உலகில் எல்லா நாடுகளிலும் அருமைப் பிரச்சினை காணப்படும்.
- காலமும் அருமையான வளமாக காணப்படும்.

02. "அமையச் செலவு" என்பதனை விளக்குக.

- மாற்றுத்தெரிவுகள், அருமை உள்ள நிலையில் அதிசிறந்த தெரிவு ஒன்றினை மேற்கொள்வதற்காக இழக்கப்படுகின்ற அடுத்த சிறந்த தெரிவின் பெறுமதி குறிப்பிட்ட தெரிவினை மேற்கொள்வதற்கான அமையச் செலவு ஆகும்.
- அமையச் செலவானது ஒரு மெய்ரீதியான எண்ணக்கருவாகும்.
- அமையச் செலவில் தனிப்பட்ட செலவு மட்டுமல்லாது வெளிவாரிச் செலவும் உள்ளடங்கும்.
- அமையச் செலவானது தோன்றுவதற்கு வளங்களின் மாற்றுப் பயன்பாட்டுத் தன்மையும் வள அருமையும் காரணங்களாகும்.
- அமையச் செலவானது நேர்க்கணிய பெறுமதியைக் கொண்டுள்ள பொருட்கள் யாவும் பொருளாதாரப் பண்டங்களாகும்.

03. கணக்கியல் இலாபம், பொருளியல் இலாபம் ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டை தெளிவுபடுத்துக.

- கணக்கியல் இலாபம் என்பது மொத்த வருமானத்திலிருந்து எல்லா ஒப்பந்த செலவுகளையும் அல்லது நேர் செலவுகளை (நேரடி பயணச் செலவுகளை)யும் பெறுமானத்தேய்வையும் கழிப்பதன் மூலம் பெறப்படும் தொகையைக் குறிக்கும்.
- ஒப்பந்தச் செலவு அல்லது நேரடிச் செலவு என்பது சம்பளம் / கூலி, வாடகை, வட்டி, உள்ளீடுகள் மீதான செலவு, அனுமதிப்பத்திர கட்டணங்கள் போன்றவற்றைக் குறிக்கும்.
- கணக்கியல் இலாபம் கணிப்பிடப்படுவதன் நோக்கம் வரி செலுத்த வேண்டிய வருமானத்தை கணிப்பிடுவதாகும்.
- பொருளியல் இலாபம் அல்லது பொருளாதார இலாபம் என்பது மொத்த வருமானத்திலிருந்து மொத்த செலவுகளை கழிக்க வரும் தொகையினை குறிக்கும்.
- பொருளியலில் மொத்த செலவு என்பது உற்பத்தியின் அமையச் செலவினை அதாவது எல்லா உற்பத்தி வளங்களின் / எல்லா பொருளாதார வளங்களின் அமையச் செலவினை குறிக்கும்.
- அமையச் செலவில் நேர் செலவுகளும் / வெளிப்படையான செலவுகளும் (Explicit Cost), நேரில் செலவுகளும் / உள்ளார்ந்த செலவுகளும் (Implicit Cost) உள்ளடங்கும்.
- உள்ளார்ந்த செலவு / நேரில் செலவு என்பது குறிப்பிட்ட பொருளாதார நடவடிக்கைக்காக உற்பத்தியாளன் இழந்த சம்பள வருமானம், இழந்த வட்டி வருமானம், இழந்த வாடகை வருமானம், இழந்த சாதாரண இலாபம், பொருளாதார தேய்வு போன்றவற்றைக் குறிக்கும்.
- உள்ளார்ந்த செலவானது உற்பத்தி நிறுவனத்திற்கு சொந்தமாகவுள்ள உற்பத்தி வளங்களின் அமையச் செலவை குறிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கணக்கியல் இலாபமானது பொருளியல் இலாபத்தை விட உயர்வாக காணப்படும்.
- சில வேளைகளில் கணக்கியல் இலாபம் நேர்க்கணியமாக இருக்கும் போது பொருளியல் இலாபம் எதிர்கணியமாக இருக்கலாம்.

04. "வளங்களின் உச்சப் பயன்பாட்டைப் பெறுவதற்கு தற்பொழுது கிடைக்கக் கூடியதாகவுள்ள வளங்களை பூரண வேலைவாய்ப்பு நிலையிலும் (Full employment), பூரண உற்பத்தி (Full production) இலக்கு நிலையிலும் பயன்படுத்துதல் வேண்டும்."

(i) மேலேயுள்ள கூற்றில் பூரண வேலைவாய்ப்பு நிலமை என்பதனால் நீர் கருதுவது யாது?
- தற்பொழுது உற்பத்திக்கு பயன்படுத்தக் கூடியதாகவுள்ள எல்லா வளங்களையும் பயன்படுத்துதல் வேண்டும் என்பதனை இது குறிக்கும்.
- எதிர்கால சந்ததியினர் பாதிக்கப்படாத வகையில் இப்பொழுது உள்ள வளங்களை பயன்படுத்துதல் வேண்டும் என்பதனையும் இது குறிக்கும்.

(ii) 'பூரண உற்பத்தி' என்றால் என்ன?
- உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் எல்லா சாதனங்களையும் உச்ச செயற்றிறனுடன் பயன் படுத்துதல் வேண்டும்.
- எல்லா சாதனங்களும் சமூகத்தின் பௌதீகத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு உச்சமாக பங்களிக்கக் கூடிய முறையில் பயன்படுத்தபட வேண்டும் என்பதனை இது குறிக்கும்.

(iii) உற்பத்திச் செயற்றிறன், வள ஒதுக்கீட்டுச் செயற்றிறன் ஆகியவற்றிற்கான நிபந்தனைகள் யாவை?

**உற்பத்திச் செயற்றிறன்**
- பூரண வேலை வாய்ப்பு / நிறைதொழில் மட்டம்
- பூரண உற்பத்தி / முழு உற்பத்தி
- AC = MC

**வள ஒதுக்கீட்டுச் செயற்றிறன்**
- P = MC
- MB = MC

(iv) "உத்தம பொருட் கலவை (Optimum Product Mix)" என்றால் என்ன?
- சமூகம் அதிகளவவில் விரும்பம் பொருட்களையும் சேவைகளையும் கொண்ட சேர்க்கை உத்தம பொருட் கலவை எனப்படும்.
- வள ஒதுக்கீட்டுச் செயற்றிறன் காணப்படும்போது தெரிவு செய்யப்படும் பொருட் சேர்க்கையை இது குறிக்கும்.

கண்டியில் நடைபெறுகிறது...
On Progress in Kandy...
தொடர்புகளுக்கு
071 94 94 227
Account : Business Studies
I.L.A SALAM : B BANUCHANDAR

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுகர்வோர் மிகையும் உற்பத்தியாளர் மிகையும்

சிரேஷ்ட்ட விரிவுரையாளர்
காமினி வீரசிங்க
பொருளியல் துறை
ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்


க.பொ.த உயர்தர திருத்தப்பட்ட பாடத்தின்படி 12ம் தரத்தின் இரண்டாவது பாட அலகின் உபபிரிவின் ஒன்றான சந்தை சமனிலை நிலையின் கீழ் பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்படுகின்றன

**2.14 உபபிரிவின் கீழ் சந்தை சமனிலை என்ற தலைப்பின் கீழ் பின்வரும் தலைப்புக்கள் கலந்துரையாடப்படுகின்றன.**

* சமனிலை தொடர்பான எண்ணக்கருக்கள்
* மிகை நிரம்பல்
* மிகை நிரம்பல் விலை
* உற்பத்தி மிகை
* மிகைக்கேள்வி
* மிகை கேள்வி விலை
* நுகர்வோர் மிகை


அல்பிறட் மார்ஷல் என்ற பொருளியலாளர் நுகர்வோர் மிகை என வரைவிலக்கணப்படுத்துவது பொருள் ஒன்றை கொள்வனவு செய்யும் போது அதற்காக செலுத்த விரும்பும் விலைக்கும் உண்மையாக சந்தையில் தீர்மானிக்கப்பட்டுள்ள சமனிலை விலைக்கும் அதாவது அப்பொருளுக்கு அவர் செலுத்தும் உண்மையான விலைக்கும் இடையிலான வேறுபாடே ஆகும். இவ்வேறுபாடு சமனிலை வரை உள்ள அனைத்து அலகுகள் தொடர்பாக கூட்டும் போதும் பெறப்படும் மொத்தம் சமனிலையின் போது நுகர்வோர் மிகை என கருதப்படும்.

நுகர்வோர் பொருளொன்றின் குறிப்பிட்ட அலகுகளை கொள்வனவு செய்யும் போது அவை தொடர்பில் செலுத்த விரும்பும் உச்ச விலை கேள்விக்கோட்டில் காட்டப்படுகின்றது.




வரைபடத்தின்படி நுகர்வோர் 400 அலகுகளை கொள்வனவு செய்வாராயின் செலுத்த விரும்பும் உச்ச விலை 2/= ஆகவும், 300 அலகுகளை கொள்வனவு செய்வாராயின் அலகொன்றுக்கு செலுத்த விரும்பும் உச்ச விலை 4/= ஆகவும், 200 அலகுகளை கொள்வனவு செய்வாராயின் செலுத்த விரும்பும் உச்ச விலை 6/= ஆகவும் காணப்படும்.

நுகர்வோர் பொருள் தொடர்பில் செலுத்தும் உண்மை விலை அதாவது சந்தை சமனிலையானது கேள்வி, நிரம்பல் காரணிகளுக்கேற்றவாறே தீர்மானிக்கப்படுகின்றது.




இவ்வரைபடத்தின்படி சந்தையில் தீர்மானிக்கப்பட்டுள்ள சமனிலை E என்ற எழுத்தால் குறிக்கப்படுவதோடு சமனிலை விலை 4/= ஆகவும், சமனிலை அலகுகள் 200 ஆகும். இதன்படி நுகர்வோருக்கு 200 அலகுகள் வரை 4 செலுத்தி பொருளை கொள்வனவு செய்ய முடியும். இதன்படி சமனிலை தொகைக்கான நுகர்வோர் செலுத்தும் உண்மையான விலை 4/= ஆகும்.

இதன்படி நுகர்வோர் 100 அலகுகளை கொள்வனவு செய்ய 6/= வரை செலுத்த விரும்பினும் (கேள்விக்கோட்டின் படி) உண்மையாக அவர் செலுத்தும் விலை சமனிலை விலையான 4/= வே ஆகும். இதனால் நுகர்வோருக்கு அலகொன்றுக்கு 2/= இலாபமொன்று கிடைக்கின்றது. இந்த இலாபம் 1 அலகு தொடங்கி 199 அலகுவரை அதாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமனிலைத்தொகை வரையில் கிடைக்கும். சமனிலை தொகை வரையில் நுகர்வோர் செலுத்த விரும்பும் விலையை விட குறைந்த விலையையே செலுத்துவார். இவ்வாறு சமனிலை வரை கிடைக்கின்ற மொத்த மிகையே சமனிலையின் போதான நுகர்வோர் மிகை எனப்படுகின்றது. இது கீழ்வரும் சமன்பாட்டின் மூலம் கணிக்கலாம்.

| | |
|---|---|
| **சமனிலையின் போதான நுகர்வோர் மிகை** = | **<u>(கேள்வி பூச்சியமாகும் விலை - சமனிலை விலை) x சமனிலை தொகை</u>**<br>**2** |

மேற்காட்டப்பட்ட வரைபடத்தின்படி நுகர்வோர் மிகையினை கணிப்பிடுவோம்.


சமனிலையின் போது நுகர்வோர் மிகை $= \frac{(8-4) \times 200}{2}$

$= \frac{4 \times 200}{2}$

$= 400/=$

குறிப்பிட்ட பொருளின் கேள்வி, அல்லது நிரம்பலினை தாக்குகின்ற ஏதேனும் காரணியொன்றின் காரணமாக சந்தையின் கேள்வி அல்லது நிரம்பல் கோடு மாற்றமடைவதால் சந்தை சமனிலை விலை மாற்றமடையுமாயின் அது நுகர்வோர் மிகையின் பெறுமதியை மாற்றும்.


**<u>உதாரணமாக கேள்விக்கோடு மாறாநிலையில் நிரம்பல் கோடு வலப்புறமாக நகர்வடையுமாயின்</u>**




மேற்காட்டப்பட்ட வரைபடத்தின்படி கேள்விக்கோடு மாறாத நிலையில் நிரம்பல் கோடு இடப்புறமாக நகர்வடையும் போது நுகர்வோர் மிகை வீழ்ச்சியடைவதோடு, கேள்விக்கோடு வலப்புறமாக நகர்வடையும் போது நுகர்வோர் மிகை அதிகரிப்பதை காணலாம்.

**<u>உற்பத்தியாளர் மிகை</u>**

குறிப்பிட்ட பொருளொன்றின் சந்தை சமனிலை விலைக்கும், உற்பத்தியாளர் சந்தைக்கு பொருளை வழங்க எதிர்பார்க்கின்ற இழிவளவான விலைக்கும் இடையிலான வேறுபாடு உற்பத்தியாளர் மிகை என பொருளியலாளர் அல்பிறட் மார்ஷல் விபரிக்கின்றார். இவ்வேறுபாடு சந்தை சமநிலை தொகை வரை அனைத்து அலகுகள் தொடர்பிலும் காணப்படும் மொத்த பெறுமதி ஆகும். அல்லது **<u>உற்பத்தியாளர் மொத்த வருமானத்திலிருந்து மொத்த மாறும் செலவினை நீக்க வரும் மீதி உற்பத்தியாளர் மிகை ஆகும்.</u>**





உற்பத்தியாளர் சந்தைக்கு நிரம்பல் செய்ய எண்ணுகின்ற குறிப்பிட்ட பொருளின் குறிப்பிட்ட அலகுகள் தொடர்பில் எதிர்பார்க்கின்ற இழிவளவான நிரம்பல் விலை நிரம்பல் வளையில் காட்டப்படுகின்றது.

மேற்காட்டப்பட்ட வரைபடத்தின் படி சந்தையில் 100 அலகுகள் நிரம்பல் செய்யப்படுமாயின் ஒரு அலகு 5/= க்கும், 200 அலகுகள் நிரம்பல் செய்யப்படும் போது 10/= க்கும், 300 அலகுகள் நிரம்பல் செய்யப்படும் போது 15/= க்கும் நிரம்பல் விலையொன்றை எதிர்பார்ப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்தியாளருக்கு அலகொன்றுக்கு கிடைக்கும் உண்மையான விலையாவது போட்டி சந்தையில் கேள்வி, நிரம்பல் காரணிகளால் தீர்மானிக்கப்படும் சமனிலை விலையே ஆகும்.

இதன்படி போட்டி சந்தையில் சமநிலை விலை தீர்மானிக்கப்படும் போது உற்பத்தியாளருக்க கிடைக்கும் மொத்த உற்பத்தியாளர் மிகை கீழ்வரும் வரைபடத்தில் காட்டப்படுகின்றது.




வரைபடத்தின் படி போட்டி சந்தையில் கேள்வி நிரம்பல் காரணிகளுக்கேற்றவாறு தீர்மானிக்கப்பட்டுள்ள சந்தை சமனிலை விலை 4/= ஆகும். சமனிலை தொகை 200 அலகுகள் ஆகும். இதனால் கருதப்படுவது யாதெனில் உற்பத்தியாளருக்கு அலகொன்றை 14/= விலையில் 200 அலகுகளை விற்பனை செய்யமுடியும் என்பதாகும். ஆயினும் நிரம்பல் கோட்டின்படி 100 அலகுகளை நிரம்பல் செய்வாராயின் நிரம்பல் விலை 2/= என காட்டப்படுகின்றது. ஆயினும் உண்மையாக நிலவுகின்ற விலை 4/= என்பதால் இங்கு அலகொன்று 2/= இலாபமொன்று உற்பத்தியாளருக்கு கிடைக்கின்றது. இந்த இலாபம் சமனிலைத்தொகை வரைக்கும் உற்பத்தியாளருக்கும் கிடைக்கும். இவ்வாறு சமனிலைத்தொகை வரையில் காணப்படும் இந்த மொத்த இலாபத்தை கணிப்பிடல் உற்பத்தியாளர் மிகை எனப்படுகின்றது. உற்பத்தியாளர் மிகையினை கீழ்வரும் சமன்பாட்டினூடாக கணிப்பிடலாம்.

**சமனிலையின் போதான உற்பத்தியாளர் மிகை = $\frac{\text{(சமனிலை விலை - நிரம்பல் தொகை பூச்சியமாகும் விலை)}}{2}$ x சமனிலை தொகை**

$$\text{இதன்படி} = \frac{4-0 \times 200}{2} = \frac{4 \times 200}{2} = \frac{800}{2} = 400/=$$


**அல்லது**

**சமனிலையின் போதான உற்பத்தியாளர் மிகை = மொத்த வருமானம் - மொத்த மாறும் செலவு**

$$\text{இதன்படி} = (4 \times 200) - \frac{1}{2}(4 \times 200) = 800 - 400 = 400/=$$

சந்தை நிரம்பல் வளையி அல்லது கேள்வி வளையி மாற்றமடைவதன் காரணமாக சந்தை சமனிலை விலை மாற்றமடைவதால் உற்பத்தியாளர் மிகையிலும் மாற்றம் ஏற்படும்.


உதாரணமாக நிரம்பல் வளையி மாறாத நிலையில் கேள்வி வளையி மாற்றமடையுமாயின் உற்பத்தியாளர் மிகையில் எவ்வித தாக்கம் ஏற்படும் என்பதை அவதானிப்போம்.




வரைபடத்தின்படி கேள்விக்கோடு $D_1$ வரைபில் இடப்புறமாக நகரும்போது உற்பத்தியாளர் மிகை 80/= விலிருந்து 45 வரை வீழ்ச்சியடைவதோடு கேள்விக்கோடு $D_2$ ஆக வலப்புறமாக நகரும்போது 80/= விருந்து 125/= வரை அதிகரிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரம்பல் வளையியின்படி உற்பத்தியாளர் மிகை




சமனிலையின் போதான உற்பத்தியாளர் மிகை = மொத்த வருமானம் - மொத்த மாறும் கிரயம்


$= (30 \times 200) - \frac{1}{2}(30 \times 200)$

$= 6000 - 3000$

$= 3000/=$

பொருளாதார மிகை

போட்டி சந்தையொன்றில் சமனிலையின் போது காணப்படும் கொடுக்கல் வாங்கலின் போது ஒட்டுமொத்த சமுதாயத்திற்கும் ஏற்படுகின்ற நன்மை பொருளாதார மிகை எனப்படும். நுகர்வோர் மிகை மற்றும் உற்பத்தியாளர் மிகை ஆகியவற்றை கூட்ட வருவது பொருளாதார மிகை ஆகும்.




நுகர்வோர் மிகை $= \frac{1}{2}(25-10) \times 200$

$= \frac{1}{2} \times 15 \times 200 = 1500/=$

உற்பத்தியாளர் மிகை $= \frac{1}{2}(10-5) \times 200$

$= \frac{1}{2} \times 5 \times 200 = 500/=$

பொருளாதார மிகை $= 1500 + 500$

$= 2000/=$

மாற்று வழி

பொருளாதார மிகை $= \frac{1}{2}(25-5) \times 200$

$= \frac{1}{2} \times 20 \times 200 = 2000/=$

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2014ம் ஆண்டு மாணவர்களுக்கென சிறப்பாக தயாரிக்கப்பட்டது.

S.K. பிரபாகரன்
B.B.A(Spl) Dip.in.Edu(merit) MEd, Mphil(R)
செயல்திட்ட அதிகாரி, கணக்கீட்டு ஆசிரியர்
தேசிய கல்வி நிறுவகம்



## கணக்கீடும் அதன் சூழலும் (Accounting and It's Environment)

கணக்கீடு என்பது சமூக விஞ்ஞானமொன்றாகக் (Social Science) கருதப்படுகின்றது. கணக்கீடு சேவை சார்ந்த தொழிலொன்றாக (A service based - Profession) இருப்பதுடன், தீர்மானங்களை மேற்கொள்வதில் பயனுள்ளவகையில் நம்பகத்தன்மையும் தொடர்புத்தன்மையும் கொண்ட நிதிசார் தகவல்களை உள்ளக வெளியக பயன்பாட்டாளர்களுக்கு வழங்குவதாகவும் அமைகின்றது. இவ்வகையில் கணக்கீட்டுடன் தொடர்புடைய வெவ்வேறு தோற்றப்பாடுகளை (Various Aspects) ஆராய்வோம்.

### (01) வணிக மொழியாகக் கணக்கீடு

கணக்கீடு என்பது ஒரு வணிக மொழியாகக் (As the language of Busines) குறிப்பிடப்படுகின்றது. தகவற் பரிமாற்றம் அல்லது தொடர்பாடல் என்பதே மொழியொன்றின் அடிப்படை தொழிற்பாடாகும். கணக்கீடும் இத்தகைய தொழிற்பாட்டினைக் கொண்டிருப்பதனால் கணக்கீடு ஒரு வணிக மொழி எனக்குறிப்பிடப்படுகின்றது. வணிகத்துடன் அக்கறையுள்ள பல்வேறு தரப்பினர்களுக்கு வணிகச் செயற்பாட்டுப் பெறுபேறுகள் (Results of Business Operations) தொடர்பான தகவல்கள் கணக்கீட்டினால் வழங்கப்படுகின்றன.

பொருளாதாரத் தீர்மானங்களை மேற்கொள்வதற்குரிய தகவல்களை வழங்குவதே கணக்கீட்டின் பிரதான குறிக்கோளாகும்.

### (02) செயன்முறையாகக் கணக்கீடு

அமெரிக்கக் கணக்கீட்டுக் சங்கத்தினால் (American Accountancy Association) வழங்கப்பட்ட பின்வரும் கணக்கீட்டுக்கான வரைவிலக்கணம் பொதுவில் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படத்தக்க வரைவிலக்கணமாகக் (acceptable definition) கருதப்படுகின்றது.

"வணிகமொன்றின் தகவல்களைப் பயன்படுத்துவோர் அது தொடர்பான தீர்மானங்களையும் முடிவுகளையும் மேற்கொள்வதற்கு வசதியாக, பொருளாதார நடவடிக்கைகளை இனங்காணுதல் (Identifying), அளவிடுதல் (Measuring), தொடர்பாடல் செய்தல் (Communicating) எனும் செயன்முறைகளை (Process) கொண்டது கணக்கீடு ஆகும்.

மேற்குறிப்பிட்ட வரைவிலக்கணத்திலிருந்து கணக்கீடு தொடர்பாகப் பின்வரும் கருத்துக்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

* தகவல் பயன்பாட்டாளர்களுக்கு (Users of information) வணிகம் தொடர்பான தகவல்களை வழங்குதல்.
* இவ்வாறு வழங்கப்படும் தகவல்கள், அப்பயன்பாட்டாளர்கள் வணிகம் பற்றிய பொருளாதரத் தீர்மானங்களை மேற்கொள்ள உதவுகின்றன.
* கணக்கீடு ஒரு தொடர் செயன்முறையாகும்.
* பொருளாதார நடவடிக்கைகளை இங்காணுதல், அளவிடுதல், தொடர்பாடல் செய்தல் என்பன முக்கிய செயன்முறைகளாகும்.

### (03) கலையொன்றாகக் கணக்கீடு

அமெரிக்க சான்றுபடுத்திய பொதுக் கணக்காளர் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள கணக்கீடு தொடர்பான பின்வரும் வரைவிலக்கணமும் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படும் வரைவிலக்கணமாகக் கருதப்படுகின்றது.

"வணிகமொன்றில் இடம்பெறும் நிதி சார்ந்த கொடுக்கல் வாங்கல்களையும் நிகழ்வுகளையும் (Transactions and events) பதிவு செய்தல், வகைப்படுத்தல், சுருக்கிக்கூறுதல், பகுப்பாய்வு செய்தல், விமர்சனம் செய்தல், தொடர்பாடல் செய்யும் கலையொன்றாகக் கணக்கீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைகின்றது (Accounting is an art). இவ்வரைவிலக்கணத்திலிருந்து கணக்கீடு தொடர்பாகப்பின்வரும் கருத்துக்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

* கணக்கீடு என்பது ஒரு கலை ஆகும்.
* வணிகத்தில் இடம்பெறும் நிதிசார் விடயங்கள் கொடுக்கல் வாங்கல்களும் நிகழ்வுகளும் ஆகும்.
* நிதிசார் விடயங்களைப் பதிவு செய்தல், வகைப்படுத்துதல், சுருக்கிக்கூறல், பகுப்பாய்வு செய்தல், விமர்சனம் செய்தல், தொடர்பாடல் என்பன பிரதான செயன்முறைகளாகும்.

**(04) விஞ்ஞானமொன்றாகக் கணக்கீடு**

கருதுகோள் உருவாக்குதல், அவதானித்தல், தரவு சேகரித்தல், பரீட்சித்தல், விதிகளை உருவாக்குதல் என்பன விஞ்ஞான நடைமுறைகளாகும். இவ்வாறான தன்மைகளைக் கணக்கீட்டிலும் காண முடிவதால் கணக்கீடானது ஒரு விஞ்ஞானமாகக் (Accounting as a Science) கருதப்பட முடியும்.


**(05) சமூக விஞ்ஞானமொன்றாகக் கணக்கீடு**

மனித நடத்தைகளுடன் தொடர்புடையவை சமூக விஞ்ஞானமாகக் கருதப்படுகின்றன. இவ்வகையில், கணக்கீடும் மனித நடத்தைகளுடனும், இந்நடத்தைகளுடன் தொடர்புடைய வணிக அமைப்புகளது செயற்பாடுகளுடனும் தொடர்புடையதாகக் காணப்படுவதனால், கணக்கீடும் ஒரு சமூக விஞ்ஞானமாகக் (Accouting as a social Science) கருதப்படுகின்றது.

**(06) சமூகத்தோற்றப்பாடகக் கணக்கீடு**

சிறந்த வணிக வாய்ப்புக்களையும், இலாபந்தரக்கூடிய தொழிற்துறைகளையும் கணக்கீடு முதலீட்டாளர்களுக்கு இனங்காட்டுகின்றது. இதன் காரணமாக, மக்களது தமது சேமிப்புக்களைச் சிறந்த முதலீடுகளில் ஈடுபடுத்துகின்றனர். இவ்வகையில், தொழிற்றுறைகளுக்கான முதலீடுகள் கிடைக்கப் பெறுவதனால் அத்துறைகள் விரிவாக்கம் பெறுவதுடன் அவற்றினது மொத்த உற்பத்தி அளவும், ஆற்றலும், இயலுமையும் அதிகரிக்கின்றன. மக்களுக்குக் கூடியளவு வேலைவாய்ப்புக்கள் கிடைக்கப் பெறுவதோடு தனிநபர் வருமானமும் அதிகரிக்கின்றது. இவ்விருத்திப்பாடுகள் மக்களது வாழ்க்கைத்தர உயர்வுக்கு ஏதுவாகின்றன. ஆகையால், கணக்கீடு ஒரு சமூகத்தோற்றப்பாடாக (Accounting as a Social Phenomenon)

**கணக்கீடு பற்றிய பொதுவான நோக்கு**




கணக்கியல் (Accountancy) என்பது, கணக்கீட்டினது விஞ்ஞான ரீதியானதும் முறைமை சார்ந்ததுமான அறிவினது பிரயோகமாக அமைகின்றது. கணக்கீட்டினை விடக் கணக்கியல் விசாலமானதாகும்.

**கணக்கீட்டின் முக்கியத்துவம்**
**Importance of accounting**

* சமூகத் தோற்றப்பாடொன்றாக அமைதல் (As a Social Phenomenon) இலாபகரமான துறைகளை முதலீட்டாளர்களுக்கு இனங்கட்டுவதனூடாக மேலும் மேலும் முதலீடுகளை ஈர்ப்பதனூடாக நாட்டினது பொருளாதார அபிவிருத்திக்கும் மக்களது வாழ்க்கைத்தர உயர்வுக்கும் கணக்கீடு உதவி செய்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* தகவல் மூலகமொன்றாக அமைதல் (As a Source of information) கணக்கீடு தகவல் வழங்கும் முறையொன்றாகும். இது முகாமைத்துவத்திற்கும் ஏனைய உள்ளக ஆட்களுக்கும் வெளியக ஆட்களுக்கும் வணிகம் பற்றிய முக்கிய தகவல்களை வழங்குகின்றது.

* கட்டுப்படுத்தல் செயன்முறையாக அமைதல் (As a mean of Control) வருமானம், செலவினம், சொத்துக்கள், பொறுப்புக்கள் தொடர்பான தகவல்களை முகாமைக்கு வழங்கி, முகாமையானது வளங்களை நெறிப்படுத்துவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் உதவுகின்றது.

**கணக்கீட்டின் வகைகள்**
**Types of Accounting**

கணக்கீடானது இரு பிரதான வகைகளாக வகைப்படுத்தப்படுகின்றது. அவையாவன.

(1) நிதிக்கணக்கீடு (Financial Accounting)
(2) முகாமைக்கணக்கீடு (Management Accounting)

**நிதிக்கணக்கீடு**
**Financial Accounting**

நிறுவனம் பற்றிய வரலாற்று நிதித்தகவல்களைப் (Historical Financial information) பிரதான வெளியகக் கட்சியினருக்கு வழங்கும் கணக்கீடாகும். பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைவாக பொழிப்பாக்கப்பட்ட (சுருக்கிய) வடிவத்தில் விசேடமான தகவல்கள், இக்கணக்கீட்டின் மூலம் வழங்கப்படுகின்றன. இக்கணக்கீடு கணக்கீட்டு நியமங்கள் மற்றும் சட்ட திட்டங்களுக்கு அமைவானதாகத் தயாரிக்கப்படுகின்றது. நிறுவனத்தினது இலாபகரத்தன்மை, நிதி நிலைமை, கடன் தீர்க்கும் ஆற்றல் போன்ற முக்கிய தகவல்களை நிதிக் கணக்கீட்டினூடாகத் தயாரிக்கப்படுகின்றது. இவை குறித்த கணக்ககாண்டு ஒரு முறை தயாரித்துக் சமர்ப்பிக்கபடும்.

**முகாமைக்கணக்கீடு**
**Management Accounting**

நிறுவனத்தினது இலக்கினை வெற்றிகரமாக அடைந்து கொள்வதற்கு முகாமைக்குத் தேவைப்படும் தகவல்களை வழங்கும் கணக்கீட்டு முறைமையாகும். இது உள்ளகத்தேவைகளுக்குரியதாகும். குறிப்பாக, உள்ளகத்திட்டமிடல், தீர்மானமெடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் நோக்கங்களுக்கான தகவல்களை வழங்குகின்றது. முகாமைக்கணக்கீட்டில் வழங்கப்படும் பெருமளவான தகவல்கள் எதிகாலத்துடன் தொடர்புடையவையாகக் காணப்படும்.

முகாமைக் கணக்கீட்டுடன் இணைந்தவொரு பகுதியாக (Integral Part) "கிரயக்கணக்கீடு" (Cost Accouting) அமைக்கின்றது. பொருட்கள் அல்லது சேவைகள் தொடர்பான கிரயங்களைக் கணிப்பீடு செய்து அவைபற்றிய தகவல்களை உள்ளகத் கட்சியினருக்கு வழங்கும் கணக்கீட்டு முறைமையாகக் கிரயக் கணக்கீடு கருதப்படுகின்றது.

நிதிக்கணக்கீட்டு மற்றும் கிரயக் கணக்கீட்டு அறிக்கைகளிலிருந்து திரட்டப்பட்ட நிதிசார் தகவல்கள் மேலும் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு முகாமைக்கணக்கீட்டினது தேவைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

**கணக்கீட்டினது நோக்கங்கள்**
**Objectives of Accounting**

(1) வணிகத்தினது தகவல் பயன்பாட்டாளர்களுக்கு நிதிசார் தகவல்களை வழங்குதல்.
(2) பொருளாதார வளங்களைக் கட்டுப்படுத்தலும் முகாமை செய்தலும்.
(3) பொருளாதார வளங்களைப் பயன்படுத்துவதுடன் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளல்.
(4) பொருளாதார செயற்பாடுகளில் பெறுபேறுகளை மதப்பீடு செய்தல். (இலாப நட்டங்களின் கணிப்பீடு)
(5) சட்டத்தேவைகளைப் பூர்த்தி செய்தல்.
(6) வணிக நிறுவனத்தினது முன்னேற்றங்களை அறிந்து கொள்ளல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கணக்கீட்டுச் செயற்பாடுகள் / செயன்முறைகள்**
**Accounting process**

* இனங்காணல் - Identification
* பதிவு செய்தல் - Recording
* வகைப்படுத்தல் - Classification
* பொழிப்பாக்கல் / சுருக்குதல் - Summarization
* வியாக்கியானம் / விமர்சனம் - Interpretation
* தொடர்பாடல் - Comunication
* சமர்பித்தல் - Presentation

## CIMA கற்கைநெறியை பயில சிறப்பான வழிகாட்டலை வழங்கும் Imperial கல்லூரி

உலகளாவிய ரீதியில் வணிகத்தலைவர்களை உருவாக்குவதில் வியாபித்திருக்கும் CIMA கற்கை நெறியை இலங்கையிலும் பல மாணவர்கள் தமது தொழில்சார் கற்கைநெறியாக தெரிவு செய்கின்றனர். ஐக்கிய இராச்சியத்திற்கும் அடுத்தபடியாக CIMA கற்கை நெறியில் அதிக மாணவர்களைக் கொண்டுள்ள நாடு இலங்கையே ஆகும். உலகளாவிய ரீதியில் சவால்களை சிறப்பாக எதிர்கொள்ளும் வணிகத்தலைவர்களை உருவாக்கும் CIMA கற்கை நெறியினை சிறப்பாக வழங்குவதில் Imperial கல்லூரி தனக்கென தனியிடம் வகிக்கின்றது. CIMA கற்கை நெறியை வழங்குவதில் இலங்கை காலாகாலமாக தனிச்சிறப்புப் பெற்றுள்ளது. உலகளாவிய ரீதியில் ஒரே பரீட்சை முறையினை பின்பற்றும் CIMA கற்கை நெறியில் ஒவ்வொரு ஆண்டிலும் அதிக புள்ளிகளை பெறுகின்ற சாதனை மாணவர்களை உருவாக்குவதில் இலங்கைக்கு தனியிடம் இருக்கின்றது. CIMA பயிற்றுவிப்பதில் அனுபவமிக்க நிறுவனமாக கடந்த 25 ஆண்டுகாலமாக Imperial கல்லூரி தடம் பதித்துள்ளது.

Imperial கல்லூரியின் தனிச்சிறப்பு யாதெனில் முற்றுமுழுதான அர்ப்பணிப்பான பணியே ஆகும். CIMA கற்கை நெறியானது முழுக்க முழுக்க தலைமைத்துவத்தையும் முகாமை அறிவினையும் வணிக அறிவினையும் உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. இதனைக் கற்பிக்கும் போதும் இத்தகைய விடயங்கள் பிரயோக ரீதியான அணுகுமுறைகளைக் கொண்டு வழங்கப்படல் அவசியமாகும். Imperial கல்லூரி பிரயோக ரீதியான விரிவுரை முறையினை பின்பற்றுவதோடு மாணவர்களை பிரயோக ரீதியில் வணிகச் சவால்களை எதிர்கொள்ளத் தக்கவர்களாக மாற்றுகின்றது. வெறுமனே கோட்பாட்டு அறிவு, பாடப்பரப்புக்களில் மாத்திரம் மாணவர்களை வரையறுத்து விடாது மாணவர் ஒரு தொழிற்சூழலில் தம்மை முதன்மைப்படுத்தக்கூடியவாறான வழிகாட்டல்களை Imperial கல்லூரி வழங்குகின்றது. ஒவ்வொரு ஆண்டிலும் இடம்பெறும் CIMA வின் பல்வேறு கட்டத்திலான பரீட்சைகளில் இலங்கையில் பல மாணவர்கள் உயர் புள்ளிகளைப் பெற்று சாதனை படைக்கின்றனர். இதற்கும் Imperial கல்லூரி தமது அளப்பரிய பங்கினை வழங்குகின்றது. சாதனை மாணவர்களில் பெரும்பாலான மாணவர்களை உருவாக்கிய பெருமை Imperial கல்லூரிக்கு உண்டு. இதற்கு Imperial கல்லூரியின் அனுபவமிக்க விரிவுரையாளர்கள் குழாமே காரணமாகும். இலங்கையில் CIMA விரிவுரையாளர்களில் முதன்மை பெற்று விளங்கும் கஜேந்திர லியனராச்சி மற்றும் பிரவீந்த் இராஜரட்ணம் ஆகியோரைக் குறிப்பிடலாம். இவ்விருவரும் உலகின் முதன்மை CIMA விரிவுரையாளருக்குரிய CIMA விருதுகளை பெற்றிருப்பதோடு பிரயோக ரீதியில் பாடப்பரப்புக்களை விளக்குவதனூடாக மாணவர்களை சந்தேகமின்றி பரீட்சையில் மிளிர வழிவகுக்கின்றனர். Imperial கல்லூரியின் இயக்குனர்களான பிரவீந்த் இராஜரட்ணம், சிவபாஸ்கரன் ஆகியோர் இலங்கையில் மட்டுமல்லாது பங்களாதேஷ், இந்தியா, நேபாளம் போன்ற நாடுகளில் விரிவுரை அனுபவங்களை கொண்டிருக்கின்றனர். ஏனைய விரிவுரையாளரும் வணிகத் தொழிற் சூழலில் அனுபவமிக்கவர்களாக இருப்பதால் எல்லாப் பாடப்பரப்புக்களையும் நடைமுறை வணிகங்களுக்கு ஏற்ற வகையில் எளிமையாகவும், செம்மையாகவும் வழங்குகின்றனர். இதன் காரணமாகவே Imperial கல்லூரி 100 வீதம் சித்தியெய்தும் வீதத்தைக் கொண்டுள்ளது.

Imperial கல்லூரி CIMA நிறுவனத்தின் தரப்பங்காளர் நிறுவனமாக காணப்படுவதோடு தற்போது Exclusive Quality Partner விருதினையும் கொண்டுள்ளது. இதற்கான காரணம் CIMA கற்பித்தலில் Imperial கல்லூரியின் தனித்துவமான பாணியே ஆகும். சிறந்த கற்றல் மூலங்களையும், சிறந்த விரிவுரைகளையும், சிறந்த மீட்டல் பயிற்சிகளையும் ஒழுங்கான நேர அட்டவணையின் கீழ் பூர்த்தி செய்யப்படுவதோடு மாணவர்களுக்கான தொழில் நேர்காணல்களை சிறப்பாக எதிர்கொள்வதற்கான பயிற்சியும் வழங்கப்படுகிறது. இதன்மூலம் தமது மாணவர்களை தொழிற்துறையில் தனித்துவமிக்க தலைவர்களாக உருவாக்குவதை மையப்படுத்தி Imperial கல்லூரி இயங்கி வருகிறது.

வணிகச் சூழலில் சிறந்த தொழிலைப் பெற CIMA கற்கை நெறியை தெரிவு செய்திருந்தால் அதனை சிறந்த கற்கை நிலையத்தில் பயில வேண்டுமல்லவா? CIMA கற்கை நெறியை அனுபவத்துடனும், பிரயோக ரீதியிலும், வழங்கும் Imperial கல்லூரியில் இணைவதனூடாக நீங்களும் வெற்றிகரமாக வணிகத்தலைவராக முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



I.L.A. சலாம்
B.B.A (Spl)
சிரேஷ்ட்ட கணக்கீட்டு ஆசிரியர்
மட்டு அம்பாறை மற்றும் மாவனல்லை

The MCQ
Quiz Bank

1. பின்வருவனவற்றில் கணக்கீட்டு செயல்முறையைப் பாதிக்காதது எதுவாகும்.
   (a) கணக்கீட்டு எண்ணக்கருக்கள்
   (b) கணக்கீட்டு நியமம்
   (c) கணக்கீட்டுச் சூழல் காரணிகள்
   (d) பங்குச் சந்தையின் நடைமுறைத் தகவல்கள்
   1. (a)யும் (b)யும் மட்டும்
   2. (a)யும் (b)யும் (c)யும் மட்டும்
   3 (a)யும் (d)யும் (c)யும் மட்டும்
   4. (a)யும் (b)யும் (d)யும் மட்டும்
   5. எல்லாம்

2. பின்வரும் கொடுக்கல் வாங்கல்களில் எந்தக் கொடுக்கல் வாங்கல் கணக்கீட்டுச் சமன்பாட்டைப் பாதிக்கும்?

| பொறுப்பு | + உரிமை | = சொத்து |
|---|---|---|
| மீதி ரூபா 700000 | + ரூபா 500000 | = ரூபா 1200000 |
| ரூபா (40000) | + ரூபா 40000 | = |

(அ) உரிமையாளர் கடன்கொடுத்தோருக்குத் தனது சொந்தப் பணத்தைக் கொடுத்துத் தீர்த்தார்.
(ஆ) அட்டுறு செலவு பதிவு செய்யப்பட்டது
(இ) பெற்ற கழிவு பதிவு செய்யப்பட்டது

1. (அ)அல்லது
2. (ஆ) அல்லது (இ)
3. (அ) அல்லது (இ)
4. (அ)மட்டும்
5. (அ) அல்லது (ஆ) அல்லது (இ)

3. ஒரு தனிவியாரியின் ஆரம்ப உரிமை ரூபா 10,000 மாகவும் இறுதி உரிமை ரூபா 4500ஆகவும் இருந்தது. குறித்த வருடகாலத்துக்குள்ளே உரிமையாளர் மேலும் ரூபா 4000 மூலதனமிட்டதுடன் ரூபா 8000 பற்றியுள்ளார். குறித்த வருடத்தில் அவருடைய இலாபம் அல்லது நட்டம் எவ்வளவெனக் கணிக்க.
   1. ரூபா 9500 நட்டம்
   2. ரூபா 1500 நட்டம்
   3. ரூபா7500 இலாபம்
   4. ரூபா 17500 இலாபம்
   5. ரூபா 1500 இலாபம்

4. இரு கொடுக்கல் வாங்கல்கள் கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்படுத்திய தாக்கம் காட்டப்படுகிறது,

| | உரிமை | + | பொறுப்பு | = சொத்து |
|---|---|---|---|---|
| | ரூபா 150000 | + | ரூபா 50000 | = ரூபா 200000 |
| 1. | ரூபா 60000 | + | -- | = ரூபா 60000 |
| 2. | (ரூபா 40000) | + | -- | = ரூபா 40000 |

   1. மேலதிக மூலதனமிடப்பட்டது. காசு பற்றிக்கொள்ளப்பட்டது
   2. மேலதிக மூலதனமிடப்பட்டது. நட்டம் ஏற்பட்டது
   3. ஒரு வகையான சொத்து அதிகரித்தது பொறுப்பு குறைந்தது
   4. பொறுப்பு அதிகரித்தபோது சொத்தும் அதிகரிதததது
   5. தேறிய இலாபம் அதிகரித்தது மொதத இலாபம் குறைந்தது

5. நிறுவனமொன்றில் குறிப்பிட்ட காலத்திற்கான செயற்பாட்டு பெறுபேற்றினை பின்வருவனவற்றில் எது காட்டுகின்றது?
   (1) உழைக்கப்பட்ட இலாபம்
   (2) மொத்த சொத்துக்கள்
   (3) உரிமையாண்மையும் பொறுப்புக்களும்
   (4) கடன்கள்
   (5) காசுப் பாய்ச்சல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. கம்பனியொன்று 2011.04.01 இல் ரூ. 800,000 க்கு உபகரணமொன்றைக் கடனுக்குப் கொள்வனவு செய்தது. 2012.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்காக இவ் உபகரணத்திற்கு வருடாந்தம் 10% பெறுமானத் தேய்விடப்பட்டது. கீழே தரப்பட்டுள்ள சமன்பாடுகளில் எது மேற்கூறப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் தாக்கத்தைக் காட்டகின்றது?

| சொத்துக்கள் | = | பொறுப்புக்கள் | + | உரிமையாண்மை |
|---|---|---|---|---|
| (1) +800,000 | = | +880,000 | | - 80,000 |
| (2) +800,000 | = | +720,000 | | +80,000 |
| (3) +720,000 | = | +800,000 | | - 80,000 |
| (4) +720,000 | = | +720,000 | | - |
| (5) +720,000 | = | + - | | +720,000 |

7. கீழே தரப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பகுதி / பகுதிகளில் எது / எவை குறித்த காலத்துக்காக தயாரிக்கப்படுகின்றது?

A – ஐந்தொகை B – வருமானக் கூற்று
C – உரிமையாண்மை மாற்றத்திற்கான கூற்று D – காசுப்பாய்ச்சல் கூற்று

(1) A மாத்திரம் (2) C மாத்திரம் (3) A, C ஆகியன மாத்திரம்
(4) B, C, D ஆகியன மாத்திரம் (5) A, B, D ஆகிய மாத்திரம்

8. குறித்த ஒரு கணக்காண்டு காலத்தில் பற்றுக்களை மேற்கொள்ளாத நிலையிலும் மேலதிக மூலதனத்தை இடாத நிலையிலும் கீழே தரபபட்ட எந்நிலைமைகளில் நிறுவனம் இலாபத்தை நிச்சயமாகக் காட்டும்?

(1) குறித்த காலத்தில் மொத்த சொத்துக்கள் அதிகரிக்கும் போது
(2) குறித்த காலத்தில் மொத்த பொறுப்புக்கள் அதிகரிக்கும் போது
(3) குறித்த கால முடிவில் மொத்த சொத்துக்கள் மொத்த பொறுப்பினை விட அதிகமாக இருக்கும் போது
(4) குறித்த கால முடிவில் தொழிற்படு மூலதனம் குறைவடையும் போது
(5) மொத்த சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பானது மொத்த பொறுப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பினை விடக் கூடுதலாகக் காணப்படும்போது

9. கீழே தரப்பட்டுள்ள கணக்கீட்டுச் சமன்பாடுகளில் எது சரியானது?

A தேறிய சொத்துக்கள் = உரிமையாண்மை
B சொத்துக்கள் + வருமானங்கள் = உரிமையாண்மை + பொறுப்புக்கள் + செலவுகள்
C சொத்துக்கள் + செலவுகள் = உரிமையாண்மை + பொறுப்புக்கள் + செலவுகள்
D தேறிய சொத்துக்கள் = மொத்த சொத்துக்கள் - நடைமுறையற்ற பொறுப்புக்கள் - நடைமுறைப் பொறுப்புகள்

(1) B, C ஆகியன மாத்திரம் (2) B, C, D ஆகியன மாத்திரம்
(3) A, C, D ஆகியன மாத்திரம் (4) A, B, C ஆகியன மாத்திரம்
(5) A, B, C, D ஆகிய எல்லாம்

10. தனி வியாபாரம் ஒன்றின் கீழ் தரப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் 2012.03.31 ல் முடிவடைந்த வருடத்திற்கான உழைக்கப்பட்ட இலாபம் என்ன?
2011.04.01 இல் உள்ளபடியான உரிமையாண்மை ரூ. 500000 ஆகும்.
2012.03.31 இல் மொத்தச் சொத்துக்களும், மொத்தப் பொறுப்புக்களும் முறையே ரூ.800,000, ரூ.200,000 ஆகும்.
இக்கணக்காண்டு காலத்தினுள் மேற்கொண்ட பற்றுக்கள் ரூ.30,000

(1) ரூ. 100000 (2) ரூ. 130000 (3) ரூ. 160000
(4) ரூ. 500000 (5) ரூ. 600000

✦ **பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 11ம், 12ம் வினாக்களுக்கு விடை தருக.**

நிறுவனமொன்றின் 31.03.2012ல் உள்ளவாறான ஐந்தொகையிலிருந்த தேர்ந்தெடுத்த உருப்படிகளும், அத்தினத்தில் முடிவடைந்த வருடத்திற்கான இலாபமும் கீழே தரப்பட்டுள்ளன.

| விடயங்கள் | ரூ. |
|---|---|
| மொத்தச் சொத்துக்கள் | 8 200 |
| மொத்த பொறுப்புக்கள் | 4 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| மூலதனம் | 3 500 |
| வருடத்திற்கான இலாபம் | 1 000 |

11. 31 மார்ச் 2012 இல் உள்ளவாறான உரிமையாண்மையின் தொகை யாது?
(1) ரூ. 1 000 (2) ரூ. 4 000 (3) ரூ. 4 200
(4) ரூ. 4 500 (5) ரூ. 8 200

12. 31 மார்ச் 2012 ல் முடிவடைந்த வருடத்திற்கான தேறிய சொத்துக்கள் மீதான மொத்த வருவாய் எது?
(1) ரூ. 1 000 (2) ரூ. 4 000 (3) ரூ. 4 200
(4) ரூ. 4 500 (5) ரூ. 8 200

13. பின்வருவனவற்றுள் எது சொத்தொன்றின் இன்றியமையாத பண்பாகும்?
1. வரையறுக்கட்ட பயன்தரு ஆயுட்காலத்தை கொண்டிருத்தல்
2. உருவகத்தன்மை
3. எதிர்கால கொடுக்கல் வாங்கல்களிலிருந்தும் நிகழ்வுகளிலும் இருந்து எழுதல்
4. எதிர்கால பொருளாதார நன்மைகளின் உள்ளடக்கம்
5. பொருளாதார நன்மைகள் மீதான கட்டுப்பாடு எப்போதும் சட்ட உரிமைத்துவத்திலிருந்து தோன்றுகின்றது

14. குறிப்பிட்ட வருடத்திற்குள்ளே நடைமுறையல்லாச் சொத்துக்கள் ரூபா 200000த்தால் அதிகரித்தது நடைமுறைச் சொத்துக்கள் ரூபா50000த்தால் குறைவடைந்துள்ளது. நடைமுறையல்லாப் பொறுப்புரூபா 80000த்தால் அதிகரித்துள்ளது நடைமுறைப்பொறுப்புரூபா 30000த்தால் குறைவடைந்துள்ளது. வருடத்திற்குள் செய்த பற்றுக்களுடன் ஒப்பிடும்போது இட்ட மேலதிக முதலீடு ரூபா 40000 குறைவாகும். வருடத்தின் இலாபம் அல்லது நட்டம் என்ன?
1) ரூபா 80000 இலாபம் 2) ரூபா 240000 இலாபம் 3) ரூபா 60000 இலாபம்
4) ரூபா 140000 நட்டம் 5) ரூபா 140000 இலாபம்

15. இரட்டைப்பதிவு கணக்குப்பதிவு முறையில் விரிவாக்கப்பட்ட ஐந்தொகைச் சமன்பாட்டைக் குறிப்பிடுக
(1) சொத்து + செலவு = பொறுப்பு + வருமானம் - மூலதனம்
(2) சொத்து - செலவு = பொறுப்பு + வருமானம் - மூலதனம்
(3) சொத்து - செலவு = பொறுப்பு + வருமானம் + மூலதனம்
(4) சொத்து + செலவு = பொறுப்பு + வருமானம் + மூலதனம்
(5) சொத்து + செலவு + நட்டம் = பொறுப்பு + வருமானம் + மூலதனம்

✦ 16 – 20 வயைரயிலான வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.

16. சொத்தில் இருந்து கிடைக்கும் எதிர்கால பொருளாதார அனுகூலங்கள் 4 தருக.
.................................................................................................................
.................................................................................................................
.................................................................................................................
.................................................................................................................

17. ஐந்தொகையின் அடிப்படையான அம்சங்களையும் வருமானக் கூற்றின் அடிப்படையான அம்சங்களையும் குறிப்பிடுக.
ஐந்தொகை :.......................................................................................
வருமானக் கூற்று : ...............................................................................

18. உரிமைக்கும், பொறுப்புக்குமிடையிலான ஒற்றுமையையும், வேற்றுமையையும் தருக.
ஒற்றுமை : ........................................................................................
வேற்றுமை : ......................................................................................

19. வருமானக் கூற்றுக்கள் கீழ்வரும் பண்புரீதியான கணக்கீட்டுத் தன்மைகளைக் கொண்டிருக்கிறதா? இல்லையா? என்பதை குறிப்பிட்ட இடைவெளியில் (✓) (✗) என்ற அடையாளத்துடன் சுட்டிக்காட்டுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பண்புரீதியான தன்மை | கொண்டுள்ளது | கொண்டிருக்கவில்லை |
|---|---|---|
| A. நம்பகத்தன்மை | | |
| B. பொருத்தமான தன்மை | | |
| C. ஒப்பீட்டுத்தன்மை | | |
| D. விளங்கி கொள்ளக்கூடிய தன்மை | | |

20. 01.04.2009 இல் வணிக நிறுவனமொன்று தொடங்கப்பட்டது,

| விடயம் | 31.03.2012 | 31.03.2011 | 31.03.2010 |
|---|---|---|---|
| வங்கி மீதி | 14,500 | 16,000 | 10,000 |
| சில்லறை காசு மீதி | 3,000 | 2,000 | 2,000 |
| எழுதுகருவி இருப்பு | 2,000 | 2,500 | 1,500 |
| மொத்த சொத்துக்கள் | 19,500 | 20,500 | 13,500 |

இவ்வணிகத்தில் ஒவ்வொரு வருட இறுதியிலும் எவ்வித பொறுப்பினையும் கொண்டிருக்கவில்லை.

(a) இலாபம் அல்லது நட்டம் 31.03.2011 இல்.

..........................................................................................................................

(b) 31.03.2012 இல் உரிமையாண்மை யாது?

..........................................................................................................................

உலகத்தரம் வாய்ந்த உயர் கல்வித் தகமைகளை வழங்கும்

**NORTHSHORE COLLEGE OF BUSINESS & TECHNOLOGY**

மாணவர்கள் இக்கல்லூரியில் Engineering துறையின் கீழ் பின்வரும் பாடநெறிகளையும்

- BEng (Hons)/ MEng Electrical and Electronic Engineering (BEng 3 Years; MEng 4 years)
- BEng (Hons)/ MEng Civil Engineering (BEng 3 Years; MEng 4 years)

Information Technology துறையின் கீழ் பின்வரும் பாடநெறிகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

- BSc (Hons) Software Engineering (3 Years)
- BSc (Hons) Computer Science (3 Years)
- BSc (Hons) Computing (3 Years)
- BSc (Hons) Business Information Technology (3 Years)

Business Management துறையின் கீழ் பின்வரும் பாடநெறிகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

- BSc (Hons) Management with Information Systems (3 Years)
- BSc (Hons) Logistics and Transport Management (3 Years)
- BSc (Hons) Human Resource Management (3 Years)
- BSc (Hons) Business Management (3 Years)
- BSc (Hons) Marketing (3 Years)

மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
**Northshore College of Business & Technology,**
141, சேர்ச் ரோட், கொழும்பு 15.
தொலைபேசி : +94 11 4369092.
மின்னஞ்சல் : info@northshore.lk இணையம் : www.northshore.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



I.L.A. சலாம்
B.B.A (Spl)
சிரேஷ்ட்ட கணக்கீட்டு ஆசிரியர்
மட்டு அம்பாறை மற்றும் மாவனல்லை

ecway

1. அருண், சுரேஷ் ஆகியோர்களது பங்குடமையில் விமல் ஒரு பங்காளராக 2011 ஏப்ரல் 01 இல் பங்காளராகச் சேர்ந்தபோது பின்வரும் தகவல்கள் தரப்பட்டிருந்தன.

i. விமல் பங்குடமையில் சேர்ந்தபோது பின்வரும் நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.:

- பங்காளர்கள் இலாப நட்டங்களை சமமாகப் பகிர்வு செய்கின்றனர்.
- பங்காளர்கள் மூலதன வட்டி பெறுவதற்கு உரித்துடையவர்களில்லை.
- அருண், சுரேஷ், விமல் ஆகியோர் மாதாந்தம் முறையே ரூ.5000, ரூ.3000, ரூ.2000 சம்பளம் பெறுவதற்கு உரித்துடையவர்களாவர்.
- பங்காளர்களினால் வழங்கப்பட்ட கடன்களுக்கு வருடாந்தம் 10% வட்டி செலுத்தப்படல் வேண்டும். இத்தினத்திற்கு முன்னராகப் பெறப்பட்ட கடன்களுக்கும் இப்புதிய வட்டிவீதம் பொருத்தமானதாகும்.
- விமல் தனது மூலதனத்தை பின்வரும் கொடுப்பனவுகள் மூலமாக பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
  - வியாபாரத்திற்குக் காசாக ரூ.200 000
- 2011 ஏப்ரல் 01 இல் பங்குடமையின் நன்மதிப்பு ரூ. 300 000 ஆக மதிப்பீடு செய்யடபடல் வேண்டும். ஆனால் பேரேட்டில் நன்மதிப்புக் கணக்கு பேணப்படுவதில்லை.
- 2011 ஏப்ரல் 01 இல் நிலத்தின், முன்கொண்டு வரும் தொகையானது ரூ. 160000 இனால் அதிகரிக்கப்படல் வேண்டும்.
- நன்மதிப்பும், நிலத்தின் முன்கொண்டுவரும் தொகையின் அதிகரிப்பும் பங்காளர்களின் மூலதனக் கணக்குகள் ஊடாகச் சீராக்கப்படல் வேண்டும்.
- 2011 ஏப்ரல் 01 இல் வியாபாரக் கடன்பட்டோரிடமிருந்து ஐயக்கடன்களுக்காக ரூ.15000 ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.

ii. மேலே ஏற்றுக்கொண்டதன் பிரகாரம் 2011 ஏப்ரல் 01 இல் விமல் காசை கொண்டுவந்ததுடன் விமலினால் கொண்டுவரப்பட்ட காசு மாத்திரமே இவரின் மூலதனமாகக் கணக்கிடப்பட்டிருந்தது. சுரேஷ் இற்குச் சொந்தமாக கட்டடத்தை பங்குடைமை மாதாந்தம் ரூ. 7500 வாடகை செலுத்திப் பங்குடைமை வியாபாரத்தை நடத்துவதற்காகப் பயன்படுத்தியது.

iii. 2012 மார்ச் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் விமல் வியாபாரத்தில் சேர்ந்தபோது ஏற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனைகளை கருத்திற் கொள்ளாமல் தயாரிக்கப்பட்டிருந்தது. வருடத்திற்கான இலாபம் அருண், சுரேஷ் ஆகியோர்களுக்கிடையிலிருந்த முன்னிருந்த உடன்படிக்கையினடிப்படையில் இவ்விருவருக்குமிடையில் மாத்திரம் பகிர்வு செய்யப்பட்டிருந்தது.

iv. 2012 மார்ச் 31 இல் உள்ளபடியான ஐந்தொகை

| | |
|---|---|
| சொத்துக்கள் | ரூ.'000 |
| பொறியம் உபகரணமும் | 1340 |
| முதலீடு | 400 |
| நடைமுறைச்சொத்துக்கள் | 760 |
| மொத்தச் சொத்துக்கள் | 2500 |
| மூலதனக் கணக்குகள் : அருண் | 800 |
| சுரேஷ | 600 |
| விமல் | 200 |
| நடைமுறைக் கணக்குகள் : அருண் | 30 |
| சுரேஷ | 160 |
| விமல் (வாவ) | (20) |
| கடன் (சுரேஷ) | 500 |
| நடைமுறைப் பொறுப்புகள் | 230 |
| உரிமையாண்மையும் மொத்தப் பொறுப்புகளும் | 2500 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

v. 2011 ஏப்பிரல் 01 இல் சுரேஷிடமிருந்து வருடாந்தம் 20% வட்டிக்குக் கடன் பெறப்பட்டது.

vi. ஐந்தொகையில் காட்டப்பட்டுள்ள நடைமுறைச் சொத்துக்களில் உள்ளடக்கியுள்ள ரூ.5000 கிரயமுள்ள, சரக்கிருப்புக்கள் 2012 மார்ச் 30 இல் சேதமாக்கப்பட்டிருந்தன.

vii. பங்காளர்களின் நடைமுறைக் கணக்குகள்.

| | அருண் ரூ. | சுரேஷ ரூ. | விமல் ரூ. | | அருண ரூ | சுரேஸ் ரூ | விமல ரூ |
|---|---|---|---|---|---|---|---|
| மீதி கீ.வ. 2011.04.01 | 20000 | 10000 | | காசு 2011.04.01 | | 10000 | |
| பற்றுக்கள் | 250000 | 20000 | 20000 | சம்பளங்கள் | 60000 | | |
| | | | | மூலதன வட்டி | 80000 | 60000 | |
| | | | | இலாபப் பங்கு | 165000 | 110000 | |
| | | | | கடன்வட்டி | | 100000 | |
| மீகி.கீ.செ. 2012.03.31 | 35000 | 160000 | | வாடகை | | 90000 | |
| | | | | மீகி கீ.செ. 2012.03.31 | | | 20000 |
| | 305000 | 370000 | 20000 | | 305000 | 370000 | 20000 |
| மீதி.கீ.வ. 2012.04.01 | | | 20000 | மீதி கீ.வ. 2012.04.01 | 35000 | 160000 | |

**வேண்டப்படுவது**

1. அருண், சுரேஷ் ஆகியோருக்கிடையில் காணப்பட்ட பங்குடைமை உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த 4 உடன்படிக்கை விதிகள்.
2. நன்மதிப்பை சீராக்குவதற்கும் சொத்துக்களின் முன் கொண்டுவரும் தொகையில் எழுந்த மாற்றங்களை பதிவிடுவதற்கும் தேவையான நாட்குறிப்புப் பதிவுகள்
3. 31.03.2012 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாபம்.
4. 31.03.2012 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாபநட்ட பகிர்வுக்கூற்று.
5. தேவையான சீராக்கங்களை மேற்கொண்டதன் பின்னரான 2012 மார்ச் 31 இல் உள்ளபடியான அருண், சுரேஷ், விமல் ஆகியோரது பங்குடைமையின் ஐந்தொகை.

02. பின்வருவன மேசை உற்பத்தியாளர்களுடைய 31.03.2012ல் முடிவடைந்த ஆண்டுக்கான தகவல்களாகும்.

- உற்பத்தி -1000 மேசைகள்
- விற்பனை -900மேசைகள்
- பயன்படுத்திய பலகை -6000சதுர மீற்றர்
- ஒரு மேசைக்கான நேர்க்கூலி ரூபா 3610
- வருடத்திற்கான மேந்தலைக்கிரயம்
  - உற்பத்திக்கு ரூபா 400000
  - உற்பத்தியல்லாத ரூபா 300000
- இருப்புக்கள் FIFO முறையில் விநியோகிக்கப்பட்டது
- வருடத்திற்குள்ளே 6150 சதுர மீற்றர் பலகை ஒரு சதுரமீற்றர் ரூபா 500 வீதமாகக் கொள்வனவு செய்யப்பட்டது
- 01.04.2011ல் இருப்பு
  - 100 சதுரமீற்றர் பலகை ஒரு சதுர மீற்றர் ரூபா 400 வீதமாக
  - 80 மேசைகள் உற்பத்திக்கிரயம் ரூபா 5200வீதமாக
- 50 சதுரமீற்றர் பலகை 31.03.2012ல் தீயினால் சேதமடைந்தது.
- விற்பனை விலை ஒரு மேசைக்கு ரூபா 10000

**தேவையானவை**

1. வருடத்திற்கான மொத்த உற்பத்திக்கிரயம்
2. வருடத்திற்கான விற்பனைகளின் கிரயம்
3. 31.03.2012ல் முடிவடைந்த வருடத்திற்கான வருமானக் கூற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. பிரியங்கா கம்பனியில் 31.03.2012ல் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக்கணக்கு மீதி ரூபா 100000 ஆகும். பின்வருவன நிதிக்கூற்றுத் தயாரிப்புத் தெடர்பில் கண்டுபிடிக்கப்பட்டன.

1. விற்பனை நாளேடு ரூபா 4000 குறைவாகக் கூட்டப்பட்டிருந்தது
2. கடன்பட்டோர் பட்டியல் கூட்டுத்தொகை ரூபா 2000 கூடுதலாகக் கூட்டப்பட்டிருந்தது
3. பத்தும் கம்பனியால் திருப்பியனுப்பப்பட்ட சரக்குகள் ரூபா 7000 புத்தகங்களில் விடப்பட்டிருந்தது
4. கடன்பட்ட மீதி கீர்த்தி கம்பனியின் ரூபா 5000 கடன்பட்டோர் பேரேட்டுக்கு கீர்த்திகம்பனிகணக்குக்கு மாற்றப்பட்டபோதும் இது பொதுப்பேரேட்டுக்கு மாற்றப்படவில்லை
5. சுனில் கம்பனியின் ரூபா 3000 மீதி கடன்பட்டோர் பேரேட்டில் பதிவழிக்கப்பட்டது. அது பொதுப்பேரேட்டுக்கு மாற்றப்படவில்லை
6. கடன்பட்ட சுனிமல் மீதி ரூபா 2500 கடன்பட்டோர் பேரேட்டுக்கு செலவுமீதியாகக் கொண்டுசெல்லப்பட்டது.
7. சிசிற கம்பனிக்குக் கடன்விற்பனை ரூபா 23500கடன்பட்டோர் பேரேட்டில் ரூபா 32500ஆகப் பதிவிடப்பட்டது
8. ஐயக்கடனுக்கான ஏற்பாடு கடன்பட்டோர் மீதியில் 10% 31.03.2012லும் ஏற்பாடு செய்யப்படவில்லை.

**தேவையானவை**

(1) கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக்கணக்கு
(2) 31.03.2012ல் ஐந்தொகையில் காட்டப்படவேண்டிய கடன்பட்டோர் மீதி
(3) திருத்திய கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியை கடன்பட்டோர் பட்டியல் மீதியுடன் சிராக்கும் கூற்று.

04. அ) நியூ லங்கா லிமிடட்01.04.2010ல் மென்பாகங்களுடன் கணனிகளை இறக்குமதிசெய்தது. அவைதொடர்பான விபரங்கள் பின்வயுருமாறு

| திகதி | விபரம் | கணனி | மென்பாக முறை |
|---|---|---|---|
| 01.04.2010 | கொள்வனவு விலை | 750000 | 400000 |
| | உள்கொண்டுவந்த செலவு | 35000 | |
| | சுங்கத்தீர்வையும் கையாளல் செலவுகளும் | 15000 | |
| | பொருத்துதல் நிறுவுதல் செலவுகள் | 8000 | |
| | பணிக்குழுவினரைப் பயிற்றுதல் | 15000 | |
| | (கணனிகளின் பயனுடைய ஆயுட்காலம் 5வருடங்கள் மென்பாகங்களின் பயனுடைய ஆயுட்காலம் இரு வருடங்கள் | | |
| | எஞ்சும் மீதிப் பெறுமானம் | 18000 | இல்லை |
| 31.03.2012 | மேம்படுத்தல் கிரயம் (பயனுடைய ஆயுட்காலம் கணனிகளுக்கு 2வருடங்களால் அதிகரிக்கது) | 110000 | |
| | புதிய மென்பாக முறை கொள்வனவு | | 500000 |
| | பயனுடைய ஆயுட்காலம் இரு வருடங்களுடன் பழைய முறை நீக்கப்பட்டது. | | |


**தேவையானவை**

(1) 01.04.2010ல் கணனி முறைக்கான சிரயம் (மென்பாகம் இல்லாமல்)
(2) 01.04.2011ல் கணனி முறையின் தேய்விடக்கூடிய பெறுமானம் (மென்பாகம் இல்லாமல்)
(3) 31.03.2012ல் முடிவடைந்த ஆண்டுக்கு கணனி முறையின் தேய்வு (மென்பாகங்களும் சேர)

எமது இதழ்கள் தொடர்பிலும், எமது புதிய முயற்சிகள் தொடர்பிலும் உங்களது காத்திரமான விமர்சனங்களை எமக்கு அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி,
தபாலில் : இல 03, சென் கில்டாஸ் வீதி, கொழும்பு 03.
மின்னஞ்சலில் : arivu.editor@gmail.com
தொலைபேசியில் : இதழாசிரியர் - 0719494227

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org